# ஆண்டறிக்கை
# 2012



இலங்கைப் பொதுப் பயன்பாடுகள்
ஆணைக்குழு

  

## இ.பொ.ப.ஆ பாதுகாப்பு, நம்பகத்தன்மை என்பனவற்றை உறுதிப்படுத்தல் மற்றும் நியாயமான விலையில் உட்கட்டமைப்பு சேவைகளை ஒழுங்குப்படுத்தும் நிறுவனம்

## உள்ளடக்கம்

### மேலோட்ட பார்வை


01. ஆணைக்குழு
02. ஆணைக்குழுவின் தகவல்கள்
03. ஆணைக்குழுவின் உறுப்பினர்கள்
04. தலைவரின் கூற்று
05. பணிப்பாளர் நாயகத்தின் கூற்று
07. மீளாய்வு


### செயல்பாடு


08. மின்சாரத் துறை
08. நுகர்வோர் பாதுகாப்பு
12. பொது ஆலோசனை
12. அரசாங்கத்திற்கு கொள்கைகள் தொடர்பான ஆலோசனைகளை வழங்கல்
12. உரிமம் வழங்கல்
14. மரபு ரீதியற்ற மீள் புதிப்பிக்கத்தக்க சக்தி துறை
15. இறுப்பனவு செயல்முறை
15. ஆய்வுகளும் மற்றும் கற்கைகளும்
19. ஒழுங்குவிதிகள்/விதிகள்/நடவடிக்கைமுறை/கோவை/செயல்முறைகள் மற்றும் நெறிகள்
21. பெற்றோலியத் துறை
23. ஏனைய செயற்பாடுகள்
23. மேற்பார்வைகள்
25. மனித வளங்கள்


### கண்ணோட்டம்


26. 2013 நிகழ்ச்சிகள்


### கணக்காய்வு


31. கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை
34. கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்


### கணக்கீடுகள்


37. நிதி கூற்றுக்கள் 2012




மேலதிக தகவல்களுக்கு
**www.pucsl.gov.lk**
பார்வையிடுக.

# தூர நோக்கும் செயற்பணியும்

## எமது தூர நோக்கு

நாட்டின் நிலையானதும் வரையறுக்கப்பட்டதுமான அபிவிருத்தி செயற்பாடுகளை மிகச் சிக்கனமான முறையில், அத்தியாவசிய உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் பயன்பாட்டுச் சேவைகளை அடைவதனை நோக்காகக் கொண்டு இலங்கை வாழ் அனைத்து மக்களுக்கும் மற்றும் அபிவிருத்திக்கான அனைத்து பங்காளிகளுக்கும் ஒரு சூழலை உருவாக்குதல் ஆகும்.

## எமது செயற்பணி

நியாயமானதும், நிலையானதுமான முறையில் தற்போதைய மற்றும் எதிர்கால பாவனையாளருக்கு பாதுகாப்பான, நம்பகத்தகுந்த மற்றும் நியாயமான விலையில் உட்கட்டமைப்பு சேவைகளை உறுதிசெய்யும் பொருட்டு, இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆனைக்குழுவின் செயல் நோக்கினை உள்ளடக்கிய அனைத்து பொதுப் பயன்பாடுகளையும் ஒழுங்குறுத்துதல் ஆகும்.

# மேலோட்ட பார்வை



## முக்கிய அம்சங்கள்

நுகர்வோர் பாதுகாப்பு

**425** முறைப்பாடுகள்

**21** சங்கங்கள்

பொது பங்களிப்புக்கள்

**02** ஆலோசனைகள்

உரிமம் வழங்குதல்

**58** உரிமங்கள்

**12** விலக்களிப்புக்கள்

ஆய்வுகளும் மற்றும் கற்கைகளும்

**09** செயற்பாட்டுத் திட்டங்கள்

பாதுகாப்பு

**26** மேற்பார்வைகள்

ஒழுங்குப்படுத்தல் கருவிகள்

**10** விதிகள் முதலியன

## இலக்குகள்

மின் பாவனையாளர்களின் பாதுகாப்பு
நியாயமான மின் இறுப்பனவுகள்
சக்தி சேமிப்பு, பாதுபாப்பு மற்றும் செயற்திறன்
தரமான மற்றும் நம்பகத் தன்மையான மின் வழங்கல்
நபர்கள் மற்றும் சொத்துக்களுக்கான மின் பாதுகாப்பு
அக்கரையுடைய தரப்பினருக்கான தகவல்கள்
போட்டித்தன்மையினை ஊக்குவித்தல்
கீழ் நிலைப்படுத்தப்பட்ட பெற்றோலிய உற்பத்திகளை ஒழுங்குப்படுத்தல்

# ஆணைக்குழு

இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவானது, மின்சாரம், பெற்றோல், மற்றும் நீர் துறைகளின் ஒழுங்குபடுத்தும் அம்சங்களில் நம்பகத்தன்மை உடையது. ஆணைக்குழுவின் குறிக்கோள்கள், செயற்பாடுகள் மற்றும் சட்டக் கட்டமைப்புக்கள் என்பன 2002 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் சட்டம் மற்றும் 2009 ஆம் ஆண்டு 20 ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்திற்கு அமைவாக வரையறுக்கப்பட்டுள்ளது. ஆணைக்குழுவின் நோக்கானது நாட்டின் நிலை பெறுதகு அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலின் வரையறைகளினுள் மிகவும் சிக்கனமான முறையில் அத்தியவசிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி வசதிகளுக்கும் மற்றும் பயன்பாட்டுப் பணி சார்ந்த சேவைகளுக்குமான பிரவேசத்தை சகல இலங்கை மக்களுக்கும் மற்றும் நாட்டின் அபிவிருத்திக்கான பங்காளிகளுக்கும் கிட்டச் செய்வதற்கான உகந்த சூழலை உருவாக்குதலாகும்.

2009 ஆம் ஆண்டு 20 ஆம் இலக்க மின்சார சட்டத்தின்படி, இலங்கை மின்சார துறையின் ஒழுங்குப்படுத்தியான ஆணைக்குழு, தனது கொள்த்திறனுக்கு ஏற்ப, தற்போது, அதன் முக்கிய பகுதிகளான மின் கட்டணங்கள் (இறுப்பனவு) மற்றும் சேவை கட்டணங்களின் நியாயத்தன்மை, மின்சார வழங்கலுக்கான போதுமான தரம் மற்றும் நம்பகத்தன்மை, உயிர்கள் மற்றும் உடைமைகளுக்கான மின் பாதுகாப்பு, மின் சக்தி சேமிப்பு மற்றும் பாதுகாப்பு, மின் சக்தித் துறையின் முதலீட்டின் போது செயல் திறன் மிக்க பாவனை மற்றும் அதனால் ஏற்படக்கூடிய சுற்றாடல் பாதிப்பினை குறைப்பதற்குறிய நடவடிக்கைகள், மின் பாவனையாளரின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தல், போட்டியினை ஏற்படுத்தக்கூடிய மின் சந்தை கட்டமைப்பினை உருவாக்கல் அத்துடன் அக்கரையுடைய தரப்பினருக்கு மின் கைத்தொழில் தொடர்பான தகவல்களை பரப்புதல் ஆகிய செயல்பாடுகளை மேற்கொள்ளல ஆகும்.

தற்போது, ஆணைக்குழு கீழ் நிலைப்படுத்தப்பட்ட பெற்றோலியத் துறையின் (உ+ம்: பெற்றோலிய வளங்களின் சுத்திகரிப்பு தொடக்கம் பெற்ரோலிய பொருட்களின் சில்லறை விற்பனை வரை) மறைமுக ஒழுங்குறுத்துனராகவும் செயற்படுகின்றது. அத்துடன் ஆணைக்குழுவானது மசகு எண்ணெய் மற்றும் உராய்வு நீக்கி சந்தைகளுடன் தொடர்புடைய அதிகாரிகளுக்கு கொள்கை மற்றும் ஒழுங்குப்படுத்தல் அம்சங்கள் சார்ந்த ஆலோசனைகளுடன் கூடய உதவிகளையும் வழங்குகின்றது.
2013 இல் உரிய சட்டங்கள் பாராளுமன்றத்தினூடாக நிறைவேறப்பட்டதும், ஆணைக்குழுவானது பெற்றோலியத்துறையில் அங்கீகரிக்கப்பட்ட கீழ் நிலைப்படுத்தப்பட்ட ஒழுங்கப்படுத்தியாக பங்கு வகிப்பதற்கு எதிர்ப்பார்த்துள்ளது.

இவ் அறிக்கையானது 2012 தை மாதம் 01 ஆம் திகதி முதல் 2012 மார்கழி 31 ஆம் திகதி வரையான காலப்பகுதியினுள் ஆணைக்குழுவினால் முன்னெடுக்கப்பட்ட செயற்பாடுகள் மற்றும் 2013 இல் ஆணைக்குழுவினால் திட்டமிடப்பட்ட செயற்பாடுகள் என்பவற்றை உள்ளடக்கியுள்ளது.

# ஆணைக்குழுவின் தகவல்கள்



## ஆணைக்குழுவின் பெயர்
இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு

## சட்டபூர்வ அந்தஸ்து
2002 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுச் சட்டத்தினால் ஸ்தாபிக்கப்பட்டது.

## 2012 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பணியாற்றிய ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் பற்றிய விபரம்:

| | |
|---|---|
| கலாநிதி ஜயதிஸ்ஸ த கொஸ்தா ஜ.ச | தலைவர் |
| கலாநிதி பந்துல பெரேரா | பிரதித் தலைவர் |
| பேராசிரியர் ராகுல அத்தலகே | அணைக்குழு உறுப்பினர் |
| திரு. சன்ஜய கமகே | அணைக்குழு உறுப்பினர் |
| திரு. பிரசாத் கல்ஹேன | அணைக்குழு உறுப்பினர் |

## பணிப்பாளர் நாயகம்
திரு. தம்மித்த குமாரசிங்க

## ஆணைக்குழுவின் செயலாளர்
திருமதி. ஜானகி எம் விதானகே

## பதிவு செய்யப்பட்ட அலுவலகம்
6வது மாடி, இ.வ. வர்த்தகக் கோபுரம்,
இல. 28, புனித மைக்கல் வீதி, கொழும்பு 03.
இலங்கை
மின்னஞ்சல்: info@pucsl.gov.lk
தொலை பேசி : +9411 239 2607
தொலை நகல் : +9411 239 2641
இணையத்தளம்: www.pucsl.gov.lk

## கணக்காய்வாளர்கள்
கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் திணைக்களம்

## வங்கியாளர்
இலங்கை வங்கி
1வது மற்றும் 2வது மாடி, இ.வ. வர்த்தகக் கோபுரம்,
இல. 28, புனித மைக்கல் வீதி,
கொழும்பு 03

# ஆணைக்குழுவின் உறுப்பினர்கள்



கலாநிதி ஜயதிஸ்ஸ த கொஸ்தா. ஜ.ச
தலைவர்



கலாநிதி பந்துல பெரேரா
பிரதித் தலைவர்



பேராசிரியர் இராகுல அட்டலகே
உறுப்பினர்



திரு. சன்ஜய கமகே
உறுப்பினர்



திரு. பிரசாத் கல்ஹேன
உறுப்பினர்



# தலைவரின் கூற்று



இலங்கைப் பொது பயன்பாடுகள் ஆணைக்குழு (ஆணைக்குழு) 2002 இல் ஆரம்பிக்கப்பட்டு, 2009 இன் 20 ஆம் இலக்க மின்சாரச் சட்டத்திற்கு அமைய தொடர்ச்சியான அதிகாரத்தினூடாக, மின்சாரக் கைத்தொழிலின் ஒழுங்குப்படுத்தியாக செயற்படுகின்றது. இ.பொ.ப.ஆ இலங்கையின் சக்தி சேவைகளின் முனனேற்றத்திற்காக இடைவிடாது பின்வரும் செயல்பாடுகளுக்கு முயல்கினறது; பொருத்தமான தரநிலை மற்றும் ஒழுங்கப்படுத்தல் என்பவற்றின் அபிவிருத்தியினூடான மின்சாரத் துறையின் முன்னேற்றமான செயற்பாடு, பாதுகாப்பு மற்றும் செயல்திறன் என்பவற்றிற்கு உத்திரவாதத்தினை அளித்தல் என்பனவாகும்.

2012 ஆம் ஆண்டு இ.பொ.ப.ஆ இற்கு ஒழுங்குப்படுத்தல் தலையீடு சார்பாக பல சவால்கள் மற்றும் வாய்ப்புக்கள் உருவாக்கப்பட்டது. ஆணைக்குழுவானது நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் மரபு ரீதியற்ற சக்தி கொள்முதல் கட்டணம் 2012 இற்கான அனுமதி போன்ற பகுதிகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தினை ஏற்படுத்தியுள்ளது. அதிகரித்து செல்லும் பெற்றோலிய விலை மற்றும் இலங்கை மின் உற்பத்திக்காக இறக்குமதி செய்யப்பட்ட படிம எரிப்பொருட்களில் மிகையாக நம்பிகையாயிருத்தல் பாரிய சுமையினை அரசாங்கத்திற்கும் மற்றும் பாவனையாளருக்கும் ஏற்படுத்தியுள்ளது. இச் சுமையானது அண்மை ஆண்டுகளில் மின் கட்டண நிர்ணயத்தின் போது கடுமையான தாக்கத்தினை உருவாக்கியுள்ளது. இலங்கையின் தேசிய சக்தி கொள்கையானது 2016 ஆம் ஆண்டில் 10% சக்தியானது மரபுரீதியற்ற புதிப்பிக்கதக்க சக்தி மூலங்களினூடாக பிறப்பாக்கத்திற்கான இலக்கினை உருவாக்கியள்ளது. இது தற்போதுள்ள 1000 மெ.வோ மரபு ரீதியற்ற நீர் வலு உற்பத்தியினை விட மேலதிகமானதாகும். இதன் விளைவாக, ஆணைக்குழுவானது சக்தித் துறையின் தனது ஒழுங்குப்படுத்தல் தலையீட்டினூடாக மரபு ரீதியற்ற புதிப்பிக்கதக்க சக்தியினை மேம்படுத்துவதற்கு ஆழ்ந்த உறுதியுடனுள்ளது. 2012 ஆம் ஆண்டு ஆணைக்குழுவானது வெற்றிகரமான பொது ஆலோசனை செயன்முறையினை மேற்கொண்டு புதியதொரு மரபு ரிதியற்ற புதிப்பிக்கத்தக்க சக்தி கொள்முதல் கட்டணத்தினை 2012 இல் அனுமதித்தது. இப் புதிய கட்டண அமைப்பானது, மரப ரீதியற்ற புதிப்பிக்கத்தக்க சக்தி துறையின் முதலீட்டினை அதிகரிப்பதனை ஊக்கப்படுத்த தூண்டுகோளாக அமையும்.

பாவனையாளரின் பயன்பாட்டுத் துறையின் விருப்பங்களை பாதுகாப்பதே ஆணைக்குழுவின் பிரதான செயற்பாடாகும். 2012 இல் இ.பொ.ப.ஆ இது சார்பாக பாரிய முன்னேற்றத்தினை ஏற்படுத்த முடிந்தது. இச் செய்பாடுகளாக நடளாவிய ரீதியில் பாவனையாளரின் நன்மைக்காக மேம்படுத்தப்பட்ட முயற்சிகள் அத்துடன் பாவனையாளரின் உரிமைகள் மற்றும் பொறுப்புக்கள் என்பனவற்றை பரிந்துரைத்தல் என்பன மேற் கொள்ளப்பட்டன.அத்துடன் ஆணைக்குழுவானது இலங்கை மின்சாரச் சபை மற்றும் இலங்கை மின்சார தனியார் கம்பனி ஆகியவற்றால் மின் பாவனையாளருக்கு வழங்கப்படும் சேவைகள் சம்பந்தமாக தற்போதைய நுகர்வோர் திருப்தியினை கண்டறிவதற்காக கணக்கெடுப்பினை மேற்கொண்டுள்ளது.

மேலும் ஆணைக்குழுவானது 2012 இல் புதிய இணையத்தளத்தினை ஆரம்பித்தது இதனூடாக மேம்படுத்தப்பட்ட தகவல்களை; பாவனையாளர், அனைத்து அக்கறையடைய தரப்பினர் மின்சாரம், பெற்றோலியத்துறை சார்ந்த ஒழுங்குவிதிகள், தொடர்புடைய கட்டணங்கள் மற்றும் பொருத்தமான தொழிற்துறையின் மேம்படுத்திய தகவல்கள் என்பனவற்றினை பெற்றுக்கொள்ள முடியும். இப் புதிய இணையத்தளத்தினூடாக மின் தொழிற்துறையின் வெளிப்படைத் தன்மையினை ஊக்குவித்தல் அதாவது, இத் தொழிற் துறையின் செயல்திறனை மிக துல்லியமாக பரப்பதல், இதனூடாக பாவனையாளரின் விழிப்பணர்வினை அதிகரித்தல் மற்றும் மின்சாரத் துறையில் எதிர்கொள்ளும் உண்மையான சவால்களை, பொது ஆலோசனை மற்றும் கலந்துறையாடல்களூடாக அறியப்படுத்துதலாகும். அத்துடன் மின் பாதுகாப்பு, ஆணைக்குழுவின் மிகுந்த ஆர்வமான பகுதியாகும்.

2012 இல் ஆணைக்குழுவின் உத்தியோகத்தர்கள், மின் சார்ந்த விபத்துக்கள் மற்றும் சம்பவங்களை விசாரணை செய்யும் பொருட்டு நாடு தழுவிய ரீதியில் தீவிரமாக ஈடுப்பட்டதுடன் சிறிய நீர் வலு மின் உற்பத்தி நிலையங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள மின் பாதுகாப்பு செயன்முறைகளை அறிந்துகொள்ள கண்காணிப்பினையும் மேற்கொண்டனர். இவ்வாறான தள விஜய கண்காணிப்பு மற்றும் விசாரணையூடாக ஆணைக்குழு பொது மக்களுக்கு மேம்படுத்தப்பட்ட மின் பாதுகாப்பு ஒழுங்கு விதிமுறைகளை உருவாக்க பெரிதும் உதவின.

ஆணைக்குழுவின் பதவியணியின் ஆற்றல் சக்தியினை வலுப்படுத்தும் பொருட்டு 2012 இல் தீவிர ஆட்சேப்பு இடம்பெற்றது. இதனூடாக மின் தொழிற் துறையின் செயற்திறன் மற்றும் மரபு ரீதியற்ற புதிப்பிக்கதக்க சக்தி துறையின் பதிய ஆய்வுகளை முன்னெடுக்க மற்றும் எளிதாக்க உதவின. இம் முயற்சிகளின் முடிவுகள் எதிர்வரும் ஆண்டுகளில் வெளிவிடப்படும். மேலும் இவ் ஆய்வுகளின போது சேகரிக்கப்பட்ட தரவுகளினாடாக கொள்கை வகுத்தல் மற்றும் அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்கள் என்பனவற்றிற்கு அடித்தளமாக அமைந்தது. குறிப்பாக முக்கிய பகுதியான மரபு ரீதியற்ற புதிப்பிக்கதக்க சக்தித் துறைகளில் பங்கு வகித்தல் ஆகும்.
2013 இல் வரவிருக்கும் பெற்றோலியத்துறை சட்டத்தினை கொண்டு ஆணைக்குழு பல் துறைக் கட்டுப்பாட்டு ஒழுங்குபத்தி அமைப்பாக பங்கு வகிக்கும். இதன் விளைவாக அதிக கோரிக்கைகள் மற்றும் சவால்களை எதிர் வரும் ஆண்டுகளில் ஆணைக்குழுவிற்கு முன் வைக்கப்படும்.

குறித்த ஆண்டு காலப்பகுதியில் எமது பொறுப்பக்களை நிறைவேற்றுவதில் அர்ப்பணிப்புடன் செயல்பட்ட ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கும், நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சுக்கும், மின் வலு சக்தி அமைச்சுக்கும், ஏனைய உரிய அரசாங்க நிறுவனங்கள், ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் மற்றும் பதவியணிக்கும் எமது மனமுவந்த நன்றியைத் தெரிவித்து கொள்ள விரும்புகின்றேன்.



கலாநிதி ஜயதிஸ்ஸ த கொஸ்தா, ஜ.ச
தலைவர்.



# பணிப்பாளர் நாயகத்தின் மீளாய்வு

2012 ஆம் ஆண்டு சவாலானதும் அத்துடன் ஆற்றல் மிக்க ஓர் ஆண்டாக அமைந்தது. ஆணைக்குழு மின்சாரத் துறையின் ஒழுங்குறுத்துகை செயற்பாடுகளை ஆரம்பித்து 3 ஆண்டுகளை வெற்றிகரமாக பூர்த்தி செய்துள்ளது. ஆணைக்கழுவினால் உருவாக்கப்பட்ட ஒழுங்குப்படுத்தும் வழிமுறைகள், கருவிகள், கோப்புக்கள் மற்றும் செய்முறைகள் என்பன வெற்றிகரமாக முடிவாக்கப்பட்டு 2012 இன் இறுதியில் பூர்த்தியாகும் தருவாயிலுள்ளது. மின்சார பாதுகாப்பு, வழங்கல் தரம் மற்றும் தொடர்நிலை தொடர்பான முக்கிய விதிமுறைகள், வழங்கல் சேவைகள் தொகுப்பு மற்றும் கட்டணத் திருத்தத்திற்கான ஒழுங்கு முறைகள் என்பன முடிவாக்கப்பட்டுள்ளன. இவை ஆணைக்குழுவின் ஒழுங்குறுத்துனர் பங்கினை வலுப்படுத்தி உதவும் அதேவேளை எதிர் வரும் ஆண்டுகளில் மின்சாரத் துறையின் பாதுகாப்பு மற்றும் நீண்ட கால செயல்திறன் அம்சங்களில் அதிகரிப்பினை ஏற்படுத்தும் என எதிர்ப்பாக்கப்படுகின்றது.

ஆணைக்குழுவானது நுகர்வோர் பாதுகாப்பில் குறிப்பிடத்தக்க சாதனையினை ஏற்படுத்தியுள்ளது. 2012 ஆம் ஆண்டில் 400 இற்கும் மேற்பட்ட நுகர்வோர் முறைப்பாடுகள் கவனத்தில் கொள்ளப்பட்டு பதிலளிக்கப்பட்டன. மின் பாவனையாளரின் உரிமைகளை பாதுகாத்தல் தொடர்பாக பல புதிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அவையாவன் நாடளாவிய ரீதியில் மின் பாவனையாளரின் உரிமைகள் மற்றும் பொறுப்புக்களை வலியுறுத்தும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், ஆணைக்குழுவினால் தயாரிக்கப்பட்ட துண்டுபிரசுரங்களின் விநியோகம் அத்துடன் மின் சேவை வழங்குனரிடமிருந்து (உரிமம் பெறுனர்) பாவனையாளருக்கு வழங்கப்படும் சேவை சம்பந்தமாக தற்போதுள்ள நுகர்வோர் திருப்தியினை அளவிட மேற்கொள்ளப்படும் கணக்கெடுப்பு என்பனவாகும். அத்துடன் ஆணைக்குழுவானது புதிய மின் கட்டண பட்டியல் வடிவமைப்பினை அறிமுகப்படுத்துவதற்கான முதற்கட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது, இதன் மூலமாக பாவனையாளர்களிடையே மின் பட்டியல் கணிப்பீடு செய்முறைகள் சம்பந்தமான வெளிப்படைத் தன்மையினை உருவாக்கக்கூடியதாக அமையும்.

2012 இல் ஆணைக்குழு மின் பாவனையாளரின் வசதியினை கருத்தில் கொண்டு புதிய இணையத்தள முறையினூடான நுகர்வோர் முறைப்பாடடு அமைப்பினை அறிமுகப்படுத்தியது. இவ் கணணி முறைப்பாட்டு அமைப்பானது ஆணைக்குவிற்கும் மற்றும் முறைப்பாட்டாளரிற்கும் இடையே ஓர் இடைமுகமாக செயற்படுகின்றது. அத்துடன் முறைப்பாட்டாளர் மின்சாரம் சார்ந்த சர்ச்சைகள் தொடர்பான முறைப்பாட்டினை சமர்ப்பித்து அது சம்பந்தமாக ஆணைக்குழுவுடன் தகவல் தொடர்பபுகளை பேணுவதற்கும் துணைபுரிகின்றது. இவற்றை விட இவ் அமைப்பானது உத்திகபூர்வ முன்று மொழிகளான உ+ ம்: சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் முறைப்பாட்டினை மேற்கொள்ள உதவுகின்றது. நுகர்வோர் முறைப்பாட்டு அமைப்புடன் கூடிய மறுசீரமைக்கப்பட்ட புதிய மும் மொழிகளிலும் அணுகக்கூடிய இணையத்தளம் வடிவமைக்கப்பட்டு 2012 இல் ஆரம்ப செயல்படுத்தல் நிலையிலும் 2013 இல் உத்தியோகப்பூர்வமாக அங்குராற்பணம் செய்யப்படும்.

சக்தித் துறையில் ஆராய்ச்சிகள் மற்றும் ஆய்வுகள் என்பன ஆணைக்குழுவில் ஆற்றல் வாய்ந்த பங்கினை வகித்தன. 2012 இல் மின்சாரத்துறையின் தற்போதைய செயற்திறன் மற்றும் மரபு ரீதியற்ற புதிப்பிக்கத்தக்க சக்தி தொடர்பிலும் புதிய ஆய்வுகள் ஆரம்பிக்கப்பட்டது. இவ் ஆய்வுகள் சக்தித் துறை தொடர்பாக எதிர்காலங்களில் அரச கொள்கைகள் உருவாக்கம் மற்றும் தொடர்புடைய வழிக்காட்டல்களுக்கு உதவிபுரியும் என ஆணைக்குழு நம்புகின்றது.

ஆணைக்குழுவின் 2012 இற்கான நிகழ்ச்சி நிரலில், மின் பாதுகாப்பு மிக முக்கிய பங்கினை வகித்தது. அத்துடன் கூட அதிக எண்ணிக்கையான மின் விபத்துக்கள், பொது நிறுவனங்களினால் மற்றும் சுயாதீன சக்தி நிலையங்களில் ஏற்றுக் கொள்ளப்பட்ட பாதுகாப்பு முறைகள் என்பன ஆணைக்குழுவின் அதிகாரிகளினால் 2012 இல் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டன. கிடைக்கப்பெற்ற தரவுகளின் அடிப்படையில் ஆணைக்குழு மேம்படுத்தப்பட்ட மின் பாதுகாப்பு ஒழுங்கு விதிகள் உருவாக்குவதனை ஆரம்பித்துள்ளது. இவை பொது மக்கள் மற்றும் உரிமம் பெருனறுக்கு 2013 இல் கிடைக்க கூடியதாகவிருக்கும்.

2012 இல் ஆணைக்குழு 2013-2015 ஆம் ஆண்ற்கான கூட்டிணைந்த திட்டத்தினை உருவாக்கியது. இத் திட்டங்கள் இறுதியாக முன் பொது ஆலோசனைக்குட்படுத்தப்பட்டன. இவ் கூட்டிணைந்த திட்டமானது. ஆணைக்குழுவின் குறுகியகால மற்றும் நடுத்தரகால குறிக்கோள்களை அறிந்து, எதிர்காலத் திட்ட இலக்குகளுக்கு ஒத்த வகையில் அமையும் விதத்தில் உருவாக்கப்பட்டுள்ளது. கூட்டிணைந்த திட்டத்தில் உருவாக்கப்பட்ட குறிக்கோள்கள் மற்றும் முயற்சிகளின் அடிப்படையிலும் அவற்றினை விபரித்துக் காட்டும் 2013 இன் கண்ணோட்ட ஆவணம் தயாரிக்கப்பட்டுள்ளது.

செயல் திறன் மிக்க ஒழுங்குப்படுத்தல் நிறுவனத்தின் முக்கிய காரணியான மனித வளங்களில் ஆணைக்குழு குறிப்பிடத்தக்க சாதனைகளை ஏற்படுத்தியுள்ளது. 2012 இல் ஆணைக்குழுவில் 13 புதிய அதிகாரிகள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இப் புதிய ஆட்சேர்ப்பினூடாக ஆணைக்குழு தனது குறிக்கோள்கள் மற்றும் முயற்சிகளை முன்னெடுப்பதில் இவர்களின் பங்களிப்பு முக்கியத்துவமானதாகவும் இதனூடாக தொழிற் நிறுவனங்கள் பயனடைவதாயும் அமையும்.

மின் கட்டணங்கள் தொடர்பான தெளிவான பல சவால்கள் காணப்பட்டன. ஒழுங்குப்படுத்தியாக செயற்படும் ஆணைக்குழு மின் பாவனையாளரின் தேவைகளை கவனத்திற் கொண்டு நியாயமான மின் கட்டணங்களை எடுத்துரைத்தலும் அத்துடன் மின் சேவை வழங்குனருக்கு போதுமன வருவாயினை பெற்றுக் கொடுத்து தொடர்ச்சியான மின் வழங்கல் சேவையினை முன்னெடுப்பதற்குரிய தொடர்ச்சியான சவால்களுக்கு முகங்கொடுகின்றது. 2011 இல் ஆணைக்குழு அரச கொள்கைகளுக்கு அமைய முதல் தடைவையாக மின் கட்டணத் திருத்தத்திற்காக அனுமதித்தது. அத்துடன் ஆணைக்குழு 2012 இல் எற்பட்ட எரிபொருள் அதிகரிப்பினை முகங்கொடுக்க, எரிபொருள் சீராக்கல் கட்டணத்தினை நடைமுறையிலுள்ள மின் கட்டணத்துடன் அறிமுகப்படுத்தியது.

வருடாந்தம் பெற்றோலிய பொருட்களின் விலையின் இறக்குமதி அதிகரிப்பு என்பன சமாளிக்க முடியாத விலை அதிகரிப்பில் செல்லுகின்றன, அத்துடன் நடைமுறையிலுள்ள அரசாஙகக் கொள்கை, மரபு ரீதியற்ற புதிப்பிக்கத்தக்க சக்தி துறையினை வலுப்படுத்தும் நோக்கினை கொண்டுள்ளது. இவ்வாறானதொரு சூழ் நிலையில் ஆண்டின் இறுதியில் மரபு ரீதியற்ற புதிப்பிக்கத்தக்க சக்தி கொள்முதல் கட்டணமானது ஆணைக்குழுவினால் 2012 கார்த்தியை மாதம் அறிவிக்கப்பட்டது. இக் கட்டணங்களை நிர்ணயிக்கதக்க பொருத்தமான செயல் முறைகளுக்கூடாகவும் அத்துடன் ஆணைக்குழு நியாயமான பொது ஆலோசனைகளினூடாக இறுதியான தீர்மானங்களை எடுத்து மரபு ரீதியற்ற புதிப்பிக்கத்தக்க சக்தி கொள்முதல் கட்டணங்களை அனுமதித்தது.

உராய்வு எண்ணெய் சந்தைகளின் தற்போதைய நிழல் ஒழுங்குப்படுத்தியான செயற்படும் ஆணைக்குழு 2012 புரட்டாதி மாதம் தொழில் துறையினருக்கு மிகவும் வெற்றிகரமாக, உராய்வு எண்ணெய்களுக்கான பட்டறையினை பெற்றோலியத்துறை அமைச்சுடன் இணைந்து நடத்தியது.

2012 இல் பெற்றோலியத் துறை அமைச்சு, 2002 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க பெற்றோலிய பொருட்கள் (விஷேட ஏற்பாடு) தொடர்பான சட்டம் மற்றும் 1961 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க பெற்றோலிய கூட்டுத்தாபன சட்டம் என்பவற்றின் முன்மொழியப்பட்ட திருத்தங்கள் தொடர்பாக தொடர்ந்து சட்டமா அதிபர் திணைக்களத்துடன் தனது உரையாடல்களை மேற்கொள்கின்றது. இதனூடாக ஆணைக்குழு கீழ் நிலைப்படுத்தப்பட்ட பெற்றோலியத் துறையின் ஒழுங்குறுத்துனராக செயற்பட வழிவகுத்தலில் உதவுகின்றது. இவ் இரு சட்டங்களினதும் இ.பொ.ப.ஆ மற்றும் பெற்றோலியத் துறை அமைச்சின் ஆலோசனையுடன் சட்ட வரைவாளர் திணைக்களத்தினால் திருத்தியமைக்கப்பட்டுள்ளன. தற்போது முன்மொழியப்பட்ட திருத்தங்களுடன் கூடிய சட்டங்கள் கௌரவ. சட்டமா அதிபரின் அனுமதிக்காக எதிர்பாக்கப்பட்டுள்ளது.

2012 ஆண்டின் முயற்சிகளை வெற்றிகரமாக முன்னெடுக்க எனக்கு உதவிய தலைவர் மற்றும் ஆணைக்குழு உறுப்பினர்களுக்கு எனது நன்றியினை தெரிவித்துக் கொள்ளுகின்றேன். அத்துடன் குறித்த ஆண்டில் ஆணைக்குழுவின் வெற்றிகரமான அனைத்து செயற்பாட்டிற்கும், ஊக்கத்துடனும் அர்ப்பணிப்புடனும் செயற்பட்ட உதவி பணிப்பாளர் நாயகம் மற்றும் ஊழியர்களுக்கும் எனது நன்றிகளையும் பாராட்டினையும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.



தம்மித்த குமாரசிங்க,
பணிப்பாளர் நாயகம்

# மீளாய்வு

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் கூட்டிணைந்த திட்டமானது குறிப்பிட்ட ஆண்டிற்கான திட்டங்களை முன்னெடுத்துச் செல்ல வழிவகுக்கின்றது. ஆண்டின் மீளாய்வின் போது, இலங்கை மின்சாரச் சட்டம் மற்றும் இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு சட்டம், என்பவற்றினூடாக ஆணைக்குழுவானது புதிய முயற்சிகள் தொடர்களினூடாக ஒழுங்குறுத்துகையினை நடைமுறைப்படுத்துவதை நோக்காகக் கொண்டு செயற்பட்டுள்ளது.

நுகர்வோர் பாதுகாப்பு தொடர்பான செயற்பாடுகளை மேற்கொள்ளுதல் ஆணைக்குழுவின் ஒரு முக்கிய தனிச் சிறப்பாகும். இது தொடர்பாக 2012 ஆம் ஆண்டில், ஆணைக்குழு முக்கிய முன்னேற்றத்தினை கண்டுள்ளது. ஆணைக்குழு தொடர்ச்சியாக நுகர்வோர் பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வு நிகழ்சிகள், மின் பாவனையாளர்களின் பொறுப்புக்கள் மற்றும் உரிமைகளை வலியுறுத்தும் இலக்கியங்கள் என்பனவற்றை உருவாக்கியுள்ளது. ஆணைக்குழு 2012 ஆம் ஆண்டில் 21 விழிப்புணர்வு கருத்தரங்குகளை வடமேற்கு, மேற்கு, தெற்கு, சபரகமுவ, ஊவா, மத்திய, கிழக்கு மற்றும் வடக்கு மாகாணங்களில் ஏற்பாடு செய்துள்ளது.

மின் பாவனையாளருக்கு மேலதிக சேவையினை வழங்கும் முகமாக ஆணைக்குழு புதிய மேம்படுத்திய இணையத்தளத்தினை 2012 இல் அறிமுகப்படுத்தியது. இவ் இணையத்தள முறைப்பாட்டு அமைப்பினூடாக, மின் பாவனையாளர் தமது முறைப்பாட்டினை ஆணைக்குழுவின் இணையத்தளத்தில் சமர்ப்பிக்க முடியும். இவ் அமைப்பானது ஆணைக்குழு மற்றும் முறைப்பாட்டாளர் இடையே ஓர் இடைமுகமாகச் செயற்படும் அதேவேளை, முறைப்பாட்டின் நிலைமைகள் மற்றும் விபரங்களை அறியவும் உதவும். அரசாங்க தேவைகளுக்கு அமைய, இம் முறையினூடாக பாவனையாளர்கள் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் தமது முறைப்பாட்டினை மேற்கொள்ளலாம். ஒவ்வொரு சமர்பித்தலின் போதும் அதற்குரிய தொடரிலக்கம் மற்றும் அடுத்த நடவடிக்கைகள் என்பன தொடர்பான தகவல்கள் வழங்கப்படும். இதன் மூலமாக ஆணைக்குழு மின் பாவனையாளரின் முறைப்பாடுகள் மற்றும் சர்ச்சைகளின் தீர்வுகள், திறன்மிக்கதாக அமைய வழிவகுக்கும் என எதிர்பாக்கின்றது.

ஆணைக்குழுவானது நாடளாவிய ரீதியில் உரிமம் பெறுனரினால் வழங்கும் சேவை தொடர்பான நுகர்வோர் திருப்தி மாதிரி கணக்கெடுப்பு ஆய்வினை மேற்கொண்டது. இவ் ஆய்வின் நோக்கமானது; பாவனையாளர் மத்தியில் மின் வழங்கல் சேவை மற்றும் சக்தி செயல்திறன் என்பவற்றின் முன்னேற்றப்படக்கூடிய பகுதியினை அடையாளம் காணுதலும், திறன்மிக்க சக்தி பாவனை மற்றும் சக்தி பாதுகாப்பு என்பன பற்றிய விழிப்புணர்வு தகவல்களை பெற்றுக்கொள்ளுதலுமாகும்.

ஒரு முன்னோட்ட ஆய்வு மற்றும் வரைவு வினாப்பட்டியல் என்பன தேர்வு செய்யப்பட்ட பாவனையாளர்களிடையே முதற்கட்டமாக விநியோகிக்கப்பட்டது. பின்னர் 2012 மார்கழி மாத ஆரம்பத்தில் ஆய்வின் உண்மையான செயற்பாட்டு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. நாட்டின் எல்லா பாகங்களிலும் உள்ள இரு வகை சேவை வழங்குனர் பிரிவினையும் உள்ளடக்கிய இலங்கை மின்சாரச் சபை மற்றும் இலங்கை தனியார் மின்சாரக் கம்பனி, வீட்டு வகைப் பாவனையாளர்கள் மற்றும் கைத்தொழில் வகை பாவனையாளர்கள் 2500 பேரிடமிருந்து ஆய்விற்கான தகவல்கள் சேகரிக்கப்பட்டன. பெறப்பட்ட முடிவுகளின் அறிக்கை 2013 இல் வெளியிடப்படவுள்ளது.

ஓப் கிறிட் புதிப்பிக்கத்தக்க சக்தி திட்டங்களினூடாக வழங்கப்படும் மின்சாரமானது அரசாங்கத்தின் 100% மின் மயமாக்கலின் குறிகோள்களுக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பினை வழங்ககின்றது. தேசிய கிறீட் முறையினூடான மின்சார விரிவாக்கத்தினால் ஓப் கிறீட் திட்டங்கள் தங்களது பாவனையாளர்களை இழக்கவும், அவர்களது வருமானத்தில் சிக்கல்களையும் ஏற்படுத்துகின்றது. இதனால், தொடர்ச்சியான வழங்கலுக்கான அர்ப்பணிப்பு இல்லாமல் போகும் தன்மை ஏற்பட வாய்ப்புக்கள் உள்ளன. அத்தகைய விளைவினால் ஆரம்ப முதலீட்டாளர்கள் மற்றும் கிராம மக்கள் தங்களது ஆரம்ப முதலீட்டினை இழக்க நேரிடும். ஆகவே ஆணைக்குழுவானது மேல் குறிப்பிடப்பட்ட நிலைமைகள் மற்றும் ஓப் கிறீட் திட்டங்களை மேம்படுத்தலினை கருத்தில் கொண்டு, அவை தொடர்பான சாத்தியங்களை ஆராய ஆய்வினை முன்னெடுத்தது. இவ் ஆய்வானது மீளாயப்பட்டு அதன் முடிவுகள் ஓர் (வரைபு மட்ட) அறிக்கையாக உருவாக்கப்பட்டுள்ளது. ஆணைக்குழுவானது ஓப் கிறீட் திட்டங்களை சொந்த வளமாக கொண்டவர்களிடம் கருத்தினை பெற்று இவ் அறிக்கையினை மேம்படுத்த உத்தேசித்துள்ளது.

பொது மக்களிடையே உராய்வு எண்ணெய் தொடர்பான விழிப்புணர்வினை ஏற்படுத்தும் பொருட்டு, இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு பெற்றோலிய கைத்தொழில் அமைச்சுடன் இணைந்து புரட்டாதி 2012 இல், உராய்வு எண்ணெய் தொழில் துறை குறித்த பயிற்சி பட்டறையினை நடாத்தியது. 100 இற்கம் மேற்பட்ட தனியார் மற்றும் அரச பங்கேற்பாளர்கள் இவ் நிகழ்வில் கலந்து கொண்டனர். இதன் போது உராய்வு நீக்கி எண்ணெய் தொடர்பான துண்டுபிரசுரங்கள் வழங்கப்பட்டன. இப் பட்டறையானது, கொள்கை சார்ந்த கல்வியாளர்கள் மற்றும் ஊடகங்களுக்குமிடையே ஒரு பயனுள்ள கலந்துரையாடலினை உருவாக்க உதவியது.

# மின்சாரத் துறை

## நுகர்வோர் பாதுகாப்பு

நுகர்வோர் பாதுகாப்பு தொடர்பான ஆணைக்குழுவின் பங்குகளான; ஆலோசனை வழங்குதல், அவர்களது முறைப்பாடுகள் மற்றும் சர்ச்சைகளுக்கு தீர்வு காண உதவுதல் அத்துடன் நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் நுகர்வோர் பொறுப்புக்கள் தொடர்பான விழிப்புணர்வினை உருவாக்குதல் ஆகிய செயற்பாடுகளை மேற்கொள்கின்றது. இந்த வகையில் இ.பொ.ப.ஆ நுகர்வோர் முறைப்பாட்டு அமைப்பினை உருவாக்கி அதனூடாக பாவனையாளர் மற்றும் உரிமம் பெறுனர் இடையிலான முறைப்பாடுகள் மற்றும் சர்ச்சைகளுக்கு எளிதில் தீர்க்க வழி வகுத்துள்ளது. ஆணைக்குவிற்கு நுகரவோர் விவகாரங்கள் தொடர்பாக ஆலோசனை வழங்கும் சுயாதீன நுகர்வோர் ஆலோசனைக் குழுவானது, இ.பொ.ப.ஆ நுகர்வோர விவகாரங்கள பிரிவுடன் ஒருங்கிணைந்து செயற்படுகின்றது.
ஆணைக்குழு 2012 இல் நுகர்வோர் பாதுகாப்பு தொடர்பாக கீழ்வரும் செயற்பாடுகள் மற்றும் முயற்சிகளை முன்னெடுத்தது:

## நுகர்வோர் திருப்பி தொடர்பான ஆய்வு

ஆணைக்குழுவானது 2012 இல் நாடளாவிய ரீதியில் நடைமுறையிலுள்ள மின் பாவனையாளரின் திருப்தி மதிப்பீட்டினை அறிவதற்கு கணக்கெடுப்பினை மேற்கொண்டது. இக் கணக்கெடுப்பின் நோக்கங்களாவன: மின் வழங்கல் சேவையின் முன்னேற்றத்திற்கான பகுதியினை கண்டறிதல் மற்றும் நுகர்வோர் மத்தியில் திறன் மிக்க சக்தி பாவனை உருாக்குதல் என்பனவாகும். ஆணைக்குழு இவ் செயற்பாட்டினை மேற்கொள்ள வெளிபுற ஆலோசகர்களை ஈடுப்படுத்தியது. கணக்கெடுப்பானது 2012 மார்கழி மாத ஆரம்பப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்டது. இதன் போது அனைத்து பாவனையாளர் வகையினரையும் (உ+ம்: வீட்டுப்பாவனை, சமயஸ்தலம், பொது நோக்கம், கைத்தொழில் மற்றும் ஹோட்டேல்)மற்றும் அனைத்து உரிமம் பெறுனரினையும் உள்ளடக்கும் விதத்தில் 2,400 மாதிரிகள் கணக்கெடுப்பிற்கு தெரிவு செய்யப்பட்டன. கணக்கெடுப்பின் முடிவுகள் 2013 இல் வெளியிடப்படவுள்ளன.

## புதிய மின் பட்டியல் வடிவமைப்பினை நடைமுறைப்படுத்தல்

நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்ட கணக்கெடுப்பின் முடிவுகளுக்கு அமையவும், இலங்கை மின்சாரச் சபை மற்றும் இலங்கை மின்சார தனியார் கம்பனியின் உள்ளீடுகளுக்கு அமையவும் புதிய வடிவமைப்பிலான கீழ்வரும் தகவல்களுடன் கூடிய மின் கட்டணங்கள் அறிமுகப்படுத்தும் ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் 2012 இல் எடுக்கப்பட்டன.

- வீட்டுப் பாவனை வகை நுகர்வோரருக்கான மின் பட்டியல் கணிப்பிடப்படும் முறைக்கான விபரங்கள் (நுகரப்பட்ட அலகுகளுக்கான தனிப்பட்ட தொகுதி கட்டணங்கள்).
- பிறப்பாக்க, கடத்துகை மற்றும் விநியோகத்திற்கான செலவுகள் தனியாக காண்பிக்கப்படல்.
- மின் வழங்கலுக்காக அரசாங்கத்தினால் வழங்கப்படும் ஊக்கத்தொகை.
- வரிகள் மற்றும் ஏனைய கட்டணங்கள்

இலங்கை மின்சாரச் சபை மற்றும் இலங்கை மின்சார தனியார் கம்பனி என்பவற்றிற்கு பாவனையாளருக்கு தேவைப்படும் தரவுகளுடன் கூடிய இப் புதிய மின் கட்டண பட்டியல் வடிவனைமப்பினை அறிமுப்படுத்தத் தேவையான செயற்பாடுகளை மேற்கொள்ளுமாறு இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவினால் தெரிவிக்கப்பட்டது.

## நுகர்வோர் உரிமைகள் மற்றும் கல்வி

ஆணைக்குழுவானது நுகர்வோர் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை முன்னெடுத்து செல்வதில் தொடர்ந்து ஈடுப்பட்டுள்ளது. 2012 இல் நுகர்வோர் கல்வி மற்றும் உரிமைகள் தொடர்பான பின்வரும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன:

## இ.பொ.ப.ஆ இன் ஒழுங்குமுறை தலையீடுகள் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்

2012 இல் இ.பொ.ப.ஆ பாவனையாளர், உரிமம் பெறுனர் மற்றும் அக்கரையுடைய அனைத்து தரப்பினருக்குமான 21 பங்கேற்பு விழிப்புணர்வு நிகழ்ச்சியிகளை நாட்டின் அனைத்து மாகாணத்திலும் ஒழுங்கு செய்தது. இவ் நிகழ்ச்சியினூடாக ஆணைக்குழு 2009 ஆம் ஆண்டு 20 ஆம் இலக்க மின்சார சட்டத்தின் ஒழுங்குமுறை கட்டமைப்பு தொடர்பாக பாவனையாளர்களின் அறிவினை மேம்படுத்தல் அத்துடன் இச் சட்டத்திலுள்ள விதிகளின் படி ஒழுங்குமுறை கருவிகளை உருவாக்குதல் என்பனவாகும். ஆணைக்குழுவானது நுகர்வோர் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை கீழ் வரும் பகுதிகளுக்கு அதிகரிக்க எண்ணியுள்ளது. அவையாவன: நம்பகரமானதும் பாதுகாப்பானதுமான மின் வழங்கல் தொடர்பான பாவனையாளரின் உரிமைகள், புதிய இணைப்பினை பெறும் போது பாவனையளருக்கு உள்ள உரிமைகள், இணைப்புத் துண்டிப்பு மற்றும் நிறுத்தல் தொடர்பாக சேவை வழங்குநருடனான ஒப்பந்தம், மின் மீள் வழங்கல், பாவகையாளர்களினால் வழங்கப்படும் முறைப்பாடுகள் உரிமம் பெறுனரினால் கையாளப்படும் முறை, மின் வாசிப்பு செயன்முறைகள், சேவை கட்டணம், கட்டண கட்டமைப்பு மற்றும் மின் கட்டண செலுத்தல் செயன்முறை மற்றும் கூடிய மின் பாவனையாளரின் பொறுப்புக்கள என்பனவாகும்.

## விழிப்புணர்வு துண்டு பிரசுரங்கள்

### இ.பொ.ப.ஆ வின் ஒழுங்குவிதிகளின் பங்கு மற்றும் பணிகள் பற்றியணண துண்டு பிரசுரங்கள்

இவ் துண்டு பிரசுரங்கள் பாவனையாளர், உரிமம் பெறுனர் மற்றும் அனைத்து அக்கறையுடைய தரப்பினருக்கும் ஆணைகுழுவின் பங்கு, அதன் சேவைகள் மற்றும் அதன் தொழிற்பாடுகள் என்பன தொடர்பாக பொது தகவல்களை வழங்குவதனை நோக்காக கொண்டு உருவாக்கப்பட்டுள்ளன.

### மின் பாவனையாளரின் முறைப்பாடுகள் கையாளப்படும் செய்முறை தொடர்பான துண்டுப்பிரசுரம்

இவ் துண்டு பிரசுரத்தின் உருவாக்குதலின் நோக்கமானது, பொது மக்கள் பல்வேறு வகையான முறைப்பாடுகள் மற்றும் விசார-ணைகளை மின் சேவை வழங்குனரிடம் மேற்கொள்ளும் முறை, அத்துடன் கூட இவ் வகையான பிரச்சினைகளை இ.பொ.ப.ஆ எளிதாக்கும் முறைகள் என்பன இவ் பிரசுரத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

மூன்று மொழிகளிலும் அச்சிடப்பட்ட துண்டுப்பிரசுரங்கள் ஆணைக்குழுவினால் 2012 இல் நடாத்தப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சியின் போது விநியோகிக்கப்பட்டன. மேலும் அவை பொதுமக்களின் வசதி கருதி, ஆணைக்குழுவின் அலுவலகத்திலும் கிடைக்க கூடியதாகவுள்ளது.

### “நுகர்வோர் உரிமைகள் மற்றும் பொறுப்புக்கள்” பற்றிய அறிக்கையின் வெளியீடு

2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க மின்சாரச் சட்டத்தின் பிரிவு 3(1) (உ) இற்கு அமைய மின் பாவனையாளரின் உரிமைகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான விழிப்புணர்வினை மேம்படுத்துவதற்காக 2013 இல் இ.பொ.ப.ஆ நுகர்வோர் உரிமைகள் மற்றும் பொறுப்புக்கள் அறிக்கையினை 2013 இல் உத்திகபூர்வமாக வெளியிடவுள்ளது. இ.பொ.ப.ஆ 2012 இல் வரைபு மட்ட ரீதியிலான நுகர்வோர் உரிமைகள் மற்றும் பொறுப்புக்கள் அறிக்கையானது தொகுக்கப்பட்டு, வழங்கல் சேவைகளின் தொகுப்பு (சட்டத்தொகுப்பு) முடிவாக்கப்பட்டதும் முறைப்படுத்தப்படும். இவ் வழங்கல் சேவைகளின் தொகுப்பானது மின் விநியோக உரிமம் பெறுனரினால் இ.பொ.ப.ஆ வழிகாட்டலின் கீழ் தயாரிக்கப்படுகின்றது. முடிவாக்கப்பட்ட வரைபு நுகர்வோர் உரிமைகள் மற்றும் பொறுப்புக்கள் அறிக்கையானது பொது ஆலோசனைக்காக முன்வைக்கப்பட்டு தொகுப்பு இறுதியாகும் முன், பொது மக்களின் கருத்துக்கள் பெறப்படும். முடிவாக்கப்பட்ட அறிக்கையானது நடைமுறையிருலுள்ள நுகர்வோர் பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளின் போது உட்சேர்க்கப்படும்.

### இணையத்தளதினூடான நுகர்வோர் முறைப்பாட்டு வசதி

2012 இல் ஆணைக்குழுவானது புதிய இணையத்தளத்தினூடான நுகர்வோர் முறைப்பாட்டு சேவையினை அறிமுகப்படுத்தியது. இவ் கணணி முறைப்பாட்டு அமைப்பானது ஆணைக்குவிற்கும் மற்றும் முறைப்பாட்டாளாரிற்கும் இடையே ஒர் இடைமுகமாக செயற்படுகின்றது. அத்துடன் முறைப்பாட்டாளர் மின்சாரம் சார்ந்த சர்ச்சைகள் தொடர்பாக முறைப்பாட்டினை சமர்ப்பித்து அது சம்பந்தமாக ஆணைக்குழுவுடன் தகவல் தொடர்பகளை பேணுவதற்கு உதவுகின்றது. இவற்றை விட இவ் அமைப்பானது உத்திகபூர்வ மூன்று மொழிகளான உ+ம்: சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் முறைப்பாட்டினை மேற்கொள்ள உதவுகின்றது. இதனூடாக பாவனையாளர் தமது முறைப்பாட்டினை நேரடியாக ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்க முடியும் இது தபால், மின் அஞ்சல் மற்றும் நேரடியாக சமர்ப்பித்தலுக்கு ஒத்ததாகும். ஒவ்வொரு இணையத்தள முறைப்பாட்டு சமர்ப்பிற்கும் குறிப்புஎண் மற்றும் வழிகாட்டலின் படிகள் என்பன வழங்கப்படும். இவ் முறைக்கூடாக செயல்திறன்மிக்க விதத்தில் பாவனையாளரின் முறைப்பாடுகளை தீர்க்க வழிவகுக்கும்.

### நுகர்வோர் முறைப்பாடுகளின் முகாமைத்துவம்

2012 இல் இ.பொ.ப.ஆ இற்கு 466 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றது. இதில் 91மூ மானவற்றிற்கு ஆணைக்குழு பதில் நடவடிக்கையினை வெற்றிகரமாக மேற் கொண்டது. ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட் முறைப்பாடுகளில் பொரும்பாலானவை மின் வழங்கல் மற்றும் மின் துண்டிப்பு வகையினை சார்ந்தவையாகும்.

### 2012 இல் ஆணைக்கழுவினால் கையாளப்பட்ட நுகர்வோர் முறைப்பாடுகள்

| வகை இல | முறைப்பாட்டு வகை | மொத்தமாக கிடைக்கப் பெற்றது | புதில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டவை | எஞ்சியவை |
|---|---|---|---|---|
| 01 | மின்சாரப் பட்டியல் மற்றும் மானி | 73 | 71 | 02 |
| 02 | கட்டண வகை | 7 | 7 | 00 |
| 03 | வழியனுமதி | 149 | 132 | 17 |
| 04 | புதிய இணைப்புகள் | 88 | 81 | 07 |
| 05 | துண்டிப்பு மற்றும் மீள் இணைப்பு | 77 | 70 | 07 |
| 06 | ஏனையவை | 72 | 64 | 08 |
| | மொத்தம் | 466 | 425 | 41 |

## நுகர்வோர் முறைப்பாட்டு வகை




## 2012 இல் பதில் நடவடிக்கை எடுக்கப்பட்டவை




## பிணக்குகள் தீர்த்தல் நியதிகளின் அமுலாக்கம்.

பாவனையாளர் மற்றும் உரிமம் பெறுனர் இடையே பிணக்குகள் ஏற்படும் சந்தர்ப்பத்தில், அல்லது உரிமம் பெறுனர்கள் இருவரிடையே அல்லது மற்றைய பாதிக்கப்பட்ட தரப்பினரிடையே ஏற்படும் பிணக்குகள் அவ் தரப்பினரினால் தீர்க்க முடியாதவிடத்து "மின்சார (பிணக்குகள் தீர்த்தல் நடைமுறைகள்) நியதிகள்" ஆணைக்குழுவின் பரிந்துரைக்களுக்கு அமையவும், 2011.05.25 ஆம் திகதி 1707/15 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலுக்கமையவும் அவை ஆணைக்குழுவிற்கு பரிந்துரைக்கப்படல் வேண்டும்.

எனினும், பிணக்குகளை ஆரம்பிப்பதற்கு முறையான செயல் முறைகள் மற்றும் ஆவணங்கள் என்பன தேவையானவை. எனவே 2012 இல் ஆணைக்குழுவானது "மின்சார (பிணக்குகள் தீர்த்தல் நடைமுறைகள்) நியதிகள்" செயல்படுத்த தேவையான உத்திகபூர்வமான ஆவணங்கள் மற்றும் அதற்கான படிமுறைகள் என்பனவற்றை உருவாக்கியுள்ளது.

# பிராந்திய நுகர்வோர் சங்கங்களை நிறுவுதல்.

மின் பாவனையாளர் மத்தியில் அவர்களது கருத்துக்களை பரிமாறும் பொருட்டும் ஒழுங்குவிதிகள் மற்றும் கொள்கை விவகாரங்களில் பங்களிப்பினை மேற்கொள்ளும் முகமாகவும் ஆணைக்குழு பிராந்திய நுகர்வோர் சங்கத்தினை நிறுவுவதற்கு தீர்மானித்துள்ளது.

இச் சங்கங்களின் குறிக்கோள்களாவன:

- மின் பாவனையாளருக்கு வழங்கப்படும் மின் சேவை மற்றும் உயர் தரமிக்க மின் சேவையினை வழங்குவதற்குறிய ஆலோசனை மற்றும் உதவிகளை ஆணைக்குழுவிற்கு வழங்குதல்.
- பாவனையாளரின் உரிமைகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான விழிப்புணர்வினை மேம்படுத்தல்.
- பிராந்திய மின் பாவனையாளரினால் முகம் கொடுக்கப்படும் பிரச்சினைகள் மற்றும் சர்ச்சைகள் தொடர்பாக அவர்களால் முன்மொழியப்பட்ட கருத்துக்கள் மற்றும் திட்டங்களை கலந்தாலோசித்தல் அத்துடன் மின் வழங்கல் சேவையினை முன்னேற்றுவதற்கான வழிவகுத்தலுடன் தொடர்பாக ஆணைக்குழுவிற்கு நுகர்வோர் ஆலோசனைக் குழுவினூடாக ஆணைக்குழுவினை அறிவூட்டல்.
- பாவனையாளர்களை நேரடியாக பாதிக்கும் தீர்மானம் எடுக்கும் செயற்பாடுகளான, மின் கட்டணங்களின் தரங்களின் அறிமுகம், மின் கட்டணத் திருத்தம், சேவையின் தரம் போன்றன தொடர்பாக ஆணைக்குழுவிற்கு அறிவுப்படுத்தல்.
- 2002 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு சட்டத்தின் பிரகாரம் மின் துறையின் ஒழுங்குப்படுத்தல் தொடர்பாக ஆணைக்குழுவின் பங்கு சார்பான விழிப்புணர்வினை மேம்படுத்தல்.
- வளாக உரிமையாளர்கள் மற்றும் பொது மக்களுக்கான மின் இணைப்பினை பெறுதல்/வழியனுமதி வழங்குதல், மின் கம்பங்களின் நிறுவுதல் மற்றும் மின் கம்பிகளின் இணைப்பு தொடர்பான விழிப்புணர்வினை உருவாக்குதல்.
- பாவனையாளர்கள் சார்ந்த கணக்கெடுப்பு/ஆய்வு மற்றும் ஏனைய நடவடிக்கைகள் தொடர்பில் ஆணைக்குழுவிற்கு தேவையான உதவிகளை விரிவுப்படுத்தல்.

மேலும், பொது மக்களுக்கு பாரிய வகையில் பாதிப்பினை ஏற்படுத்தும் தீர்மானங்களிற்கான பொது ஆலோசனைகளில், பாவனையாளரின் மற்றும் பொது மக்களின் கருத்துக்களை பெறுவதற்கு இவ் சங்கத்தினை ஓர் தொழிற்படும் கருவியாக செயற்படுவதனை ஆணைக்குழு எதிர்பாக்கின்றது.
2012 இல் அனைத்து மாகாணங்களிலும் (ஊவா மற்றும் மேற்கு மாகாணம் தவிர்ந்த) 35 பிராந்திய நுகர்வோர் சங்கங்கள் ஒவ்வொரு மாகாணத்திலும் 5 பிராந்திய நுகர்வோர் சங்கங்கள் என்ற ரீதியில் நிறுவப்பட்டது. 2012 இல் வடக்கு, தெற்கு, வட மத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களில் 20 பிராந்திய நுகர்வோர் சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டன. 2012 இல் இது தொடர்பாக நான்கு தொடக்க கூட்டங்கள் நடைபெற்றன. இதில் மாவட்ட செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள், கிராம உத்தியோகத்தர் மற்றும் பிராந்திய நுகர்வோர் சங்கங்களின் உறுப்பினர்கள் உட்பட்டவர்கள் கலந்து கொண்டனர். பங்கு பற்றியவர்கள் ஆணைக்குழுவின் செய்றபாடுகள், மற்றும் அதன் பங்கு (குறிப்பாக மின்சார கட்டணங்களை நிறுவுவதில்), நுகர்வோர் ஆலோசனைக் குழுவின் பங்கு, பிராந்திய நுகர்வோர் சங்கங்கள் நிறுவதற்கான நோக்கங்கள் அத்துடன் கூட அவ் சங்க உறுப்பினர்களின் செயற்பாடுகள் தொடர்பான தகவல்களை அறிந்து கொண்டனர்.

## நுகர்வோர் ஆலோசனை குழு (நு.ஆ.கு)

இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு சட்டத்தின் 29 பிரிவிற்கு அமைய உருவாக்கப்பட்டது. நுகர்வோர் ஆலோசனைக் குழு தற்போதுள்ள மற்றும் சாத்தியமான சிறிய நுகர்வோரின் விருப்பங்கள் மற்றும் நலன்களை அரசாங்கம், சேவை வழங்குனர் மற்றும் பாரிய எண்ணிக்கையிலான நுவர்வோர்களுக்கு, மாற்று பிரதிநிதித்துவமாக செயற்படுகின்றது.
இவ் நு.ஆ.கு, பல்வேறுப்பட்ட நுகர்வோர் நலன்கள் மற்றும் விருப்பங்களை பிரதிநிதித்துவப்படுத்துவதாக தற்போது 15 உறுப்பினர்களை தெரிவு செய்துள்ளது. இவர்கள் தொண்டு அடிப்படையில் அனைத்து வழக்கமான கூட்டங்களில் பங்கேற்று, தொழிற் துறையுடன் சார்ந்த பல்வேறுப்பட்ட பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடுவர்.

### தற்போதைய உறுப்பினர்கள்

தற்போதுள்ள நுகர்வோர் குழு உறுப்பினர் 15 உறுப்பினர்களை 9 மாகாணங்களை உள்ளடக்கியதாக கொண்டுள்ளது.

- பெற்றோலியத் துறையினை பிரதிநிதித்துவப்படுத்துவதற்கான ஒரு நியமனம்
- நீர் தொழிற் துறையினை பிரதிநிதித்துவப்படுத்துவதற்கான ஒரு நியமனம்
- மின் தொழிற் துறையினை பிரதிநிதித்துவப்படுத்துவதற்கான ஒரு நியமனம்
- தேசிய வர்த்தக சங்கத்தினை பிரதிநிதித்துவப்படுத்துவதற்கான ஒரு நியமனம்
- இலங்கை வர்த்தக சங்கத்தினை பிரதிநிதித்துவப்படுத்துவதற்கான ஒரு நியமனம்
- கூட்டமைப்பு வர்த்தக சங்கத்தினை பிரதிநிதித்துவப்படுத்துவதற்கான ஒரு நியமனம்

### நு.ஆ.கு இன் பணிகள்

இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் சட்டத்தின் பிரிவு 29(3) ஏற்ப இதன் பணிகளாவன:

- இ.பொ.ப.ஆ இற்கு பொருத்தமான பவனையாளர் சேவை தராதரங்களுக்கு ஏற்ப ஆலோசனையளித்தல்.
- பொதுப் பயன்பாடுத் தொழிற் துறைகளினால் வழங்கப்படும் பொருட்கள் அல்லது சேவைகள் பாவனையாளரின் தேவையினை திருப்திப்படுத்துகின்றனவா என்பதனை கண்காணித்தல்.
- பரிந்துரைக்கப்படும் தரத்தின் மீது விழிப்புணர்வை அளித்தல் அல்லது அவ் தரங்களுக்கு ஏற்ப பாவனையாளர்களின் உரிமைகளை தீர்மானித்தல்.

### 2012 இல் நு.ஆ.கு இன் பங்களிப்புக்கள்

கார்த்திகை 2012 இல், பாதுகாப்பு, தரம் மற்றும் தொடர் தன்மையிற்கான ஒழுங்கு விதிகள், செயற்திறன் (பிறப்பாக்க) தராதரங்கள் மற்றும் மரபு ரீதியற்ற புதிப்பிக்கத்தக்க சக்தி கொள்முதல் கட்டணங்களின் அறிவித்தல் முதலியவற்றின் பொது ஆலோசனைக்கு முன்னராக, ஆணைக்குழுவிற்கு ஆலோசனைகளை வழங்குவதில் தீவிரமாக செயல்பட்டது

# ஒழுங்குமுறை செயன்முறையின் போது பொது மக்களின் பங்களிப்பு (பொது ஆலோசனை)

தீர்மானங்கள் மேற்கொள்ளும் முன்னர், பொது ஆலோசனையினூடாக பொதுமக்கள் மற்றும் அக்கரையுடையத் தரப்பினர் தமது கருத்துக்கள் மற்றும் ஆலோசனையினை தெரிவிக்க முடியும். 2012 ஆம் ஆண்டு பின்வரும் பொது ஆலோசனைகள் இடம்பெற்றன:

## 2012-2013 இற்கான மரபு ரீதியற்ற புதிப்பிக்கதக்க சக்தி கொள்முதல் கட்டணம்

2012 மற்றும் 2013 இல் இலங்கை மின்சாரச் சபையினால் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மரபு ரீதியற்ற புதிப்பிக்கதக்க சக்தி பிறப்பாக்கத்திற்குரிய முன்மொழியப்பட்ட கொள்வனவுக் கட்டணமானது இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டது. முன்மொழியப்பட்ட கட்டணத்திற்கான தீர்மானத்தினை எடுக்கும் முன்னர், பொது மக்கள் மற்றும் அக்கரையுடையத் தரப்பினரின் கருத்துக்கள் மற்றும் ஆலோசனையினை பெறும் பொருட்டு 2012 ஆவணி மாதம் ஆணைக்குழு பொது ஆலோசனையினை நடாத்தியது. இதன் போது எழுத்து மூலமான கருத்துக்கள் மற்றும் பேச்சு மூலமான கருத்துக்கள் என்பன சேகரிக்கப்பட்டன. ஆணைக்குழுவானது முடிவாக்கப்பட்ட இறுதி கொள்முதல் கட்டணத்தினை 2012 ஐப்பசி அறிவித்தது. இவ் கட்டணங்கள் 2012 மற்றும் 2013 இல் கைச்சாத்திடப்பட்ட தரமான சக்தி கொள்வனவு ஒப்பந்தத்தின் மீள்புதிப்பிக்கதக்க சக்தியினை அடிப்படையாகக் கொண்ட சக்தி பிறப்பாக்க திட்டங்களுக்குப் பொருத்தமானவை.

மின் பாதுகாப்பு, தரம் மற்றும் தொடர்தன்மை தொடர்பான முன்மொழியப்பட்ட ஒழுங்குவிதிகள் தொடர்பான பொது ஆலோசனை 2012 ஆம் ஆண்டில் மின் பாதுகாப்பு, தரம் மற்றும் தொடர்தன்மை தொடர்பாக ஆணைக்குழுவினால் தயாரிக்கப்பட்ட வரைபு மட்டத்திலான விதிமுறைகளுக்கான பொது ஆலோசனைக்கான அறிவித்தல் 2012 ஐப்பசி மாதம் தேசிய பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டது. அறிவிக்கப்பட்ட தினத்திலிருந்து ஒரு மாத காலத்தினுள் பொது மக்கள், மற்றும் அக்கரையுடையத் தரப்பினரிடமிருந்து கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகள், மின்னஞ்சல் மற்றும் எழுத்து மூலமாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, இறுதி விதிமுறைகளுடன் சேர்க்கப்பட்டுள்ளன. இது ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டு அதன் பின்னர் 2013 இல் அமைச்சசுக்கு சமர்ப்பிக்கப்படவுள்ளது.

## அரசாங்கத்திற்கு கொள்கைகள் தொடர்பான ஆலோசனைகளை வழங்கல்

### ஓப் கிறிட் மின் திட்டங்கள் தொடர்பான ஆலோசனைகளை அரசிற்கு வழங்கல்

நடைமுறையிலுள்ள ஓப் கிறீட் மின் திட்டம் தொடர்பாக ஆணைக்கழுவினால் நடாத்தப்பட்ட கணக்கெடுப்பு மற்றும் ஆய்வுகளின் முடிவுகளின் அப்படையில், 2012 இல் ஆணைக்குழுவின் அனுமதிப்பத்திரம் வழங்கும் பிரிவு, ஓப் கிறிட் மின் திட்டங்கள் தொடர்பான பெருத்தமான பரிந்துரைகளை அரசாங்கத்திற்கு வழங்குவதற்காக அறிக்கையினை தயாரிக்க தொடங்கியது. அத்துடன் பெறப்பட்ட முடிவுகள் திட்டமிடப்பட்ட முயற்சிகளில் பயன்படுத்தவும், பிராந்திய ரீதியில் ஓப் கிறீட் சிறிய நீர் வலு திட்டங்களுக்கான பயிற்சி பட்டறையின் போது உட்சேர்க்கும் பொருட்டு பயன்படுத்தப்படும்.

# உரிமம் வழங்கல்

இ.பொ.ப.ஆ தனது உரிமம் வழங்கும் பங்கில் (மின்வலு சக்தி அமைச்சுடன் உடன்படும் வகையில்) தனியார் மின் உற்பத்தியாளர்களை மதிப்பிடுதல், தேர்வு செய்தல் மற்றும் உரிமம் வழங்கல் செயற்பாடுகளில் நம்பகத் தன்மையினை கொணடுள்ளது. மேலும், இ.பொ.ப.ஆ உரிமம் பெறுனரின் (இலங்கை மின்சாரச் சபை மற்றும் இலங்கை மின்சார தனியார் கம்பனி) விநியோகக்ச் செயல்பாடுகளை தொடர்ந்து கண்காணித்து வருகின்றது. அத்துடன் இவ் இரு உரிமம் பெறுனரிடமிருந்து பிறப்பாக்க செலவு மற்றும் விற்பனை விலைகள் என்பனவற்றின் தகவல்களை மாதாந்த அடிப்படையில் பெற்றுக் கொள்கின்றது.

## பிறப்பாக்க உரிமங்களை அளித்தல்

2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, இலங்கை மின்சாரச் சட்டத்திற்கமைய, ஏதேனும் ஓர் தரப்பினர் மின் பொறித் தொகுதியினை செயற்படுத்தல் அல்லது நிறுவ விரும்பினால் ஆணைக்குழுவிடமிருந்து அனுமதியினை பெறல் வேண்டும். இது நாட்டில் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தின் பாதுகாப்பு, தரம், செயற்திறன் மற்றும் மின் பிறப்பாக்கத் துறையின் தேவையான தரங்களை ஒழுங்குப்படுத்தலுக்கு இன்றியமையாததாகும். இது போன்றே தற்போது இலங்கையில் மின் பிறப்பாக்கம் செய்யும் அனைத்து தரப்பினருக்கு பிறப்பாக்க உரிமம் வழங்கப்படுகின்றது. இன்று வரை இ.மி.ச ஆனது மிகப் பெரிய பிறப்பாக்க உரிமம் பெறுனராக திகழ்கின்றது. 2012 இல் 58 பிறப்பாக்க உரிம்மங்கள் சிறிய நீர் வலு உற்பத்தியாளர்களுக்கு அளிக்கப்பட்டன. அவை முக்கியமாக மரபு ரீதியற்ற மீள் புதிப்பிக்கத்தக்க சக்தி வகைகளான: விவசாய மற்றும் கைத்தொழில் கழிவுகள், உயிர் டென்றோ (மர எரிபொருள்), சூரிய சக்தி, மற்றும் காற்று மூல சக்தி என்பன ஆகும்.

| சிறிய வலு உற்பத்தியாளர் வகை (சி.வ.உ) | 2012 இல் அளிக்கப்பட்ட பிறப்பாக்க உரிமங்கள் |
|---|---|
| விவசாய மற்றும் கைத்தொழில் கழிவுகள் | 01 |
| டென்றோ(மர எரிபொருள்) | 09 |
| சூரிய சக்தி | 01 |
| காற்று மூல சக்தி. | 04 |
| சிறிய நீர் வலு | 42 |

# 2012 இல் வழங்கப்பட்ட பிறப்பாக்க உரிமங்களின் வகைகள்




## உரிமங்களின் விலக்களிப்பு

2009 ஆம் ஆண்டின் இலங்கை மின்சாரச் சட்டத்தின் 20 ஆம் பிரிவிற்கு அமைய, ஆணைக்குழு சில நபர்களை அல்லது சில வகையிக்குரிய நபர்களை மின் பிறப்பாக்க மற்றும் விநியோக உரிமங்களின் விலக்களிப்பினை அனுமதிக்கும். உரிமங்களின் விலக்களிப்பானது, அவ் நபர்கள் அல்லது வகையிக்குரிய நபர்களின் மின் பிறப்பாக்கத்திற்கு சாத்தியமான அல்லது விநியோக மின் அளவு மற்றும் பிறப்பாக்க முறையினை கவனத்திற் கொண்டு அனுமதிக்கப்படும்.

ஆணைக்குழுவினால் விலக்களிப்பு வழங்கப்பட்ட பின்னர், ஓர் வர்த்தமானி அறிவித்தலுடன் கூடிய பொது அறிவித்தல் தேசிய பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டு, அறிவித்தலுடன் தொடர்புடைய தரப்பினர் மற்றும் மின் வலு மற்றும் எரிச்சக்தி அமைச்சிற்கும் அனுப்பிவைக்கப்படும்.

விலக்களிப்பு வழங்கப்பட்ட பின்னர், விநியோகிஸ்தர் ஆணைக்குழுவின் அனுமதிக்காக ஓர் முன்மொழியப்பட்ட மின் கட்டணத்தினை சமர்பிக்க கோரப்படுவார். விநியோக உரிமம் பெறுனரிடம் மின்சாரத்தினை கொள்வனவு செய்து, அதனை குடியிருப்போருக்கு (தொகுதி வீடுகள், வீட்டு கட்டிடங்கள், கடைத் தொகுதிகள், முதலியன) விநியோகிக்கும் சிறிய விநியோகஸ்தர்கள் பொதுவாக இவ் வகையான உரிமமளித்தலில் விலக்களிப்பினை பெறுவர்.

2012 ஆம் ஆண்டில், ஆணைக்குழுவினால் 12 சிறிய விநியோகஸ்தர்களுக்கு உரிம விலக்களிப்பு வழங்கப்பட்டது.

## உரிமம் பெறுனர் தகவல் சமர்ப்பண அமைப்பு (உ.பெ.த.ச.அ) மற்றும் மாதாந்த தகவல் நிர்வாக அமைப்பு (மா.த.நி.அ)

மின்சாரத் துறையினை ஒழுங்குப்படுத்தும் பொருட்டு, ஆணைக்குழுவானது கடத்துகை உரிமம் பெறுனர், விநியோக உரிமம் பெறுனர் மற்றும் பிறப்பாக்க உரிமம் பெறுனரிடமிருந்து அவர்களது செயற்பாடுகள் பற்றி முறையான மற்றும் தரமான தகவல் மேம்படுத்தல் தேவைப்பட்டது. இதனால், புதிய தகவல் சேகரிப்பு அமைப்பொன்று உருவாக்கப்பட்டு தற்போது இணையத்தளத்தினூடான தகவல் சேகரிப்பு வடிவங்களைப் பயன்படுத்தி தகவல் சேகரிப்பு இடம் பெறுகின்றது. இவ் அமைப்பு முறையானது இ.பொ.ப.ஆ இன் உரிமம் பெறுனர் தகவல் சமர்ப்பண அமைப்பு (உ.பெ.த.ச.அ) என அழைக்கப்படுகின்றது. சேகரிக்கப்பட்ட (உ.பெ.த.ச.அ) தரவுகள் சரிபார்க்கப்பட்டு பலவேறு குறிப்பிட்ட காலங்களுக்கான அறிக்கைகள் ஒழுங்குப்படுத்தல் நோக்கங்களுக்காகத் தயாரிக்கப்படுகின்றது. இவ் தகவல் சமர்ப்பண முறையானது 2012 பங்குனி இலிருந்து பயன்பாட்டிலுள்ளது. உரிமம் பெறுனர் ஆணைக்குழுவினால் குறிப்பிடப்பட்ட தரவுகளை நாளாந்த மற்றும் மாதாந்த அடிப்படையில் இவ் அமைப்பினூடாக பதிவேற்றம் செய்யும்படி கோரப்பட்டுள்ளனர். அத்துடன் சக்தி கொள்வனவு மற்றும் விற்பனைக்குரிய தரவுகள், கடத்துகை மற்றும் மொத்த வழங்கல் உரிமம் பெறுனரிடமிருந்து சேகரிக்கப்பட்டுகின்றன. மேலும் இறுதிப் பாவனையாளருக்கு தேவையான சக்தி விற்பனை தரவுகள் விநியோக உரிமம் பெறுனரிடமிருந்து பெறப்படுகின்றது.

2012 இல் உ.பெ.த.ச.அ இனை மேலும் விரிவாக்க மாதாந்த தகவல் நிர்வாக அமைப்பானது (மா.த.நி.அ) எற்படுத்தப்பட்டு, அறிக்கைகளை மாதாந்தம் உருவாக்கும் வசதியினை கருத்திற் கொண்டு கூட்டிணைக்கப்பட்டது. இவ் மாதாந்த தகவல் நிர்வாக அமைப்பு இ.பொ.ப.ஆ நிர்வாகத்திற்கு உரிமம் பெறுனரின் செயல்திறன் மட்டம் மற்றும் மின்சாரத் துறையின் பொது செயல்திறனை பாரிய அளவில் (பாவனையாளர் சக்தி நுகர்வு உட்பட) பகுப்பாய்வு செய்யத் தேவையான தரவுகளை இலகுவில் பெற்றுக்கொள்வதற்கு உதவுகின்றது.

## மரபு ரீதியற்ற மீள் புதிப்பிக்கத்தக்க சக்தி துறை

### மீள் புதிப்பிக்கத்தக்க சக்தி – கொள்கை இலக்குகள்

2013 ஆம் ஆண்டிற்காக 2012 கார்த்திகை பராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில், புதுப்பிக்கத்தக்க சக்தி மூலங்களை மேம்படுத்துவதில் சிறப்பு முக்கியத்துவத்தினை வெளிப்படுத்தியுள்ளது. வரவு செலவு திட்டத்தின் படி, பொருளாதாரத்தில் உருவாக்கப்பட்டுள்ள மேம்படுத்தலின் ஊடாக, அரசாங்கம் குறிப்பிடத்தக்களவு சக்தி தேவைக்கான அதிகரிப்பின் பார்வையின் பக்கம் உள்ளது. பெற்றோலிய பொருட்களின் விலை சமீப காலங்களில் பொருமளவு அதிகரித்ததன் காரணமாக, தற்போதுள்ள அரசு கொள்கைகள் எஞ்சியுள்ள நீர் வலு, காற்று சக்தி, மற்றும் ஏனைய மீள் புதிப்பிக்கதக்க சக்தி மூலங்களை ஆராய்வதற்கான ஊக்குவிப்பினை மேற்கொள்ளல் வேண்டும். இதன் பயனாக, புதிப்பிக்கதக்க சக்தி துறையில் ஈடுப்பட்டுள்ள அனைத்து முகவர்களும் இது தொடர்பான அரசின் கொள்கைகளுக்கு ஆதரவளித்து துணைபுரிவது அவர்களின் பொறுப்பாக அமைகின்றது.

இலங்கையின் தேசிய எரிசக்தி கொள்கை மற்றும் உத்திகள் 2015 ஆம் ஆண்டில், மொத்த மின் உற்பத்தியின் 10% மரபு ரீதியற்ற மீள் புதிப்பிக்கத்தக்க சக்தி மூலங்களிலிருந்து பிறப்பாக்கப்படல் வேண்டும் என்ற இலக்கினை நிர்ணயித்துள்ளது. அத்துடன் “மகிந்த சிந்தனையின் எதிர்கால நோக்கானது” 2020 ஆம் ஆண்டில் மொத்த மின் உற்பத்தியின் 20% மரபு ரீதியற்ற மீள் புதிப்பிக்கத்தக்க சக்தி மூலங்களிலிருந்து பிறப்பாக்கப்படல் வேண்டும் என்ற ஓர் தெளிவான இலக்கினையும் நிர்ணயித்துள்ளது. புதிப்பிக்கத்தகக சக்தியின் மேம்பாட்டிற்காக தனிப்பட்ட ஓர் அமைச்சின் உருவாக்கத்தினூடாக இவ் கொள்கையானது மேலும் வலுப்படுத்தப்பட்டுள்ளது.

மதிப்பீட்ன் படி, அரசாங்க கொள்கைகளுக்கு அமைய, 2015 ஆம் ஆண்டில் மொத்த மின் உற்பத்தியின் 10% ஆன மரபு ரீதியற்ற மீள் புதிப்பிக்கத்தக்க சக்தி மூலங்களிலிருந்து பிறப்பாக்கப்படல் வேண்டும் என்ற இலக்கினை அடைவதற்கு, 1,500கி.வொ.ம அளவான மின்சாரத்தினை, மரபு ரீதியற்ற மீள் புதிப்பிக்கத்தக்க சக்தி மூலங்களிலிருந்து பிறப்பாக்கப்படல் வேண்டும். தற்போது 700கி.வொ.ம அளவான மின்சாரம் மட்டுமே மரபு ரீதியற்ற மீள் புதிப்பிக்கத்தக்க சக்தி மூலங்களிலிருந்து பிறப்பாக்கப்படுகின்றது. ஆகவே, 2015 ஆண்டளவில் அரசு கொள்கையின் இலக்கினை அடைய, மேலதிகமான 800கி.வொ.ம அளவு சக்தி மரபு ரீதியற்ற மீள் புதிப்பிக்கத்தக்க சக்தி மூலங்களிலிருந்து தேவைப்படுகின்றது.

இலங்கை நிலைதகு சக்தி அதிகாரச் சபை, நீண்டகால மரபு ரீதியற்ற மீள் புதிப்பிக்கத்தக்க சக்தி அபிவிருத்தி திட்டங்களைத் தயாரிப்பதற்கான பொறுப்பினை கொண்டுள்ளது. பெறப்பட்ட புள்ளிவிபரங்களின் படி, 10% கொள்கை இலக்கினை அடையத் தேவையான ஒன்று திரட்டப்பட்ட கொள்ளளவுகளின் (மதிப்பிடப்பட்ட) கூட்டானது கீழ் குறிப்பிட்டவாறு அமையும்:

| ஆண்டு | தொழில்நுட்பம் (ஒன்று திரட்டப்பட்ட கொள்ளளவு மொ.வொ) | | | | | மொத்த பிறப்பாக்க % |
|---|---|---|---|---|---|---|
| | உயிர்த்தொகுதி | நீர் வலு | காற்று | ஏனையவை | மொத்தம் | |
| 2012 | 20 | 280 | 35 | 1 | 336 | 9.1 |
| 2013 | 20 | 295 | 85 | 2 | 402 | 9.8 |
| 2014 | 30 | 310 | 85 | 2 | 427 | 9.9 |
| 2015 | 40 | 330 | 85 | 5 | 460 | 10.0 |

ஆதாரம்: இலங்கை நிலைதகு சக்தி அதிகாரச் சபை

மீள் புதிப்பிக்கத்தக்க சக்தித் துறையின் தனித்துவமான அம்சமாக, ஏறக்குறைய அனைத்து பிறப்பாக்க கொள்ளளவுகளும் தனியாருக்கு சொந்தமானதாகும். எனவே, தங்கள் முதலீடுகளுக்கான போட்டித்தன்மையான வருவாயானது; தனியார் முதலீட்டாளர்களை இத்துறையில் தக்கவைப்பதற்கும் மற்றும் புதிய முதலீடுகளை கவருவதற்குறிய முக்கிய காரணிகளாக அமைந்துள்ளது. இதன் விளைவாக, மீள் புதிப்பிக்கத்தக்க சக்தித் துறையின் முதலீட்டினை ஊக்குவிப்பதற்கான முக்கிய பங்கினை ஆணைக்குழு கொண்டுள்ளது.

### இதன் கருத்து, கொள்கை இலக்கினை அடைவதற்கு, எச்லெவினையும் பாவனையாளருக்கு சுமர்த்துவதா?

தேசிய எரிசக்தி கொள்கை மற்றும் உத்திகள், மரபு ரீதியற்ற மீள் புதிப்பிக்கத்தக்க சக்தி மூலோபாயம்மானது எவ்வித மேலதிய சுமையினையும் மின் பாவனையாளருக்கு ஏற்படுக்கூடாது என்பதனை தெளிவாக குறிப்பிட்டுள்ளது. ஆயினும், இவ் இரு முரண்பட்ட இரு நோக்கங்களுக்குமிடையே எவ்வாறு ஒரு சமநிலையினை ஏற்படுத்துவது என்பது கேள்விக் குறியாகவே அமைந்துள்ளது. கொள்கையில் எவ்வித ஒப்பீடக்கூடிய செலவு விபரங்களையும் குறிப்பிடாத பட்சத்தில், “மேலதிக” என்ற வார்த்தையினை வரையறுத்தல் கடினமாகும். எனவே தான், புதிப்பிக்கத்தக்க சக்திக்கான செலவு அவ் ஆண்டின் சராசரி மின் செலவினை தாண்டாமல் இருக்க வேண்டும் எனும் கருத்து நியாயமானது.

### புதிப்பிக்கத்தக்க சக்தி கட்டணங்கள் 2012-2013

முன்னர் வெளியிடப்பட்ட மரபு ரீதியற்ற மீள் புதிப்பிக்கத்தக்க சக்தியின் கொள்வனவு கட்டணமானது 31.12.2011 வரை மட்டுமே செல்லுப்படியானதாகும். அத்துடன் இக் கட்டணங்களின் திருத்தங்களுக்கான இறுதி திகதி 31.12.2011 ஆகும். ஆனாலும் கடத்துகை உரிமம் பெறுனரான இலங்கை மின்சாரச் சபை, 2012-2013 இற்கான மரபு ரீதியற்ற மீள் புதிப்பிக்கத்தக்க சக்தி கொள்முதல் கட்டணத்திற்கான முன்மொழிவினை 21.06.2012 இல் சமர்ப்பித்தது. இது தொடர்பிலான சம்பந்தப்பட்ட தகவல்களை 09.07.2012 அன்று ஆணைக்குழு பெற்றது.

இதனைத் தொடர்ந்து ஆணைக்குழுவானது, இது தொடர்பான பொது ஆலோசனையினை முன்னெடுக்க தீர்மானித்து, அதற்குரிய இ.மி.ச இன் முன்மொழிவினை உள்ளடக்கிய ஆலோசனை ஆவணத்தினை 26.07.2012 அன்று வெளியிட்டது. பொது ஆலோசனைக்கான செயற்பாடுகள் வாய்மூல பிரதிநிதுவப்படுத்தல் உட்பட்ட அமர்வுகளுடன் 28.08.2012 அன்று முடிவு பெற்றது. அக்கரையடைய தரப்பினரினால் 19 எழுத்துமூல மற்றும் வாய் மூல கருத்துக்கள், முன்மொழியப்பட்ட ஆலோசனை ஆவணம் தொடர்பாக தெரிவிக்கப்பட்டன. அத்துடன் கட்டண முன்மொழிவினை மதிப்பிடுவதற்காக, செலவு போக்குகள் தொடர்பாக சர்வதேச ரீதியில் வெளியிடப்பட்ட தகவல்களையும் ஆணைக்குழு ஆராய்ந்தது.

மரபு ரீதியற்ற மீள் புதிப்பிக்கத்தக்க சக்தி அடிப்படையிலான 10மொ.வொ குறைவான பிறப்பாக்கத்தினை உடைய தரமான சக்தி கொள் முதல் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடப்பட்ட 01.01.2012 தொடக்கம் 31.12.2012 வரைக்கான கொள்முதலுக்கான அனுமதிக்கப்பட்ட கட்டணம், கடத்துகை உரிமம் பெறுனருக்கு ஐப்பசி 2012 அன்று வழங்கப்பட்டது

## இறுப்பனவு செயல்முறை

- இலங்கை மின்சாரச் சபையின் கட்டண (இறுப்பனவு) சமர்ப்பிப்பின் மீளாய்வு.
  கடத்துகை உரிமம் பெறுனரினால் விநியோக உரிமம் பெறுனரிடமிருந்து அறவிடப்படும் தொகுதி வழங்கல் கட்டணத்தினை (தொ.வ.க) அறிவதற்கு, ஒவ்வொரு ஆறு மாதத்திற்கும் ஒரு முறை ஆணைக்குழுவினால் ஓர் சீரான தேசிய கட்டணம் சீர்செய்யப்படுகின்றது. இது கடத்துகை உரிமம் பெறுனரினால் சமர்ப்பிக்கப்பட்ட நியாயப்படுத்தக்கூடிய செலவுகளை அடிப்படையாகக் கொண்டு மதிப்பிடப்பட்டுள்ளது.
  2012 இல் முதல் அரை ஆண்டு மற்றும் இறுதி அரை ஆண்டிற்கான தொ.வ.க இலங்கை மின்சாரச் சபையினால் சமர்ப்பிக்கப்பட்டது. ஆணைக்குழு தேவையான சீர்ப்படுத்தல்/திருத்தங்களை மற்றும் மதிப்பீட்டினை மேற்கொண்டு முதல் அரை ஆண்டுக்கான தொ.வ.க அனுமதிக்கப்பட்டது. மிகுதி அரை ஆண்டிற்கான தொ.வ.க முடிவாக்கப்பட்டு ஆணைக்குழுவின் அனுமதிக்காக காத்திருக்கின்றது.
- 2012 ஆம் ஆண்டிற்கான இலங்கை மின்சாரச் சபை மறறும் இலங்கை தனியார் கம்பனியின் அனுமதிக்கப்பட்ட கட்டணங்களுக்கான சமர்ப்பிப்பின் மீளாய்வு.
  2012 இல் இ.மி.ச மற்றும் இ.மி.த.க இனால் சமர்ப்பிக்கப்பட்ட அனுமதிக்கப்பட்ட கட்டணங்கள் (உரிமம் பெறுனரினால் வழங்கப்படும் சேவைகளுக்காக பாவனையாளரிடமிருந்து அறவிடப்படும் கட்டணங்களான: புதிய மின் இணைப்பினை வழங்கல், மின் மானிச் சோதனை, நிறுவுதல் சோதனை, மின் கம்பங்களின் இடமாற்றம் மற்றும் பாவனையாளரினால் உரிமம் பெறுனரிடம் கோரப்படும் ஏனைய சேவைகள்) அனுமதிக்கப்பட்ட கட்டணங்களின் செய்முறைக்கு அமைய மீளாய்வு செய்யப்பட்டு, 2011 ஆண்டின் அனுமதிக்கப்பட்ட கட்டணங்களுடன் எதிராக மதிப்பிடப்பட்டு வேறுபாடுகள் பொருத்தமானதா என ஆராயப்பட்டு அதன் பின்னர் அனுமதிக்கப்பட்டது. இ.மி.ச மற்றும் இ.மி.த.க சமர்ப்பிக்கப்பட்ட அனுமதிக்கப்பட்ட கட்டணங்கள் ஆணைக்குழுவினால் 2012 பங்குனி அனுமதிக்ப்பட்டது

### கேள்வி பக்க நிர்வாகத்தின் ஒழுங்கு விதிகள்

கேள்வி பக்க நிர்வாகத்தின் (கே.ப.நி) கோட்பாடாக பாவனையாளர் தாமாகவே மின் தேவையினை குறைத்து அதனூடாக மின் செயற்திறனை அதிகரிப்பதனை துார நோக்காக கொண்டுள்ளது. 2009 ஆம் ஆண்டு 20 இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்திற்கமைவாக வாளாகங்களுக்கு வழங்கப்பட்டுள்ள மின்சாரத்தின் திறன் மிக்க பாவனையினை ஊக்குவிப்பதனையே ஆணைக்குழு முதன்மை நோக்காக கொண்டுள்ளது. தற்போதுள்ளள பயன்பாடுகளுடன் கே.ப.நி செயற்பாடுகள் வலுவற்றதாக அல்லது இல்லாதாகவும் காணப்பட்ட அதே வேளை, இவ் நிலைமைகள் 1990 களின் பிற்பகுதியில் மின்சாரச் சீர்த்திருத்த நடவடிக்கைகளினால் மேலும் மோசமடைதுள்ளன என்பதனை இ.பொ.ப.ஆ அவதானித்துள்ளது.

அதற்கேற்ப, ஆணைக்குழுவின் செயற்திறன் மிக்க சக்தி மற்றும் மின் சேமிப்பு ஆகிய நோக்கங்களை அடைவதற்கு, முக்கிய கருவியாகிய கே.ப.நி இன் ஒழுங்குவிதிகளை உருவாக்கும் பணியினை மேற் கொள்ள ஒரு பொருத்தமான அறிவுரையாளரை ஈடுபடுத்த தீர்மானித்துள்ளது. இவ் ஒழுங்குவிதிகளினூடாக தேவையான சட்டம் மற்றும் நிறுவன கட்டமைப்பு ஆகியனவற்றின் உருவாக்கம் என்பன எதிர்ப்பாக்கப்படுகின்றது, இதனூடாக பல செயற்திறனான சக்தி திட்டங்களை சிறப்பாக முன்னடுத்து செல்லக் கூடியதாகவிருக்கும். 2012 கார்த்திகை மாதம் தகுதி வாய்ந்த தரப்பினரிடமிருந்து போட்டியான விலைக்கோரல்கள் இவ் ஒழுங்குவிதிகளின் உருவாக்கத்திற்காக அழைக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து, பிரைஸ் வோட்டர் கவுஸ் கோப்பஸ் லிமிட்டட் (கல்கட்டா) இப் பணியினை முன்னெடுக்க தெரிவு செய்யப்பட்டது. தேர்ந்தெடுக்கப்பட்ட அறிவுரையாளரின் ஒப்பந்தத்தினை வழங்குவதற்கான உத்தியோகப்பூர்வ அனுமதி ஆணைக்குழுவின் முடிவிற்காகவுள்ளது.

## ஆய்வுகளும் மற்றும் கற்கைகளும்

### நடைமுறையிலுள்ள ஓப் கிறிட் மின்சாரத் திட்டங்களின் மதிப்பீடு மற்றும் கற்கை

தற்போது இலங்கையில் கிறீட் ஊடுருவல் நிலை 89% ஆகவுள்ளது. இது முறையான கிறீட் விரிவாக்கத் திட்டங்கள் மற்றும் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் வெற்றிகரமான கொள்கைத் திட்டங்களினாடாக இலங்கையின் நெடுந் தொலைவிலுள்ள பகுதிகளுக்கான தேசிய கிறீட் விரிவாக்கத்தினை ஏற்படுத்தக்கூடியதாகவுள்ளது. ஆயினும், இவ் விரிவாக்கத் திட்டங்களின் இறுதி நிலை செலவீனங்கள் கவனமாக மதிப்பிடப்பட்டு, தேசிய அளவில் பெறப்பட்ட பொருளாதார நன்மைக்கு எதிராக ஒப்பிடப்படவில்லை. இலங்கையில் பல கிராமிய நீர் வலுத் திட்டங்கள் (கி.நீ.தி), கிராமிய பொருளாதார வளர்ச்சிக்கான புதிப்பிக்கத்தக்க சக்தி (ஆ.ஈ.ஆ.ஈ.ம) செயற் திட்ட உதவியுடனும் உலக வங்கி மற்றும் உலக சுற்றாடல் வசதியின் (உ.சு.வ) நிதியுடனும் முன்னெடுக்கப்படுகின்றது. இவ் முயற்சிகள் நாட்டில் 3-50கி.வொ கொள்ளளவுடைய 100-150 கிராமிய நீர் வலுத் திட்டங்களை நிறுவ உதவியுள்ளது.

2012 இல் இ.பொ.ப.ஆ தற்போது நடைமுறையிலுள்ள ஓப் கிறீட் மின் திட்டங்கள் தொடர்பாக இரத்தினபுரி, கேகாலை மற்றும் தெனியாய பிரதேசங்களில் ஆய்வினை மேற்கொண்டது. ஓர் தெரிவு செய்யப்பட்ட எண்ணிக்கையிலான பிறப்பாக்க மற்றும் விநியோக விலக்களிப்பிற்காக விண்ணப்பப் படிவங்களை சமர்ப்பித்த ஓப் கிறீட் திட்டங்கள் ஆணைக்குழுவினால் பாதுகாப்பு விதிமுறைகள் மற்றும் தரக் குறைவான நிர்மாணங்கள் தொடர்பாக பரிசோதிக்கப்பட்டன. இவ் நீர் வலுத் திட்டங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை மற்றும் ஆய்வுகளின் போது, இவ் சமூகத்தினருக்கு இது தொடர்பான பரிந்துரைகள் இ.பொ.ப.ஆ இன் அதிகாரிகளினால் வழங்கப்பட்டன. இவ் பரிசோதனைகளின் போது சேகரிக்கப்பட்டத் தரவுகள், ஆணைக்குழுவின் தற்போதுள்ள தரவுகளுடன் இணைக்கப்பட்டு ‘‘நடைமுறையிலுள்ள ஓப் கிறிட் மின்சாரத் திட்டங்களின் மதிப்பீடு மற்றும் கற்கை’’ எனும் அறிக்கை தொகுக்கப்பட்டுள்ளது. அத்துடன் இவ் அறிக்கையாது, இலங்கையின் மின் வலு மற்றும் எரிச்சக்தி தொடர்பில் சமூகங்களின் அபிவிருத்தி சார்ந்த உள்நோக்க கருத்துக்களை வழங்கியுள்ளது.

இவ் ஆய்வினூடாக பெறப்பட்ட முடிவுகள் உத்தியோகபூர்வமாக ஆணைக்குழுவிற்கு விளக்கப்பட்டு, தற்போது இ.பொ.ப.ஆ இணையத்தளத்தில் பொது மக்களின் பார்வைக்காக வெளியிடப்பட்டுள்ளது.

இவ் ஆய்வினூடாக பெறப்பட்ட பிரதான அவதானிப்புக்களாவன: இவ் திட்டங்களில் குறிப்பிட்ட சில நடவடிக்கைகள் அதிக அளவிலான சக்தி விரயமாவதற்கு பங்கு வகித்தன, இத் திட்டங்கள் தொடர்பான விநியோக அமைப்புக்கள் மற்றும் நிர்மாண பணியில் தொழிநுட்ப ஏற்பாடுகள் என்பன உகந்த தேவையாகவுள்ள அதே வேளை, இத் திட்டங்களின நிர்வாகம் மற்றும் மேலாண்மையினை அச்சுறுத்தும் நிலையிலுள்ள சமூக மற்றும் பொருளாதார காரணிகள் என்பனவாகும்.

## நடைமுறையிலுள்ள நீண்ட கால பிறப்பாக்கத் திட்டங்கள் 2009-2022 தொடர்பான கற்கை

எதிர்கால மின் தேவையினை பூர்த்தி செய்யவும், தேசத்திற்கான நீண்டகால, நம்பகரமான மற்றும் பாதுகாப்பான மின் வலு மற்றும் எரிசக்தியினை உறுதி செய்யவும் மின் பிறப்பாக்க அமைப்புக்கள் தொடர்பாக போதுமான திட்டமிடல் மிக இன்றியமையாதது. இலங்கை மின்சாரச் சபையின் நீண்ட கால பிறப்பாக்கத் திட்டங்கள் (2009-2022) தொடர்பான ஆய்வினை அடிப்படையாகக் கொண்டு, 2012 இல் ஆணைக்குழு அறிக்கையினை தொகுத்தது. இவ் அறிக்கையானது இ.மி.ச இன் தற்போதைய மின் பிறப்பாக்கத் திட்டங்களின் குறைப்பாடுகள் மற்றும் இவ் நீண்டகால பிறப்பாக்க திட்டங்களை பாதிக்கும் உண்மையான நடைமுறைக் காரணங்கள் என்பனவற்றை அடையாளம் கண்டுள்ளது. இவ் அறிக்கையின் முக்கிய முடிவாக: முன் மதிப்பிடப்பட்ட நீண்டகால சக்தி தேவைக்கும் உண்மையான நீண்டகால சக்தி தேவைக்குமிடையே குறிப்பிடத்தக்க முரண்பாடுகள் காணப்பட்டது.

## மின் சம்பவங்கள் மற்றும் பாதுகாப்பு அறிக்கை

மின்சார விதிமுறைகளான பாதுகாப்பு, தரம் மற்றும் தொடர் தன்மை என்பன தற்போது ஆணைக்குழுவின் பரிசீலனைக்காகவுள்ளது. குறிப்பாக அனைத்து மின் விபத்துக்கள் உரிமம் பெறுனர், விலக்களிக்கப்பட்ட நபர்கள் மற்றும் பொது மக்களினால் ஆணைக்குழுவிற்கு அறிவிக்கப்படல் வேண்டும்.

ஆனாலும் ஓர் ஒழுங்கு முறையான புகார் அளிக்கும் பொறி முறை இன்னும் உருவாக்கப்படவில்லை. நீண்டகால ஆய்வுகள் இல்லாமல் இதனை நடைமுறைப்படுத்தல் மற்றும் மின் பாதுகாப்பு முன்னேற்றங்கள் சாத்தியமானவை அல்ல. தற்போது மின் சக்தி எரிசக்தி அமைச்சு மற்றும் தொழில் திணைக்களம் என்பன இணைந்து மின் விபத்துக்கள் மற்றும் மரணங்கள் தொடர்பான அறிக்கையினை தயாரிப்பதில் ஈடுபட்டுள்ளன. 2012 இல் ஆணைக்குழுவின் அனுமதிப்பத்திரங்கள் வழங்கும் பிரிவு ‘‘மின் சம்பவங்கள் மற்றும் பாதுகாப்பு அறிக்கை’’ எனும் தலைப்பில் அறிக்கையினை தயாரித்தது. இவ் அறிக்கை இலங்கையில் அண்மைக் காலங்களில் நிகழ்ந்த மின் சம்பவங்கள் தொடர்பான பகுப்பாய்வினை வழங்கியுள்ளது. இ.பொ.ப.ஆ இனால் ஆராயப்பட்டு இதற்குரிய சாத்தியமான எதிர் நடவடிக்கைகளை முன்மொழிந்தது. இதனூடாக மின் சம்பவங்கள் அதனுடன் தொடர்புடைய ஆபத்துக்களை மட்டுப்படுத்தக் கூடியதாயும், நிதி இழப்பினை குறைக்கக் கூடியதாயும் உள்ளது. இவ் அறிக்கை ஆணைக்குழுவின் பரிசோதகர் பிரிவினால் பாதுகாப்பு பரிசோதனைகளின் போது சேகரிக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில் அமைந்துள்ளது. மேலும் இவ் அறிக்கை தயாரிப்பின் போதும், மின் விபத்துக்கள் தொடர்பான தரக் கணிப்பீட்டின் போதும், பிற நாடுகளில் நிலவுகின்ற நடைமுறைகள் மற்றும் செயல்முறைகள் என்பன கவனத்தில் கொள்ளப்பட்டன. இதைத் தவிர, இவ் அறிக்கையின் முன்மொழிவு மற்றும் முடிவுகளிற்காக உள்நாட்டு ஊடகங்களின் அறிக்கைளும் பயன்படுத்தப்பட்டன.

இவ் அறிக்கையின் முக்கிய பரிந்துரைகளாவன: மின் சாதனங்களின் முறையான செயற்பாடு மற்றும் சந்தையிலுள்ள உபகரணங்கள் மற்றும் கருவிகளின் தரக்கட்டுப்பாடு முதலியவற்றை வலியுறுத்தும் நடைமுறைகள் மற்றும் தொழில் நுட்ப பரிசோதனை என்பன மின் பாதுகாப்பிற்கு இன்றியமையாதன, அத்துடன் மின் தொடர்பான சம்பவங்கள் மற்றும் விபத்துக்கள் போன்ற நிகழ்வுகளை அறிவிப்பதற்கான ஒரு தரவு மையத்தின் உருவாக்கம், விபத்து மதிப்பீடு மற்றும் இடர் கணிப்பீடு தொடர்பான ஆதாய இழப்பினை (செலவுகளுக்கான தற்போதைய பணப் பெறுமதி) அறிவதற்குரிய முறைமையினை உருவாக்கும் தேவை, மின் பாதுகாப்பினை உறுதி செய்ய மின் பாதுகாப்பிற்கான மட்டக்குறியினை உருவாக்கம் தேவை முதலியன இதில் பரிந்துரைகளாக கண்டறியப்பட்டுள்ளது.

இவ் அறிக்கையின் பரிந்துரைக்கு அமைய, இ.பொ.ப.ஆ 2013 இல் மின் விபத்துக்கள் மற்றும் சம்பவங்கள் தொடர்பான தகவல் மையத்தினை உருவாக்க எதிர்பாத்திருக்கின்றது. இது அனைத்து அக்கரையுடையத் தரப்பினர் மற்றும் பொது மக்கள் பாதுகாப்பு தொடர்பான தகவல்களை அணுகுவதற்றும், தகவல் ஓட்டத்தின ஒழுங்குப்படுத்தலுக்கும் உதவும்.

## புதிப்பிக்கத்தக்க சக்தியின் சாதனைகள் தொடர்பான ஆண்டறிக்கை

இலங்கையின் தேசிய சக்தி கொள்கைக்கு அமைவாக, உள்நாட்டு சக்தி வளங்களின் விருத்தி ஓர் முக்கிய கூறாக அமைந்துள்ளது. 2011 இல் தேசிய கிறீட் இன் 6.25% சக்தி பிறப்பாக்கமானது மரபு ரீதியற்ற மீள் புதிப்பிக்கத்தக்க சக்தி மூலங்களிலிருந்து பிறப்பிக்கப்பட்டது. 2011 இன் இறுதியில் கிறீட் முறைக்கூடாக இணைக்கப்பட்டு நிறுவப்பட்ட மரபு ரீதியற்ற மீள் புதிப்பிக்கதக்க சக்தி மூலங்களிலிருந்து பிறப்பாக்கப்படும் மின் கொள்ளவு 243.7 மெ.வொ ஆக காணப்பட்டது. இது 91 சிறிய நீர் மின் பிறப்பாக்கி நிலையங்கள், 6 காற்று மின் பிறப்பாக்கி நிலையங்கள், 4 சூரிய சக்தி மின் பிறப்பாக்கி நிலையங்கள் மற்றும் 4 உயிரணுத்திணிவு மின் பிறப்பாக்கி நிலையங்களை உள்ளடக்கியுள்ளது. இவ்வாறான செயற்பாட்டினை மேற்கொள்ளுபவர்கள் சிறிய மின் உற்பத்தியாளர்கள் (சி.மி.உ) என அழைக்கப்படுகின்றனர். ஆயினும், பரம்பரிய பாரிய மின் உற்பத்தி நிலையங்களுடன் ஒப்பிடும் போது மரபு ரீதியற்ற மீள் புதிப்பிக்கத்தக்க சக்தி துறை தேசிய கிறீட் இற்கு இன்னும் முக்கியத்துவமற்றதாகவே காணப்படுகின்றது.

2012 இல் ஆணைக்குழுவானது, “மீள் புதிப்பிக்கத்தக்க சக்தி துறையின் 2011 இற்கான சாதனைகள்” எனும் அறிக்கையினை தயாரித்தது. இவ் அறிக்கைக்கான தரவுகள் இ.பொ.ப.ஆ இன் உரிமம் பெறுனர் தகவல் சமர்ப்பண அமைப்பிற்கூடாகவும் மற்றும் ‘எனஜி வைஸ்’ கம்பனியின் தரவுகளுடாகவும் பெறப்பட்டு தொகுக்கப்பட்டது. அத்துடன் நிலையான சக்தி அதிகாரச் சபையின் மரபு ரிதியற்ற மீள் புதிப்பிக்கத்தக்க சக்தி உற்பத்தி நிலையங்களின் கொள்ளவு அபிவிருத்தி ஆகியவற்றிலிருந்தும் தகவல்கள் சேகரிக்கப்பட்டன. தயாரிக்கப்பட்ட அறிக்கையானது ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டு தற்போது இ.பொ.ப.ஆ இன் இணையத்தளத்தல் கிடைக்ககூடியதாகவுள்ளது.

இவ் அறிக்கையின் முக்கிய பரிந்துரைகளாவன: உயர் ஆரம்ப முதலீடுகள் காரணமாக மரபு ரீதியற்ற மீள் புதிப்பிக்கத்தக்க சக்தி உற்பத்தி நிலையங்களின் நீடிப்பிற்கு அரசாங்க மானியங்களின் தேவை, மிக முக்கியமானதாகும். மேலும் மரபு ரீதியற்ற மீள் புதிப்பிக்கத்தக்க சக்தித் துறையின் தொழிநுட்பம் தொடர்பான அறிவு மற்றும் திறன்களின் மேம்பாடு முக்கியமானதாகும். அத்துடன் “நிகர அளவீட்டுத் திட்டத்தின்” ஊடான மின் உற்பத்தி செய்யும் நிலையிலுள்ள வீட்டு மின் பாவனையாளரின் இணைப்பு தொடர்பான விழிப்புணர்வு உருவாக்கம் போன்றனவாகும்.

## கடத்துகை அமைப்பின் செயற்திறன் அறிக்கை- 2011 மற்றும் 2012 (முதல் அரையாண்டு)

இலங்கையின் மின் கடத்துகை வலையமைப்பானது இலங்கை மின்சாரச் சபைக்கு உரித்தானதும் அதனால் இயக்கப்படுவதாகும். இலங்கை மின் கடத்துகையின் பாதுகாப்பு மற்றும் திறமையானதுமான செயற்பாடுகளிற்கு இ.மி.ச ஆனது பொறுப்பாக உள்ளது. இவ் கடத்துகை வலையமைப்பின் இயக்கமானது, மின் பிறப்பாக்கி நிலையங்களிலிருந்து, மொத்த தின் வழுங்கல் நிலையங்கள் வரை 220கி.வோ மற்றும் 132கி.வோ அளவில் மின்சாரத்தினை கடத்துகின்றது. இ.பொ.ப.ஆ மின்சாரத்துறையின் ஒழுங்குறுத்துனர் என்ற ரீதியில் மின் கடத்துகை அமைப்பின் தொழிநுட்ப செயற்பாடுகளை கண்காணிக்கும் தேவை அதற்குள்ளது. 2012 இல் ஆணைக்குழுவினால், கடத்துகை செயற்திறன் அறிக்கை 2011 மற்றும் 2012 முதல் அரையாண்டு தொகுக்கப்பட்டது. இவ் அறிக்கையானது இலங்கையின் மின்சார கடத்துகை அமைப்பின் பல முக்கியமான செயற்திறன் சுட்டிகளின் (காட்டிகள்) கணிப்பு மற்றும் விபரங்களை விளக்குகின்றது. இதன் தரவுகள் இ.பொ.ப.ஆ இன் உரிமம் பொறுனர் தகவல் சமர்ப்பண அமைப்பினுாடாக மற்றும் இ.மி.ச இன் மீளாய்வு அறிக்கையிலிருந்தும் பெறப்பட்டடு, பின் இவ் செயற்திறன் சுட்டிகள் கண்டறியப்பட்டன. இச் சுட்டிகள் மின் கடத்துகை வலையமைபபிற்கு சேவையின் கிடைப்புத் தன்மை, மின் வழுங்கலின் தரம் மற்றும் பாதுகாப்பு என்பவற்றினை உள்ளடக்கின்றது. இவ் அறியப்பட்ட காட்டிகள், கடத்துகை உரிமம் பெறுனரின் எதிர்கால செயல்திறன் ஒப்பீடு மற்றும் சர்வதேச ரீதியிலான தரப்படுத்தல் என்பனவற்றிற்கு உதவும்.

2011 இன் பிரதான முடிவுகளாக: கடத்துகை இழப்புக்கள், மின் வழங்கலின் பாதுகாப்பு, சக்தியின் தரம் அத்துடன் கடத்துகையின் வழிகள் மற்றும் பிறப்பாக்கிகளின் கிடைப்புத்தன்மை போன்றன கண்டறியப்பட்டன. 2012 இன் முதல் அரையாண்டினை உள்ளடக்கும் அறிக்கையானது, 2011 இல் பெறப்பட்ட புள்ளி விபரங்ளுக்கும் 2012 இன் முதல் அரை ஆண்டில் பெறப்பட்ட புள்ளி விபரங்களுக்குமிடையிலான ஒப்பீட்டினை உருவாக்கியுள்ளது. இவ் அறிக்கையின் முக்கிய அவதானிப்புக்களாவன: 2011 இனை விட ஒப்பீட்டளவில் கடத்துகை வழியின் கிடைப்புத் தன்மையில் முன்னேற்றம் கண்டுள்ளது. அத்துடன் கடத்துகை இழப்பில் உயர்வு: 2012 இல் 5.1% ஆகவும் 2011 இல் 4.5% ஆகவும் காணப்பட்டது. மேலும், குறுக்கீடுகள் காரணமாக, 2012 இல் 2011 இனை விட கணிப்பிடப்பட்ட பாவனையாளருக்கு வழங்கப்படாத சக்தியில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. இரண்டு அறிக்கைகளும் 2012 இல் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டு, தற்போது பொது மக்கள் மற்றும் அக்கரையுடைய தரப்பினரின் பார்வைக்காக இ.பொ.ப.ஆ இன் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

## பிறப்பாக்க அமைப்பின் செயற்திறன் அறிக்கை- 2011 மற்றும் 2012 (முதல் அரையாண்டு)

ஆணைக்குழுவினால் 2011 மற்றும் 2012 இன் முதல் அரை ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட பிறப்பாக்க செயற்திறன் அறிக்கையானது இலங்கையின் 2011 மற்றும் 2012 இன் முதல் அரை ஆண்டின் பிறப்பாக்க தொகுதிகளின் தகவல்களின் சுருக்கம் மற்றும் செயல் திறன் தொடர்பான புள்ளிவிபரவியல் தகவல்களை உள்ளடக்கியுள்ளது. 2011 அறிக்கையில் பெறப்பட்ட முடிவுகளின் அடிப்படையில்: புள்ளிவிபரங்களின் படி, இலங்கையின் 2011 ஆம் ஆண்டிற்கான அதிகப்பட்ச மின் தேவை 2163 மெ.வொ ஆக காணப்பட்டது. தற்போது இவ் மின் தேவையினை பூர்த்தி செய்ய 3140 மெ.வொ மொத்த கொள்ளவுடைய 139 கிறிட் இணைப்பினை கொண்ட, 2011 முதல் செயற்படுகின்ற மின் உற்பத்தி நிலையங்கள் இயங்குகின்றன. இதில் 23 மின் உற்பத்தி நிலையங்கள் இ.மி.ச இற்கு சொந்தமானதும் இயக்கப்படுவதுமாகும். இவை 16 நீர் வலு உற்பத்தி நிலையங்கள், 6 வெப்ப மின் உற்பத்தி நிலையம் மற்றும் 1 காற்று மூல மின் உற்பத்தி நிலையம் ஆகியவற்றை உள்ளடக்கிந்னது. 11 வெப்ப உற்பத்தி நிலையங்கள் தனிப்பட்ட சக்தி உற்பத்தியாளரினால் (த.ச.உ) மற்றும் 104 சிறிய சக்தி உற்பத்தி நிலையங்கள், சிறிய சக்தி உற்பத்தியாளருக்கு (சி.ச.உ) சொந்தமானதும் அவர்களால் இயக்கப்படுவனவாகும். இதில் சிறிய நீர் வலு உற்பத்தி நிலையம், சூரிய மூல சக்தி உற்பத்தி நிலையம், காற்று மூல சக்தி உற்பத்தி நிலையம் மற்றும் உயிரணுத் திணிவு சக்தி உற்பத்தி நிலையங்களை உள்ளடக்கின்றன. 2012 இன் முதல் அரையாண்டு அறிக்கையில் பெறப்பட்ட முடிவுகளாவன: இலங்கையின் அதிகபட்ச மின் தேவை 2146 மெ.வொ (மரபு ரீதியற்ற புதிப்பிக்கத்தக்க சக்தி மூலங்கள் உட்பட) ஆகும். ஆகவே, மின் தேவையின் சிறியளவிளான குறைப்பு 2012 இன் அரையாண்டினை 2011 உடன் ஒப்பிடுகையில் கண்டறியப்பட்டது.

2012 முதல் அரையாண்டில் 3277 மெ.வொ மொத்த கொள்ளவினையுடைய 145 கிறீடுடன் இணைக்கப்பட்ட மின் உற்பத்தி நிலையங்களும் யாழ்ப்பாண குடாநாட்டில் 03 உற்பத்தி நிலையங்களும் செயற்பாட்டிலிருந்தன. இவற்றில் 24 மின் உற்பத்தி நிலையங்கள் இலங்கை மின்சாரச் சபையிற்கு உரித்தானதும் இயக்கப்படுவதுமாகும். இது 17 நீர் வலு உற்பத்தி, 6 வெப்ப வலு உற்பத்தி மற்றும் காற்று மூல மின் உற்பத்தி நிலையத்தினை உள்ளடக்கின்றது. 2012 இன் முதல் 6 மாத காலப் பகுதியிலுனுள், இ.மி.ச இன் பிறப்பாக்க கொள்ளவினை மேம்படுத்தும் நோக்காகக் கொண்டு 150 மெ.வொ கொள்ளவுடைய மேல் கொத்மலை நீர் வலு உற்பத்தி நிலையம் தேசிய கிறீட் உடன் இணைக்கப்பட்டது. 11 வெப்ப உற்பத்தி நிலையங்கள் தனியார் சக்தி உற்பத்தியாளரினாலும் (த.ச.உ) மற்றும் 109 புதிப்பிக்கத்தக்க உற்பத்தி நிலையங்கள் சிறிய சக்தி உற்பத்தியாளரினாலும் (சி.ச.உ) செயற்படுத்தப்படுகின்றன. இது சிறிய நீர் வலு, சூரிய சக்தி, காற்று மூல மற்றும் உயிரணுத்திணிவு மின் உற்பத்தி நிலையங்களை உள்ளடக்கின்றது. 2012 இன் முதல் அரை ஆண்டில், நாட்டின் மின் பிறப்பாக்க கொள்ளவினை உயர்த்தும் பொருட்டு 5 புதிய புதிப்பிக்கத்தக்க மின் உற்பத்தி நிலையங்கள் நிறுவப்பட்டன. இவ் இரண்டு அறிக்கைகளும் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டு, தற்போது, பொது மக்களின் பார்வைக்காக இ.பொ.ப.ஆ இன் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளன.

## விநியோக உரிமம் பொறுனரின் செயற்திறன் அறிக்கை - 2011 மற்றும் 2012 (முதல் அரையாண்டு)

இலங்கை மின்சாரத் துறையானது ஐந்து விநியோக உரிமம் பொறுனர்களை உள்ளடக்கியுள்ளது. அவையாவன: இ.மி.ச இன் பிராந்தியம் 1, இ.மி.ச இன் பிராந்தியம் 2, இ.மி.ச இன் பிராந்தியம் 3, இ.மி.ச இன் பிராந்தியம் 4 மற்றும் இ.மி.த.க (லெகோ) ஆகும். தற்போது உரிமம் பொறுனரினால் பாவனையாளருக்கு விற்கப்படும் மின்சாரம் (சக்தி) ஆண்டிற்கு 10 பில்லியன் கி.வொ.ம வரை எட்டியுள்ளது.

2012 இல் ஆணைக்குழு , 2011 ஆம் ஆண்டு மற்றும் 2012 இன் முதல் அரை ஆண்ற்காக ஒவ்வொரு உரிமம் பொறுனரினதும் செயற்திறனை பகுப்பாய்வு செய்து, இரண்டு அறிக்கைகளை தொகுத்தது. 2011 இற்கான அறிக்கையின் முடிவுகளின் படி, இ.மி.ச இன் பிராந்தியம் 2 ஆனது, மின் இழப்புக்கள் தொடர்பான செயற்பாடுகளில் திறமையாக செயற்பட்டு, சக்தி இழப்புக்களை(விநியோக செயற்பாடுகளின் போது ஏற்படும்), அனுமதிக்கப்பட்ட சக்தி இழப்புக்களை விட (ஆணைக்குழுவினால் குறிப்பிடப்பட்ட இழப்புக்கள்) கீழ் மட்டத்தில் பேணி, ஏனைய விநியோக உரிமம் பெறுனர்களை விட உயர் வரம்பு எல்லையில் (மிகக் குறைந்த சக்தி இழப்பீடு) பேணியது. அதேசமயம் இ.மி.ச இன் பிராந்தியம் 3 செயற்திறன் அற்றதாகவும், அனுமதிக்கப்பட்ட எல்லையைவிட கீழ் மட்ட நிலையில் தொழிற்படுவதாகவும், அதன் அனுமதிக்கப்பட்ட இழப்புக்கள் உயர்வாகவும் காணப்பட்டன. 2011 இன் ஒட்டுமொத்தமான விநியோக செயற்பாட்டின் போது மின் விரயம் (சக்தி இழப்பு) 7.5% ஆக காணப்பட்டது. இ.மி.ச இன் பிராந்தியம் 1, 2011 இல் ஆகக்கூடிய பாவனையாளர் வளர்ச்சியினை பதிவு செய்தது. இது இரண்டாவது நிலையிலுள்ள பாரிய அளவிலான பாவனையாளரின் எண்ணிக்கையினை கொண்டுள்ளது. இ.மி.ச இன் பிராந்தியம் 2 மின் அதிகளவிலான பாவனையாளர் எண்ணிக்கை மற்றும் உயர்வான விற்பனையினை தன் வசமாக்கியது. வழங்கப்பட்ட பாவனையாளர் சேவை தொடர்பான மதிப்பீடானது, புதிய மின் வழங்கள் மற்றும் வழங்க வேண்டிய மின் இணைப்புக்கள் என்பனவற்றைக் கருத்தில் கொள்ளப்பட்டது. இவ் மதிப்பீட்டினூடாக இ.மி.ச இன் பிராந்தியம் 1, இ.மி.ச இற்கு சொந்தமான ஏனைய விநியோக உரிமம் பெறுனருடன் ஒப்பிடுகையில் செயற்திறனற்றதாகவும் அத்துடன இ.மி.ச இன் பிராந்தியம் 4, சிறந்த செயற்திறன் உள்ளதாகவும் காணப்பட்டன. 2011 ஆம் ஆண்டில் அனைத்து விநியோக உரிமம் பெறுனரினாலும் கொள்வனவு செய்யப்பட்ட மொத்த சக்தி அண்ணளவாக, 11 பில்லியன் கி.வொ.ம அலகுகளாகும். இதில் 9.8 பில்லியன் கி.வொ.ம அலகுகள் பாவனையாளருக்கு விற்கப்பட்டன (இது வீதி விளக்குகளின் சக்தி நுகர்வினை தவிர).

2012 இன் முதல் அரை ஆண்டிற்கான விநியோக உரிமம் பெறுனரின் தரவுகள் ஆணைக்குழுவினால் பகுப்பாய்வு செய்யப்பட்டு, தொகுக்கப்பட்டதின் படி: இவ் ஐந்து உரிமம் பெறுனரினால், விற்கப்பட்ட மின்சாரம் 5 பில்லியன் அலகுகளாகும். இவ் விநியோக உரிமம் பெறுனர், மின்சாரத்தினை கடத்துகை உரிமம் பெறுனரிடம் ரூபா 51 பில்லியன்களுக்கு கொள்ளனவு செய்து, விநியோக வியாபாரத்தினூடாக ரூபா 71 பில்லியன்களை வருமானமாக பெற்றுள்ளனர். அத்துடன் 2012 முதல் அரையாண்டில் அனைத்து விநியோக உரிமம் பெறுனர் தமது வலையமைப்பின் சக்தி இழப்பினை இ.பொ.ப.ஆ இவ் அறிவுறுத்தலுக்கு அமைய, இழப்பினை தக்க வைத்துக் கொண்டனர். இதில் இ.மி.த.க (லெகொ) ஆகக் குறைந்த மின் வலையமைப்பு இழப்பாக 4.5% ஐ பதிவு செய்துள்ளது. மேலும் விநியோக உரிமம் பெறுனர் பிராந்தியம் 2, ஆகக் கூடிய இழப்பாக 9.6% இனை கொண்டுள்ளது. 2012 அரையாண்டின் ஒட்டுமொத்தமான சக்தி இழப்பாக 7.4% கண்டறியப்பட்டுள்ளது. இது இழப்பு வீதத்தில் சற்று குறைப்பினை ஏற்படுத்தியுள்ளது.

இ.பொ.ப.ஆ இனால் பகுப்பாய்விற்குட்படுத்தப்பட்டு தொகுக்கப்பட்ட விநியோக உரிமம் பெறுனரின் செயற்திறன் மற்றும் முன்னேற்றம் தொடர்பான அறிக்கையானது; பொது மக்கள் மற்றும் அக்கரையுடைய தரப்பினருக்கு, விநியோக உரிமம் பெறுனரின் செயற்திறன் தொடர்பிலான முன்னேற்றமடைந்த வெளிப்படைத் தன்மையினை உறுதிப்படுத்துதலாகும். மேலும், விநியோக உரிமம் பெறுனரினால் வலையமைபடபில் ஏற்படக்கூடிய பொருத்தமான இழப்பபக்களை ஆணைக்குழு கண்டறிந்து, விநியோக செயற்பாட்டின் போது ஏற்படும் மின் விரயமாதலை தடுப்பதற்குரிய வழிமுறைகளை வகுக்க உதவுதலும் இதனூடாக விநியோக உரிமம் பெறுனரின் செயற்பாட்டுத் திறனை உயர்த்துவதிலும் துணைபுரிதல் என்பனவாகும்.

2011 ஆம் ஆண்ற்கான விநியோக உரிமம் பெறுனரின் செயற்திறன் அறிக்கை முடிவாக்கப்படும் முன், விநியோக உரிமம் பெறுனரிடமிருந்து கருத்துக்கள் பெறப்பட்டன. தற்போது இவ் அறிக்கையானது ஆணைக்குழுவின் இணையத்தளத்தில் கிடைக்கப்பெறுகின்றன. மேலும், 2012 இன் முதல் அரையாண்டிற்கான விநியோக செயற்திறன் அறிக்கையானது தற்போது முடிவுபெறும் நிலையிலுள்ளது. இது 2013 இல் பொது மக்களின் பார்வைக்காக ஆணைக்குழுவின் இணையத்தளத்தில் வெளியிடப்படும்.

## மின் தேவையின் உச்ச பாவனை நேர அமைப்பினை மாற்றம் செய்வதற்கான கற்றல் அறிக்கை

நாட்டின் நாளாந்த மின் நுகர்வு தேவையின் வரைபு அமைப்பானது, மலை வேலைகளில் உச்ச நுகர்வினை கொண்டுள்ளது. இவ் கற்றல் தேவையானது தற்போதுள்ள மின் உச்ச தேவை வளைவினை ஏற்படுத்தலுக்குரிய காரணிகள் மற்றும் செய்முறை ரீதியில் இவ் உச்ச வளைவினை ஒரு நேர்கோட்டிற்கு கொண்டுவருவதற்குரிய காரணிகளை கண்டறியும் நோக்கினை கொண்டதாகும். மேலும் இவ் அறிக்கையில் 2011 இற்கான மின் கட்டணங்கள் தொடர்பிலான பாவனையாளர்களின் கருத்துக்கள் மற்றும் அதற்குரிய பரிந்துரைகள் என்பனவற்றை உள்ளடக்கியுள்ளது. இவ் அறிக்கையானது தற்போது ஆணைக்குழுவின் இணையத்தளத்தில் பொது மக்களின் பார்வைக்காகவுள்ளது.

## மின் பாவனையாளரின் மின் நுகர்வு முறைகள் தொடர்பான அறிக்கை

இவ் அறிக்கையானது வெவ்வேறு வகைக்குரிய மின் பாவனையாளரின் மின் நுகர்வு முறைகள் தொடர்பாக சேகரிக்கப்பட்ட தரவுகள் மற்றும் புள்ளிவிபரங்கள், அத்துடன் 2011 இல் வேறுப்பட்ட வகையான பாவனையாளரிடமிருந்து பெறப்பட்ட வருமானம் தொடர்பான தரவுகள் என்பனவற்றை உள்ளடக்கியுள்ளது. இவ் அறிக்கை தற்போது ஆணைக்குழுவின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

## ஒழுங்குவிதிகள்/விதிகள்/நடவடிக்கைமுறை/கோவை/செயல்முறைகள் மற்றும் நெறிகள்

### ஒழுங்குவிதிகள்

### விநியோக செயல்திறன் தரநிலைகள் பற்றிய ஒழுங்குவிதிகள்

2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, இலங்கை மின்சார சட்டத்திற்கு அமைவாக, ஆனைக்குழு மின் வழங்கல் சேவைகள் மற்றும் மின் மானி சார்ந்த சேவைகள் தொடர்பான பாதுகாப்பு, தரம், தொடர்ச்சி மற்றும் நம்பகத்தன்மை தொடர்பாக தேவைப்படும் தொழிநுட்ப மற்றும் ஏனைய தரங்கள் சார்பாக ஒரு கட்டாய வலுவுதற்கிடுதலினை ஆணைக்குழு அமைத்தல் வேண்டும். ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் சக்தித்துறை அபிவிருத்தி ஒழுங்குவிதிகளுக்குரிய தொழிநுட்ப உதவி திட்டத்தின் கீழ், ஆணைக்குழு 2012 இல் விநியோக செயல்திறன் தரநிலைகள் தொடர்பான ஒழுங்குவிதிகளை உருவாக்கியது. (திட்டம் இல. 7265- SRI). இவ் ஒழுங்கு விதிகள் விநியோக உரிமம் பெறுனரினால் மின் விநியோகம் மற்றும் மின் வழஙகல், இழப்புக்கள் அல்லது சேதஙகளுக்கான நஷ்டஈடு மற்றும் செயற்திறன் தரங்களுடன் உடன்பாடு இல்லாமைக்காக அறவிடப்படும் அபராதங்கள் தொடர்பாக அடைய வேண்டிய தராதரங்களை விளக்கப்படுத்துகின்றது. இவ் ஒழுங்கு விதிகள் இ.மி.ச மற்றும் இ.மி.த.க(லெகொ) என்பவற்றின் ஆலோசனையுடன் தயாரிக்கப்பட்டது. அத்துடன் முடிவாக்கப்படும் முன், இது தொடர்பாக பொது ஆலோசனை நடாத்தப்பட்டு பொதுமக்களின் கருத்துக்கள் பெறப்பட்டன. அதன் பின்னர் இவ் ஒழுங்கு விதிகள் ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்டு, வர்த்தமானி அறிவித்தலுக்காக மின்வலு சக்தி அமைச்சுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

### பாதுகாப்பு, தரம் மற்றும் தொடர் தன்மை பற்றிய ஒழுங்குவிதிகள்

மேற்கூறிய தேவையின் படி: கடத்துகை, விநியோகம் மற்றும் மின் வழங்களின் போது ஏற்படும் ஆபத்துக்களின் போது பொதுமக்கள் மற்றும் பாவனையாளர்களை பாதுகாக்கும் நோக்காகக் கொண்டு மின் பாதுகாப்பு, தரம் மற்றும் தொடர்தன்மை தொடர்பான ஒழுங்கு விதிமுறைகள் தயாரிக்கப்படுகின்றன. 2010 இல் இ.மி.ச, இ.மி.த.க (லெகோ) மற்றும் இ.பொ.ப.ஆ இன் பிரதிநிதிகளை உள்ளடக்கிய குழுவினால் தயாரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின் வரைபு 2012 இல் ஆணைக்குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது. திருத்தப்பட்ட ஒழுங்கு விதிகள் இ.மி.ச மற்றும் இ.மி.த.க இன் இறுதி கருத்த்துகளுக்காக சமர்ப்பிக்கப்பட்டன. இதன் பின்னர் பொது மக்களின் கருத்துக்கள் தேசிய பத்திரிகைகளின் அறிவித்தலினூடாகவும் சில அக்கறையுடைய தரப்பினிருக்கு கடிதம் மூலமான அறிவித்தலினூடாக அறிவிக்கப்பட்டு, கருத்துக்கள் கோரப்பட்டன. தற்போது முடிவாக்கப்பட்ட ஒழுங்கு விதிகள் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்ககப்படவுள்ளது. இதனை தொடர்ந்து வர்த்தமானி அறிவித்தலுக்காக மின்வலு சக்தி அமைச்சுக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளன.

### விதிகள்

### கட்டணத் திருத்தத்திற்கான (இறுப்பனவு) நடவடிக்கை முறை

2009 ஆம் ஆண்டின், 20 ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்திற்கமைய ஆணைக்குழு, கடத்துகை மற்றும் தொகை அளவிளான விற்பனை கட்டணங்கள் (இறுப்பனவு) என்பனவற்றின் மீளாய்விற்கான நடவடிக்கை முறைகளின் பரிந்துரைகள், கட்டண மீளாய்வின் பொது ஆலாசனைகளின் போது அதற்கான நேர அட்டவணை உள்ளடக்கல், பொதுமக்கள் மற்றும் அக்கரையுடைய தரப்பினர் தமது கருத்துக்கள் மற்றும் யோசனைகளை முன்வைக்க சந்தர்ப்பத்தினை வழங்குதல் போன்ற செயற்பாட்டினை மேற்கொள்ள வேண்டியுள்ளது. 2012 இல் ஆணைக்குழு கட்டண மீளாய்வு மற்றும் திருத்தங்களுக்கான விதிகளின் (வரைபு மட்டம்) நடவடிக்கை முறைகள் மற்றும், “அனுமதிக்கப்பட்ட செலவு பிரதிபலிப்பு முறைமை” இல் எவ்வாறு கட்டணத் திருத்தங்கள் மற்றும் மாற்றங்களை கண்டறிதல் தொடர்பாக புதியதொரு அத்தியாயத்தின் உள்ளடக்கத்தினை தயாரித்தது. இது ஆசிய அபிவிருத்தி நிதி உதவி மற்றும் கொள்ளவு அபிவிருத்திக்கான தொழிநுட்ப உதவித் திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டுள்ளது. (திட்டம் இல 7265 SRI). ஆணைக்குழு தற்போது, இவ் குறிப்பிடப்பட்ட முறையில் உள்ளடக்கப்படும் அத்தியாயம் மற்றும் வரைபு மட்ட விதிகளை பரிசீலனை செய்கின்றது.

### கோவைகள்

### விநியோக கோவை

2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க இலங்கை மின்சார சட்டத்திற்கமைய, காலத்திற்கு காலம் உரிமம் பெறுனரினால் உருவாக்கப்பட்ட தொழில் நுட்ப, இயக்க கோவைகள் மற்றும் தரநிலைகளை ஆணைக்குழு அனுமதித்தல் வேண்டும். மேலும், மேற்குறிப்பிடப்பட்ட சட்டத்தின் அடிப்படையில் வழங்கப்பட்ட உரிமங்கள், உரிமம் பெறுனரினால் இவ் கோவைக்கு அமைய பாராமரிக்கப்பட்டு செயல்படுத்தப்படல் வேண்டும். 2012 இல் ஆணைக்குழு ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவி மற்றும் சக்தி துறையின் ஒழுங்குவிதிகளின் கொள்ளளவு அபிவிருத்தி தொழிநுட்ப உதவியின் கீழ், விநியோக கோவையின் மேம்பாட்டிற்கான ஒருங்கினைப்பினை மேற்கொண்டது(திட்டம் இல 7265-SRI). இவ் விநியோக விதிக்கோவையானது, கட்டளை விதிகளை நிர்வகிக்கும் செயற்பாடுகள், பராமரிப்பு மற்றும் விநியோக உரிமம் பெறுனரின் மின் விநியோக அமைப்பின் மேம்பாடு மற்றும் பராமரிப்பினை உள்ளடக்குகின்றது. இவ் விதிக் கோவையின் முதன்மை நோக்கு இறுதி நுகர்வோருக்கான விநியோக சேவைகள் மற்றும் விநியோக வலையமைப்பின் இணைப்பினை வழங்குதலும் ஒழுங்குப்படுத்தலுமாகும். இவ் அனுமதிக்கப்பட்ட கோவை அனைத்து விநியோக உரிமம் பெறுனருக்கும் நடைமுறைப்படுத்தலுக்காக சமர்ப்பிக்கப்பட்டது.

### கிறிட் கோவை

மேற் குறிப்பிடப்பட்ட தேவையின் அடிப்படையில்: 2012 இல் ஆணைக்குழு, ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவி மற்றும் சக்தித் துறையின் ஒழுங்கு விதிகளின் கொள்ளளவு அபிவிருத்தி தொடர்பான திட்டங்களுக்கான தொழிநுட்ப உதவியின் கீழ், கிறிட் கோவையின் உருவாக்கத்தினை ஒருங்கிணைத்தது.(திட்டம் இல 7265-SRI) இவ் கிறிட் கோவையானது, கடத்துகை உரிமம் பெறுனர் மற்றும் ஏனைய பாவனையாளர் என்போரால் கடத்துகை அமைப்பின் செயற்திறன் மிக்கதாகவும், நம்பகத் தன்மையள்ளதாகவும், பொருளாதார ரீதியில் மற்றும் பாதுகாப்பான முறையில் கொண்டு செல்ல கடைப்பிடிக்க வேண்டிய தரங்கள், நெறிகள், மற்றும் விதிகளை உருவாக்கியுள்ளது. தயாரிக்கப்பட்ட (வரைபுமட்ட) கிறீட் கோவையானது, இ.மி.ச இன் கருத்துக்களுக்காக சமர்ப்பிக்கப்பட்டது. அத்துடன் இது தொடர்பான கலந்துரையாடல் பட்டறை ஒன்றும் நடாத்தப்பட்டது. இ.மி.ச இடம் பெறப்பட்ட கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளை அடிப்படையாகக் கொண்டு, இவ் கிறீட் கோவை தற்போது மீளாய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து அணைக்குழுவிடம் அனுமதிக்காக சமரப்பிக்கப்படவுள்ளது.

## வழங்கல் சேவைகள் கோவை

2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்திற்கமைவாகவும் அதன் கீழ் வழங்கப்பட்ட விநியோக மற்றும் வழங்கல் உரிமங்களுக்கமைவாகவும், விநியோக உரிமம் பெறுனர்: பாவனையாளரின் பிரச்சினைகள் தொடர்பாகவும் மற்றும் பாவனையாளர் பாதுகாப்பு தொடர்பாக ஆணைக்குழுவிற்கு இடமளித்தல் தொடர்பான நடைமுறைக் கோவையினை உறுதிப்படுத்தி வெளியிடல் வேண்டும். இவ் வழங்கல் சேவைகள் கோவையானது பாவனையாளருக்கு வழங்கப்பட்டுள்ள மின் தொடர்பான மின் பட்டியல், மின் மானி, பட்டியல் கட்டண செலுத்துகை, மின் வழங்கல் பற்றிய விதிமுறைகள் மற்றும் ஏற்பாடுகள், பாவனையாளர் பாதுகாப்பு வைப்பு, உரிமம் பெறுனரினால் பாவனையாளரின் வளாகத்தினுள் பிரவேசிப்பு, பணம் செலுத்தத் தவறும் வாடிக்கையாளர், மின் இணைப்பு மற்றும் மின் துண்டிப்பு, சலுகை வேவைகள் (ஊனமுற்றோர், ஓய்வூதியர் மற்றும் நோயாளிகள்), முறைப்பாடுகள் கையாழும் வழிமுறைகள், பாவணையாளரின் பொறுப்புக்கள் மற்றும் பெறுனருக்கு தகவல்கள் வழங்கல் போன்ற அனைத்து அம்சங்களையும் வழங்குகின்றது. 2012 இல் ஆணைக்குழு, இலங்கை மின்சாரச் சபையினால் தயாரிக்கப்பட்ட வழங்கல் சேவைகள் கோவையினை மீள் தயார் செய்து, அதனை இ.மி.ச மற்றும் இ.மி.த.க(லெகோ) இன் கருத்துகளை பெறும் பொருட்டு சமர்ப்பித்தது. பின்னர் திருத்தப்பட்ட கோவையானது, இ.மி.த.க(லெகோ) இடமிருந்து கிடைக்கப் பெற்றது. இது தற்போது ஆணைக்குழுவினால் மீளாய்வு செய்யப்படுகின்றது. இ.மி.ச திருத்தப்பட்ட கோவையினை சமர்ப்பிக்கப்படாததினால், அதன் நான்கு விநியோக உரிமம் பெறுனர் தொடர்பாக ஆணைக்குழுவினால் பொதுவான கோவை ஒன்றினை தயாரிக்கப்படுகின்றது. இவ் வழங்கல் சேவைகள் கோவையினை முடிவாக்க முன்னர், ஆணைக்குழு ஓர் பொது ஆலோசனையினை முன்னொடுக்க திட்டமிட்டுள்ளது.

## செயல்முறைகள்

### வழங்கப்பட்ட சக்தி மதிப்பீட்டு தொடர்பான செயல்முறை

2009 ஆம் ஆண்டு 20ஆம் இலக்க மின்சாரச் சட்டத்திற்கு அமைவாகவும், வழங்கப்பட்ட விநியோக மற்றும் வழங்கல் உரிமங்களுக்கு அமைவாகவும் அமையும். எவ்வித ஒப்பந்தங்களும் இல்லாத நிலையில், உரிமம் பெறுனர் வழங்கப்பட்ட மின்சாரத்திற்காக எந்த வகையான பாவனையாளரிடமிருந்தும், உரிமம் பெறுனர் வழங்கப்பட்ட உரிமத்தில் குறிப்பிடப்பட்டதற்கு அமைவான சக்தி மதிப்பீட்டு முறைக்கமைய அறவிடமுடியும். இதன் விளைவாக விநியோக உரிமம் பெறுனர் பாவனையாளருக்கு வழங்கப்படும் சக்தி கணிப்பீட்டு முறையினை தயாரிக்க வேண்டும். அவ் சந்தர்பங்களாவன: மின் மானி இல்லாத போது, மின் மானியின் தவறான பதிவு நிரூபிக்கப்படும் போது, மின்மானியில் இயக்கக்கோளாறு மற்றும் வளாகத்திற்கு வழங்கப்படும் மின் அளவினை அளவிடும் மின் மானியின் பதிவினை யாதொரு நபர் மாற்றம் செய்யும் போது ஆகும்.

இதன் பிரகாகரம், 2012 இல் ஆணைக்குழுவானது, விநியோக உரிமம் பெறுனர் தற்போதுள்ள முறைகளை அறிந்து கொள்ளும் முகமாக உரிமம் பெறுனருடன் ஆராய்தலுக்கான கூட்டத்தினை நடாத்தியது. இதன் பின்னர், ஆணைக்குழு மேற்கூறப்பட்ட சந்தர்ப்பங்களுக்குரிய விஷேட செயல்முறையினை உருவாக்கி, அதனை இ.மி.ச மற்றும் இ.மி.த.க இடம் கருத்துக்களுக்காக சமர்ப்பித்தது. தற்போது இ.மி.த.க இடம் பெறப்பட்ட கருத்துக்கள் அடிப்படையில் ஆணைக்குழு திருத்தத்தினை மேற்கொள்கின்றது.

### பிறப்பாக்க, கடத்துகை மற்றும் விநியோக உரிமம் பெறுனர்களை மட்டம் குறிக்கும் செயன்முறை

2012 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் சட்டத்திற்கமைய ஆணைக்குழு: நடைமுறைப்படுத்தக்கூடிய பயன்பாட்டுச் சேவைகளை, சர்வதேச தரத்திற்கு எதிராக மட்டம் குறிப்பதற்குரிய தேவையினை கொண்டுள்ளது. இக் கற்கை நெறியின் நோக்கானது; ஐந்து விநியோக உரிமம் பெறுனர்களின் செயற்திறனை மட்டங் குறித்தலும் சிறந்த செயல்திறனான விநியோக உரிமம் பெறுனரை கண்டறிதலுமாகும். ஆணைக்குழு தற்போது முன்மொழியப்பட்ட குறீயீடுகள் மற்றும் மாதிரி கணிப்பீடுகளையும் மீளாய்வு செய்கின்றது.

## வழிக்காட்டி

### ஒழுங்குவிதி கணக்கியல் பற்றிய வழிக்காட்டி

மின் பிறப்பாக்க உரிமங்களுக்கு அமைய, மின்சார கடத்துகை மற்றும் தொகை வழங்கல் உரிமம் அத்துடன் மின் விநியோகம் மற்றும் வழங்கல் உரிமம் என்பன 2009 ஆம் ஆண்டு 20 ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டது. ஆணைக்குழு மிக விரிவான தரவுகளுக்காகவும் அல்லது குறிப்பிடப்பட்ட உரிமம் பெறுனரினால் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் சட்டபூர்வமான கணக்கியலுடன் வேறுப்படும் போது அல்லது ஆணைக்குழுவினால் கோரப்பட்ட விளக்கங்கள் அத்துடன் குறிப்பிடப்பட்ட வடிவமைப்பிலிருந்து வேறுப்படும் போது ஆணைக்குழு மேற்சொல்லப்பட்ட கணக்கியலுக்கான தகவல்களை கோரமுடியும். உரிமம் பெறுனரினால் தற்போது சமர்ப்பிக்கப்பட்ட சட்டப்பூர்வமான கணக்கானது போதுமான ஒழுங்கு விதித் தரவுகளை கொண்டிராததினாலும் உரிமம் பெறுனர் மத்தியில் ஒப்பிடக்கூடியவாறு இல்லாததினாலும் ஆணைக்குழு உரிமம் பெறுனரினால் தயாரிக்கப்படும் ஒழுங்கு முறை கணக்கியலுக்கான வழிக்காட்டியினை வகுக்கத் திட்டமிட்டுள்ளது. இது தொடர்பாக 2012 இல் ஆணைக்குழு தேவையான தகுதிகளை கொண்ட ஓர் தகுதிவாய்ந்த சர்வதேச ஆலோசனை நிறுவனத்தினை சேவையில் ஈடுப்படுத்தவும் குறிப்பிடப்பட்ட வழிக்காட்டியினை உருவாக்கவும் மற்றும் அதனை செயல்படுத்தவும் திட்டமிட்டுள்ளது.

### ஒழுங்குவிதி கைந்நூல் (மீள் திருத்தப்பட்டது)

ஆணைக்குழுவின் ஒழுங்குவிதி கைநூலானது: அதன் செயற்பாடுகளை சிறந்த முறையில் நிர்வகிக்கும் ஓர் கோவையாகும். 2012 இல் ஆணைக்குழு, நடைமுறையிலுள்ள ஒழுங்குவிதி கைநூலினை அதன் தேவைகள் மற்றும் தேசிய தேவைகள் என்பனவற்றை கருத்திற் கொண்டு மீள் திருத்த ஆரம்பித்தது.

# பெற்றோலியத் துறை

## பெற்றோலியத் துறை சட்டங்களை திருத்துதல்/தயாரித்தலுக்கான உதவி

2012 இல் பெற்றோலியத் துறை அமைச்சு, 2002 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க பெற்றோலிய உற்பத்திகளின் (விஷேட விதித்தொகுப்பு) தொடர்பான சட்டம் மற்றும் 1961 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க பெற்றோலிய கூட்டுத்தாபன சட்டம் என்பவற்றின் முன்மொழியப்பட்ட திருத்தங்கள் தொடர்பாக தொடர்ந்து சட்டமா அதிபர் திணைக்களத்துடன் தனது உரையாடல்களை மேற்கொள்கின்றது. இதனூடாக ஆணைக்குழு கீழ் நிலைப்படுத்தப்பட்ட பெற்றோலியத் துறையின் ஒழுங்குப்படுத்துநராக செயற்பட வழிவகுக்கும். இவ் இரு சட்டங்களும் இ.பொ.ப.ஆ மற்றும் பெற்றோலியத் துறை அமைச்சின் ஆலோசனையுடன் சட்ட வரைஞர் திணைக்களத்தினால் திருத்தியமைக்கப்பட்டுள்ளன. தற்போது முன்மொழியப்பட்ட திருத்தங்களுடன் கூடிய சட்டங்கள் கௌரவ. சட்டமா அதிபரின் அனுமதிக்காகவுள்ளது.

## மறைமுக ஒழுங்குபடுத்துநரின் பங்கு

பெற்றோலிய பொருட்களான பெற்றோலியம், டீசல், மண்ணெண்ணெய், விமான எரிப்பொருள், கடல் சார் எரிப்பொருள், உலை எரிப்பொருள் திரவமாக்கப்பட்ட பெற்றோலிய எரிவாயு அதே வேளையில், பெற்றேலிய வளங்களான எண்ணெய் (சுத்திகரிக்கப்படாதது), இயற்கை எரிவாயு மற்றும் ஹற்ரோகாபன்கள் உட்பட்ட திண்ம, அரைத் திண்மம், திரவம் மற்றும் வாயு நிலையில் காணப்படும். கீழ் நிலைப்படுத்தப்பட்ட பொற்றோலியத் துறையானது கீழ் வரும் செயற்பாடுகளை உள்ளடக்கியுள்ளது:

- பெற்றோலிய வளங்களின் அல்லது பொற்றோலிய உற்பத்திகளின் இறக்குமதியும் ஏற்றுமதியும்.
- பெற்றோலிய வளங்களின் சுத்திகரிப்பு, கலத்தல் அல்லது பெற்றோலிய பொருட்களின் உற்பத்தி.
- பெற்றோலிய வளங்களின் அல்லது பொற்றோலிய உற்பத்திகளின் களஞ்சியம், விநியோகம் மற்றும் கொண்டு செல்லல்.
- பெற்றோலிய உற்பத்திகளின் சில்லறை விற்பனையும் மொத்த விற்பனையும்.

கீழ் நிலைப்படுத்தப்பட்ட பெற்றோலியத் துறையின் தற்போதைய ஒழுங்குப்படுத்துகை, 2002 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க பொற்றோலிய உற்பத்திகளின் (விஷேட விதித் தொகுப்பு சட்டம்) மற்றும் 1961 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க பெற்றோலிய கூட்டுத்தாபன சட்டம் ஆகியவற்றால் நிர்வகிக்கப்படுகின்றது. தற்போது பெற்றோலியத் துறை அமைச்சு, பெற்றோலியத் துறையின் ஒழுங்குப்படுத்துவதற்குரிய ஒட்டுமொத்த அதிகாரத்தினை கொண்டுள்ளது. ஆனாலும் உரிமங்கள் வழங்கும் போது, தேவைப்படும் ஆலோசனை மற்றும் உதவிகள் என்பன ஒழுங்குப்படுத்தலில் காணப்படும் இடைவெளியினால் பெறமுடியாதுள்ளது. 2002 ஆம் ஆண்டு 2 ஆம் இலக்க சக்தி வழங்கல்(தற்காலிக விதித் தொகுப்பு) கீழ் உருவாக்கப்பட்ட சக்தி வழங்கல் குழு நிருவகிப்பட்டது. இது 2004 ஆம் ஆண்டு செயலிழந்தது. இ.பொ.ப.ஆ பெற்றோலியத் துறையில் ஒழுங்குப்படுத்தும் நடவடிக்கையினை செயல்படுத்தும் முகமாக, இலங்கை பொற்றோலிய கூட்டுத்தாபன சட்டம் மற்றும் பெற்றோலிய பொருட்கள் (விஷேட விதித் தொகுப்பு) சட்டம் என்பன திருத்தியமைக்கப்படுகின்றது.

### உராய்வு நீக்கி எண்ணெய் சந்தைகளுக்கான ஒழுங்கு விதிகள்

உராய்வு நீக்கி எண்ணெய் சந்தையானது, 2002 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க பெற்றோலிய உற்பத்திகள்(விஷேட விதித் தொகுப்பு) சட்டம், மற்றும் 1961 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க பொற்றோலிய கூட்டுத்தாபன சட்டம் ஆகியவற்றினால் ஒழுங்குப்படுத்தி நிர்வகிக்கப்படுகின்றது.

கிறீஸ் உட்பட்ட உராய்வு நீக்கி எண்ணெய்களின் இறக்குமதி, ஏற்றுமதி, கலவை, உற்பத்தி, விற்பனை மற்றும் விநியோகம் என்பனவற்றின் செயற்பாடுகளுக்ககு அரசாங்கத்தின் குறிப்பிட்ட அங்கிகாரம் தேவைப்படுகின்றது. தரக்குறைவான பொருட்கள் சந்தையினுள் வராதவாறு, போதுமான நிதி வளம் மற்றும் முறையான தொழிநுட்ப அறிவுடைய தகுதி பெற்ற தரப்பினருக்கு மட்டுமே இவ் அங்கிகாரம் வழங்கப்படுகின்றது.

அரசாங்கம் இ.பொ.பஆ இனை, உராய்வு நீக்கி எண்ணெய்களின் மறைமுக ஒழுங்குப்படுத்தியாக நியமித்துள்ளது. உராய்வு நீக்கி எண்ணெய் துறையினை தராளமயமாக்கும் பொருட்டு கொள்கை மற்றும் ஒழுங்குமுறை விவகாரங்களில் பெற்றோலிய துறை அமைச்சிற்கு ஆலோசனையினை வழங்குகின்றது.

## உராய்வு நீக்கி எண்ணெய் தரநிலைகள் மற்றும் விழிப்பூட்டல்கள்

### உராய்வு நீக்கி எண்ணெய் தரநிலைகள்

சர்வதேச சந்தையில் உராய்வு நீக்கி எண்ணெய்களின் தரநிலைகள் அமெரிக்காவின் பெற்றோலிய அமைப்பு, ஜப்பானிய மோட்டார் வாகன தரநிலை நிறுவனங்கள் மற்றும் தனிப்பட்ட மூல உபகரணங்களின் உற்பத்தியாளர் ஆகிய நிறுவன அமைப்பக்களினால் வழங்கப்பட்டுள்ள தரநிலைகளினால் நிர்வகிக்கப்படுகின்றது.

2012 இல் இ.பொ.ப.ஆ மோட்டர் வாகனத் துறையின் உராய்வு நீக்கி எண்ணெய்க்கான தரநிலை மற்றும் மசகு எண்ணெய்களுக்கான இலங்கை தரநிலை நிறுவனத்தின் தராதரங்களுக்கான தயாரிப்பினையும் மற்றும் தராதர குழுவின் ஓர் அங்கத்தவரான செயற்பாட்டினையும் முன்னெடுத்தது.

அரசாங்கத்தினால் இத் தரநிலைகள் இலங்கையின் ஆகக் குறைந்த உராய்வு நீக்கி எண்ணெய் மற்றும் மசகு எண்ணெயின் தராதரங்களை அறிவுறுத்துகின்றது. உராய்வு நீக்கி எண்ணெயின் மறைமுக ஒழுங்குப்படுத்துநரான ஆணைக்குழு, 2012 இல் பின்வரும் செயற்பாடுகளை முன்னெடுத்தது.

## உராய்வு நீக்கி எண்ணெய் சந்தைக்கான தகுதிகள் கோரிக்கை ஆவணத்தின் தயாரிப்பு

உராய்வு நிக்கி எண்ணெய் மற்றும் மசகு எண்ணெய் துறையின் மறைமுக ஒழுங்குப்படுத்துநரான ஆணைக்குழு, இவ்வகையான சந்தையினுள் புதிய தொழிற்துறை ஆட்களை நுழைவிற்குரிய வழிக்காட்டி மற்றும் ஆவணங்களை தயாரித்துள்ளது. இவ்வாறு தயாரிக்கப்பட்ட (வரைபு மட்ட) ஆவணங்கள் மற்றும் வழிக்காட்டிகள் பொற்றோலியத்துறை அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டது. தற்போது ஆணைக்குழு, அமைச்சின் கருத்துக்கள் மற்றும் வழிமுறைகளுக்காக காத்திருக்கின்றது.

## உராய்வு நீக்கி எண்ணெய்த்துறை தொடர்பான பொது விழிப்பூட்டல்

பொது மக்கள் மற்றும் அக்கரையுடையத் தரப்பினர் மத்தியில் உராய்வு நீக்கி எண்ணெய் உபயோகம் மற்றும் தொழிநுட்பம் அம்சங்கள் மற்றும் தரநிலை தொடர்பான விழிப்புணர்வினை அதிகரிக்கும் பொருட்டு, உராய்வு நீக்கி எண்ணெய் துறை பட்டறை 09.11.2012 பொற்றோலியத் துறை அமைச்சின் ஒத்துழைப்புடன் ஆணைக்குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்டது.

கொழும்பு சின்னமன் கிராண்ட் ஹோட்டலில் நடாத்தப்பட்ட பட்டறையில் கலாநிதி ஆ.எம்.எஸ் சமரத்துங்க, பெற்றோலிய அமைச்சின் செயளாலர், தலைமை உரையினை நடாத்தினார். இதில் 100 இற்கும் மேற்பட்ட தனியார், பொது துறை, உராய்வு எண்ணெய்த் துறை, மோட்டார் வாகன இறக்குமதியாளரகள், சுங்க திணைக்களம், இலங்கை தரநிலை நிறுவனம் என்பனவற்றின் பங்கேள்பாளர்கள் கலந்து கொண்டனர். இதன் போது உராய்வு நீக்கி எண்ணெய் தகவல் துண்டு பிரசுரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

இவ், பட்டறையின் வரவேற்புரை இ.பொ.ப.ஆ இன் தலைவர் கலாநிதி ஜயதிஸ்ஸ கொஸ்தா ஜ.ச அவர்களால் நிகழ்த்தப்பட்டது. இ.பொ.ப.ஆ இன் பணிப்பாளர் நாயகம் திரு. தம்மித்த குமாரசிங்க "பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு மற்றும் துறையின் ஒழுங்குப்படுத்தல்" தொடர்பான உரையினை நிகழ்த்தினார். மற்றும் கலாநிதி காமினி அமரசேகர, ஆலோசகர் உராய்வு நீக்கி எண்ணெய் துறை "உராய்வு நீக்கி தொழில் நுட்பம்" தொடர்பான விளக்கவுரையினையும் கிசு கோமஸ் முகாமை பணிப்பாளர்/ தலைவர், செவ்ரோ உராய்வு நீக்கி எண்ணெய் தனியார் நிறுவனம் "துறை பங்காளர் பார்வையில் ஒழுங்குத்துறை சூழலின தொடர்பான பரிசீலனை" விளக்கவுரையினையும் நிகழ்த்தினார். அதே வேளை இ.பொ.ப.ஆ இன் பெற்றோலியத்துறை ஆலோசகர் ராஜா அமரத்துங்க "உராய்வு நீக்கி எண்ணெய்த் துறையின் ஒழுங்குப்படுத்தல் - தற்போதைய மற்றும் எதிர்காலம்" தொடர்பான உரையினை நிகழ்த்தினார். இவ் பட்டரையானது வினா விடை பகுதியுடன் நிறைவு பெற்றது.

## தற்போதுள்ள உராய்வு நீக்கி எண்ணெய் ஒப்பந்தங்களின் புதிப்பித்தல்

2012 இல் நடைமுடையிலுள்ள பதின்மூன்று ஒப்பந்தங்களில் ஆறு (06) உராய்வு நீக்கி எண்ணெய்க்கான ஒப்பந்தங்கள் ஆணைக்குழுவினால் புதிப்பிக்கப்பட்டது. அவை பின்வருமாறு:

| நிறுவனம் | பெயர் குறிப்பிடப்பட்டவர் |
|---|---|
| • டொயோட்டா டுஷோ கோப்புரெஷன் | டொயோட்டா லங்கா (பிரைவெட்) லிமிட்டட் |
| • இந்தியன் ஓயில் கோப்புரெஷன் லிமிட்டட் | லங்கா ஐ.ஓ.சி பி.எல்.சி |
| • டொட்டல் லுப்பிரிக்கண்ஸ் இந்தியா லிமிட்டட் | நவலோக்க ஏபிசி லுப்பிரிக்கன்ஸ் பிரைவெட் லிமிட்டட் |
| • ஆஷ்லண்ட் இன்கோப்பரேட்டட் | யுனைட்டட் மோட்டஸ் லங்கா லிமிட்டட் |
| • பாரட் பெற்றோலியம் கோப்புரெஷன் லிமிட்டட் | ரிவிஎஸ் ஓட்டோமோட்டிவ் (பிரைவெட்) லிமிட்டட் |
| • சினோபெக் கோப்புரெஷன் | இன்ட்டர் ஓசியன் லுப்பிரிக்கன்ஸ் லிமிட்டட் |

# ஏனைய செயற்பாடுகள்

## மின்சாரத் துறையின் தகவல்களை பொது மக்களுக்கு பரப்புதல்

மின் பாவனையாளர் மற்றும் அக்கரையுடைய தரப்பினர் என்பவர்களுக்கு மின் துறை தொடர்பிலான தகவல்களை பரப்புதலினூடாக ஒழுங்குப்படுத்தல் செயன்முறையில் சிறந்த பங்களிப்பினை வகுத்தல் மற்றும் மின் துறையின் செயல்திறன் தொடர்பில் பாரிய அளவில் விளிப்பூட்டல் தொடர்பில் வழிவகுத்தல் என்பன ஆகும்.

தகவல்களை பரப்புவதற்கு இ.பொ.ப.ஆ இன் இணையத்தளம் ஊடகங்கள், துண்டு பிரசுரங்கள், கருத்தரங்குகள் மற்றும் பயிற்சி பட்டறைகள் என்பன முக்கிய ஊடகங்களாக பயன்படுத்தப்பட்டன. இ.பொ.ப.ஆ அதன் இணையத்தளத்தினை கார்த்திகை 2009 இல் அறிமுகப்படுத்தியது. முக்கிய துறைகளான: மின்சாரச் சட்டம், ஒழுங்குவிதிகள், விதிகள், கோவைகள், பங்கு மற்றும் பொறுப்புக்கள், தீர்மானங்கள், விண்ணப்பப்படிவங்கள், துறைத் தகவல்கள் மற்றும் ஏனய தகவல்கள் என்பனவற்றை பொது மக்கள் மற்றும் அக்கரையுடையத் தரப்பினர் இணையத்தளத்தினூடாக பெற்றுக்கொள்ள முடியும். 2012 இல் இலகுவாக பயன்படுத்தக்கூடிய புதிப்பிக்கப்பட்ட இணையத்தளமானது, வடிவமைக்கப்பட்டு உத்தியோகபூர்வமாக 2013 இல் ஆரம்பிக்கப்படவுள்ளது. இத் தரவுகளை செயற்திறனாகவும் பரந்தளவில் பரப்பவதற்காக மூன்று மொழிகளில் இவை கிடைக்கப் பெறும். இணையத்தளத்தின் முக்கிய அம்சமாக (பயன்படுத்துனர் மத்தியில் பிரபல்யமான) “மின்சாரப் பட்டியல் கணிப்பான்” காணப்படுகின்றது. இதனூடாக பாவனையாளர்கள் தமது மின் பட்டியலினை சரிப்பார்த்தல் மற்றும் நிலுவைத் தொகையினை அறிவதற்கு, அடிப்படை தகவல்களை பதிவதினூடாக பெற்றுக் கொள்ள முடியும்.

## மேற்பார்வைகள்

இ.பொ.ப.ஆ இன் மேற்பார்வையாளர் பிரிவு பாதுகாப்பு, தொடர்தன்மை, தரம், நம்பகத்தன்மை, இலங்கையின் மின் பிறப்பாக்கம் மற்றும் கடத்துகையின் செயல்திறன் என்பவற்றின் கண்காணிப்பிற்கு பொறுப்பாகவுள்ளது. இ.பொ.ப.ஆ மின் துறையில் பாவனையாளர் மட்டத்தில் மற்றும் பிறப்பாக்க கடத்துகை உரிமம் பெறுனர்களின் குறிப்பிட்ட விபத்துக்கள் மற்றும் நிகழ்வுகள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்கு பெறுப்பினை கொண்டுள்ளது. மேற்பார்வையின் முக்கிய பங்கான, பொது மக்களின் மின் பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வினை அதிகரித்தல், களமட்டத்தில் பெறப்பட்ட அவதானிப்புக்களின் அடிப்படையில் கட்டணங்களின் உள்ளீடு வழங்கல் மற்றும் ஒழுங்குவிதிகளின் உருவாக்கம் என்பன அடங்கும்.

**2012 இல் கீழ் வரும் பகுதிகள் தொடர்பாக ஆணைக்குழுவின் அலுவலர்களால் நடாத்தப்பட்ட மேற்பார்வைகள்**

| மேற்பார்வையின் வகை | மேற்பார்வையின் எண்ணிக்கை |
|---|---|
| வழியனுமதி | 10 |
| இறுப்பனவு (கட்டணம்) | 09 |
| வருவாய் மானியின் வழுவாமை | 01 |
| மின் தாக்கம் | 02 |

## அனுமதிக்கான பரிந்துரைகள்

2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, இலங்கை மின்சாரச் சட்டத்தின் அத்தியாயம் VII, தவறுகளும் ஒழுங்குவிதிகளுக்கும் அமைய, ஆணைக்குழுவின் எழுத்தினாலான அனுமதியுடன் தவிர இச்சட்டத்தின் கீழான தவறு ஒன்றிக்கான குற்றவழக்கு தொடுக்கப்படலாகாது. 2012 இல் ஆணைக்குழுவினால் இ.மி.ச மற்றும் இ.மி.த.நி(லெகோ) என்பனவற்றிற்கு, மின்சாரம் தொடர்பிலான குற்றங்களுக்குரிய 213 அனுமதிக்கான பரிந்துரைகள் வழங்கப்பட்டன.

## மின்சாரம் தொடர்பான அபாயகரமான விபத்துக்களின் மேற்பார்வையும் அறிக்கைகளும்

2012 இல் முக்கிய அம்சமாக மின்சார அமைப்பின் பாதுகாப்பு இடைவெளிகள் கண்டறியப்பட்டு, தற்போது புதிய பாதுகாப்பு ஒழுங்குவிதிளுடன் இணைக்கப்படும் செயன்முறையில் உள்ளது.

## வருவாய் மானிகளின் (மின் மானி) செயற்திறன் மற்றும் வழுவாமை தொடர்பிலான மேற்பார்வை அறிக்கை

2012 இல் ஆணைக்குழு, ஸ்ரீஜயவர்த்தனபுர பகுதியில் 15 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட பழமை வாய்ந்த மின் மானிகள் 350 இன் முறையற்ற மாதிரி தெரிவிற்கூடாக அவற்றின் செயற்திறன் மற்றும் வழுவாமை தொடர்பில் பரிசோதனையினை மேற்கொண்டது. பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில் பகுப்பாய்வு செய்து முடிவுகள் அறியப்பட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டது. 2013 இல் இ.மி.ச இற்கு எதிர்காலங்களில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை குறிப்பிடப்பட்ட அறிக்கையின் பிரதி அனுப்பிவைக்கப்படவுள்ளது.

## கண்டறியப்பட்ட பிரதான பொது நிறுவனங்களின் மின் பாதுகாப்பு மேற்பார்வை

2012 இல் ஆணைக்குழுவினால் 12 பாரிய பொது நிறுவனங்களின் மின் பாதுகாப்பு பரிசோதனைகள் பூர்த்தி செய்யப்பட்டன. களுபோவில பொது வைத்தியசாலை, களுத்துறை பொது வைத்தியசாலை, செத்செவன வயோதிபர் இல்லம், குருநாகலை மாநகர சபை மற்றும் கடை கட்டிடத் தொகுதி என்பன உள்ளடக்கப்பட்டுள்ளன. இதன் முடிவுகள் மற்றும் பரிந்துரைகள் ஆணைக்குழுவினால் ஒர் அறிக்கையாக தொகுக்கப்பட்டுள்ளது.

## "பாதுகாப்பான மின் உபயோகம்" தொடர்பில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்

2012 இல் ஹிங்குரான்கெத்த பிரதேசத்தில், இ.மி.ச இன் பிரதம பொறியியலாளருடன் இணைந்து "விலங்குகளை கொலை செய்யப் பயன்படுத்தப்படும் சட்டவிரோதமான மின் பாவனையும் அதன் அபாயமும்" தொடர்பிலான விழிப்புணர்வு நிகழ்ச்சி முன்னெடுக்கப்பட்டது. அத்துடன் அனுராதபுரத்தில் அமைந்துள்ள திஸ்சவெவ மகா வித்தியாலத்தின் "மின் பாதுகாப்பு" தொடர்பிலான விழிப்புனர்வு நிகழ்ச்சி ஒன்னும் நடாத்தப்பட்டது.

## கிறிட் இணைப்பிலான மீள் சக்தி மின் உற்பத்தி நிலையம் மற்றும் ஓப் கிறிட் சிறிய மின் வலு உற்பத்தி நிலையங்களின் மேற்பார்வை

மின் பாதுகாப்புடன் தொடர்புடைய இரு மேற்பார்வைகள் கொலன்ன சிறிய நீர் வலு நிலையத்திலும் இரத்தினபுரி மாவட்டத்தின் கொலொன்னா வெல்வத்த பிரதேசத்தில் அமைந்துள்ள ஓப் கிறிட் சிறிய நீர் வலு நிலையத்தின் பரிசோதனை 2012 ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது.

# மனித வளங்கள்

2012 இல் ஆணைக்குழுவின் மனித வளங்களின் பகுதிகளான: பயிற்சி மற்றும் விருத்தி, இழப்பீட்டு நிர்வாகம், ஆட்சேர்ப்பு, ஊழியர் உறவு, வேலைத்தள சூழல் மற்றும் ஒட்டுமொத்த செயல்திறன் என்பவற்றில் முனன்னேற்றமடைந்துள்ளது.

2012 இல் 22 புதிய ஆட்சேர்பினுடாக, ஊழியர் வலிமையில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு ஏற்பட்டது. இவ் ஆட்சேர்ப்பு, தொடர்புப்பட்ட தொழிற்துறையில் நிபுணத்துவம் மற்றும் அனுபவமுள்ள பயன்பாட்டினூடாக, தற்போதுள்ள தேசிய அளவிளான மின் தொழிற்துறை தேவைகளை நிறைவேற்றுவதனை நோக்காகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது.

### 2012.12.31 இல் உள்ளவாறான ஆளணி மற்றும் அதன் அமைப்பு விபரம்

| பதவி | அனுமதிக்கப்பட்ட ஆளணி விபரம் | | 31.12.2012 அன்று உள்ள ஆளணி விபரம் | |
|---|---|---|---|---|
| | நிரந்தரம் | ஒப்பந்தம் | நிரந்தரம் | ஒப்பந்தம் |
| பணிப்பாளர் நாயகம் | 1 | _ | 1 | _ |
| பிரதிப் பணிப்பாளர் நாயகம் | 1 | – | 1 | _ |
| ஆணைக்குழுவின் செயலாளர் | 1 | – | 1 | _ |
| பணிப்பாளர் | 5 | – | 4 | 1 |
| பிரதிப் பணிப்பாளர் | 12 | _ | 7 | 3 |
| உதவிப் பணிப்பாளர் | 13 | – | 13 | _ |
| முகாமைத்துவ உதவியாளர் | 8 | – | 8 | _ |
| சாரதி | 4 | – | 2 | 2 |

# நிகழ்ச்சிகள்

ஆணைக்குழு 2013 ஆம் ஆண்டிற்காக 38 செயற்திட்டங்களை வகுத்துள்ளது. இத் திட்டங்கள் ஆணைக்குழுவின் 2013-2015 இந்கான கூட்டிணைந்த திட்டத்தில் வெளிப்படுத்தப்பட்டிருந்த குறிக்கோள்களுக்கு ஒத்த விதத்தில் அமைந்துள்ளது. இவ் குறிக்கோள்களாவன:

- மின் பாவனையாளரின் பாதுகாப்பு தொடர்பில் உத்தரவாதத்தினை அளித்தல்.
- மின் கட்டணங்கள் (இறுப்பனவு) மற்றும் சேவை கட்டணங்களில் நியாயத் தன்மையினை உறுதிப்படுத்தல்.
- சக்தி பாதுகாப்பு, சக்தி பேணல், செயல்திறன் மிக்க பாவனை மற்றும் சூற்றாடல் தொடர்பான அக்கரையினை உறுதிப்படுத்தல்.
- மின் வழங்கலின் போது, போதிய தரம் மற்றும் நம்பகத் தன்மையினை உறுதிசெய்தல்.
- மின்சாரம் தொடர்பில் நபர்கள் மற்றும் சொத்துக்களின் பாதுகாப்பினை உறுதி செய்தல்.
- அக்கரையுடையத் தரப்பினர் மற்றும் உரிமம் பெறுனர்களுக்கு மின் துறை தொடர்பான தகவல்களை பரப்புதல்.
- போட்டித் தன்மையினை ஊக்குவிக்க, மின்சார சந்தை கட்டமைப்பினை உருவாக்குதல்.
- சந்தையிலுள்ள கீழ் நிலைப்படுத்தப்பட்ட பெற்றோலிய பொருட்களின் ஒழுங்குப்படுத்தல்.

இவ் குறிக்கோள்கள்: 2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டம் மற்றும் 2002 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் சட்டத்தில் குறிப்பிடப்பட்ட நோக்கங்கள் மற்றும் தொழிற்பாடுகள் தொடர்பிலான அறிவுறுத்தலின் படி பெறப்பட்டது.

ஆணைக்குழுவினால் குறிக்கோள்களுடன் ஒத்த வகையில் உருவாக்கப்பட்ட திட்டங்களின் சுருக்கமான விளக்கம் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| குறிக்கோள் | திட்டத்தின் விபரம் | செயற்பாடுகள் | அனுகூலங்கள் |
|---|---|---|---|
| **மின் பாவனையாளரின் பாதுகாப்பு தொடர்பில் உத்தரவாதத்தினை அளித்தல்.** | மின் துறையின் ஒழுங்குப்படுத்தல் தொடர்பாக பாவணையாளருக்கான விழிப்புணர்வு கருத்தரங்கு | 20 கருத்தரங்குகள் | • பாவனையாளர்களின் ஆர்வத்தினை பாதுகாத்தல் |
| | வழங்கல் சேவைகள் கோவை: பாவனையாளருக்கு தேவைப்படும் மின் வழங்கல் சேவைகளின் வகை மற்றும் தரம் தொடர்பான கருத்துக்களை பெறல். | • கோவையினை செயற்படுத்துவதற்குரிய தரவுகள் மற்றும் கருத்துக்களை சேகரித்தல் | • பாவனையாளருக்கு வழங்கப்படும் மின் சேவைகள் தொடர்பான கருத்துக்களை தெரிவிப்பதற்குரிய சந்தர்ப்பம் வழங்கப்படுதல். |
| | பிராந்திய நுகர்வோர் சங்கங்களை நிறுவுதல் | • ஒன்பது மாகாணங்களில் நிறுவப்படவுள்ளது<br>• நுகர்வோர் ஆலோசனைக் குழுவின் உதவிகள் பெறப்படும் | • மின்சாரத் துறை ஒழுங்குப்படுத்தல் தொடர்பான அறிவினை மேம்படுத்தல்.<br>• இது பாவனையாளர் பங்கு கொள்ளும் மற்றும் அறிவினை விருத்தி செய்யும் தளமாக காணப்படுகின்றது.<br>• பாவனையாளருக்கு சிறந்த சேவையினை வழங்குதல் |
| | பாவனையாளர்களை அறிவூட்டும் துண்டுப் பிரசுரங்கள் | • துண்டு பிரசுரங்களின் தயாரிப்பு<br>• விழிப்புணர்வு நிகழ்ச்சிகளின் போது பகிர்ந்தளிப்பு<br>• ஆணைக்குழுவின் தகவல் மேசையில் கிடைக்கப் பெறல் | • சக்தி மதிப்பீடு மற்றும் மின் மானி தொடர்பில் பாவனையாளரின் அறிவினை மேம்படுத்தல்<br>• நுகர்வோரின் உரிமைகள் பாதுகாக்கப்படல் |
| | மின் பாவனையாளர்களின் உரிமைகள் மற்றும் பெறுப்புக்கள் தொடர்பான அறிக்கை | • அறிக்கையினை வெளியிடுதல் | • பாவனையாளர்களின் உரிமைகள் மற்றும் பெறுப்புக்கள் தொடர்பான அறிவினை பொது மக்கள் பெறுவர் |

| | | | |
|---|---|---|---|
| **மின் கட்டணங்கள்(இறுப்ப னவு) மற்றும் சேவை கட்டணங்களில் நியாயத் தன்மையினை உறுதிப்படுத்தல்.** | 2013 – 2015 காலப்பகுதியிலுள்ள மின் கடத்துகை விநியோகம் செயன்முறைகளின் போது மின் விரயமாதலினை தடுத்தல் | • தொழிநுட்ப காரணிகளுடன் கூடிய நிர்வாக மற்றும் முதலீட்டு செயல்திறனின்மை தொடர்பான கற்றல்<br>• உரிமம் பெறுனர்களுக்கான யதார்த்தமான மின் இழப்பு இலக்குகள் | • உரிமம் பெறுனர்களுக்கான மேம்படுத்தப்பட்ட சக்தி<br>• பேணுகை மற்றும் வருமான உயர்வு<br>• குறைந்தளவு பிறப்பாக்க முதலீட்டு தேவை<br>• நீண்ட காலத்தில் பாவனையாளருக்கு கவர்ச்சிகரமான மின் கட்டணங்கள்<br>• துறைக்குரிய முதலீடுகளை உயர்த்தல் |
| | செயலாக்க கற்கை: மின் நுகர்வு நேரங்களில் சீர்படுத்தலினூடாக பாவனையாளரின் மின் பட்டியல் குறைப்பு | • செயலாக்க ஆய்வினை மேற்கொள்ளல் | • தேசிய மின வலையமைப்பு (கிறிட்) கேள்வியில் குறைப்பினை ஏற்படுத்தல்<br>• அமைப்பு செலவில் மொத்தமான குறைப்பு<br>• வழங்கல் செலவில் குறைப்பு<br>• ஒட்டு மொத்த மின் நுகர்வில் குறைப்பு<br>• எதிர்கால மின் கட்டணங்களுக்குரிய தரவுகள் |
| | வீதி விளக்குகளின் செயற்திறனான நிர்வாகம் | • தரங்கள் மற்றும் நிறுவல்கள் தொடர்பான வழிகாட்டிகளை உருவாக்கள்<br>• உள்நாட்டு அமைப்பக்களிலிருந்து செலவுகளை சேகரிப்பதற்கான உத்திகள் | • பாவனையாளர்களின் மின் கட்டணங்களை மேம்படுத்தல்<br>• செயற்திறனான வீதி விளக்குகளின் நிர்வாகத்திற்கான கொள்கை ஆலோசனை |
| | மின் வழங்களின் போதுள்ள இழப்புக்களை நிர்வகித்தல் | • தற்போதுள்ள தரவுகளை விரிவுப்படுத்துவதனூடாக குறிப்பிடப்பட்ட இழப்பக்களை கண்டறிதல் | • வழங்கல் சங்கிலியில் இழப்பினை குறைத்தல்<br>• பாவனையாளருக்கான மின் கட்டணங்களை மேம்படுத்தல் |
| | மொத்த வழங்கல் பாவனையாளர் வகையினருக்கு, கட்டண மீளாய்வின் போது வெளிப்படைத் தன்மை மற்றும் நம்பகத் தன்மையினை உறுதி செய்தல் | • கட்டண மீளாய்விற்குரிய செயல் முறையினை குறிப்பிடல் | • அக்கறை உடையத் தரப்பினர் கட்டண மீளாய்வு தொடர்பான கருத்துக்களை வழங்க முடிதல்<br>• நியாயத் தன்மை மற்றும் வெளிப்படைத் தன்மையினை அதிகரித்தல் |
| | பாவனையாளரின் மின் கட்டணத் திருத்தம் மற்றும் சீராக்கல் தொடர்பில் வெளிப்படைத் தன்மை மற்றும் நம்பகத் தன்மையினை உறுதிப்படுத்தல் | • கட்டண மீளாய்வு மற்றும் சீர்படுத்தல் செயலாக்கத்திற்கான வழிகாட்டியினை உருவாக்கல்<br>• தொழிற்துறை நிபுணர்களிடம் ஆலோசனை | • அக்கரைஉடையத் தரப்பினர் கட்டண மீளாற்வு தொடர்பான கருத்துக்களை வழங்க முடிதல<br>• நியாயத் தன்மை மற்றும் வெறிப்படைத் தன்மையினை அதிகரித்தல் |
| | ஒழுங்குப்படுத்தல் தீர்மானங்களில் மேம்பாடு: கணக்கியல் ஒழுங்குப்படுத்தலுக்கான வழிக்காட்டி | • கணக்கியல் ஒழுங்குப்படுத்தலுக்கான வழிக்காட்டியினை தயாரித்தலும் வழங்குதலும் | • ஒழுங்கப்படுத்தல் செயற்பாடுகளின் போது நம்பகத் தன்மை மற்றும் வெளிப்படைத் தன்மையினை அதிகரித்தல். |
| **சக்தி பாதுகாப்பு, சக்தி பேணல், செயல்திறன் மிக்க பாவனை மற்றும் சூற்றாடல் தொடர்பான அக்கரையினை உறுதிப்படுத்தல்.** | மரபு ரீதியற்ற மீள் புதிப்பிக்கத்தக்க சக்தி துறையின் கொள்கை உருவாக்கத்தில் உதவுதல். | • அக்கரையுடையத் தரப்பினருடனான ஆலோசனை, பிற நாடுகளின் மரபு ரிதியற்ற மீள் புதிப்பிக்கத்தக்க சக்தித் துறையின் கொள்கைகள் தொடர்பில் கற்கை<br>• மரபு ரீதியற்ற மீள் புதிப்பிக்கத்தக்க சக்தி துறையின் தொழிநுட்பத்தினை பாதிக்கும் காரணிகள் (தடைகள்) தொடர்பான மதிப்பீடு<br>• மரபு ரீதியற்ற மீள் புதிப்பிக்கத்தக்க சக்தி துறையின் தொழில் நுட்பத்தினை மேம்படுத்துவதற்கரிய உத்திகளை உருவாக்கல் | • படிம எரிபொருட்களின் இறக்குமதியில் சார்ந்திருப்பதனை குறைத்தல்<br>• நீண்டகால மின் கட்டணங்களின் மேம்பாடுகளிற்கும் சக்தியின் விலையின் ஏற்றத்தினையும் குறைத்தல்<br>• சாத்தியமுள்ள முதலீட்டாளரிடையே மரபு ரீதியற்ற மீள் புதிப்பிக்கத்தக்க சக்தி துறையின் தொழிநுட்பம் தொடர்பிலான ஆர்வத்தினை புதுப்பித்தல்<br>• மரபு ரீதியற்ற மீள் புதிப்பிக்கத்தக்க சக்தியின் உப துறைகள் தொடர்பாக மேலதிக தரவுகளை அரசாங்கத்திற்கு வழங்கல் |
| | 2013 – 2017 காலத்திற்குரிய மின்சாரத் தேவை/கேள்வியினை முன் கணிப்பிடல் | • விநியோக உரிமம் பெறுனரிடமிருந்து பெறப்பட்ட உள்ளீடுகள்<br>• சக்தி மற்றும் எரிசக்தி தொடர்பான தேவைகளை முன் கணித்தல் | • சக்தி துறை முதலீடுகள் தொடர்பாக தகவல்களை வழங்கல்<br>• 2013 – 2017 இற்கான சக்தி பராமரிப்பு |

| | | | |
|---|---|---|---|
| **சக்தி பாதுகாப்பு, சக்தி பேணல், செயல்திறன் மிக்க பாவனை மற்றும் சூற்றாடல் தொடர்பான அக்கரையினை உறுதிப்படுத்தல்.** | பாவனையாளர்களின சக்தி நுகர்வு முறைகள் ஒழுங்குப்படுத்தலில் உதவுதல்: ஸ்மாட் அளவிடல் கோட்பாட்டின் பயன்பாடு தன்மை தொடர்பான மதிப்பிடல். | • ஸ்மாட் அளவிடல் தொழில் நுட்பத்தினை பின்பற்றுவதற்கான மதிப்பீடு | • தொழில் நுட்பத்தின் நிதி தாக்கத்தினை மதிப்பிடுவதற்கு உதவுதல்<br>• பாவனையாளரின் மின் நுகர்வு முறையினை ஒழுங்குப்படுத்துவதில் உதவுதல்<br>• சக்தி இழப்பினை குறைத்தல் |
| | சிறிய தொழிற்துறை நுகர்வோரின் மின் செயற்திறனை அதிகரித்தல் | • முன்னோடி கற்கையினை மேற் கொள்ளல் | • தொழிற்துறை பாவனையாளர் மின்சாரப் பேணுகையில் செயற்படல்<br>• நாட்டின் நீண்டகால சக்தி பாதுகாப்பிற்கு உதவுதல் |
| | ஓப் கிறிட் சிறிய நீர் வலு திட்டங்களில் சிறந்த நடைமுறைகளைப் பேணல் | • கருத்து களத்தினை தொடர்ச்சியாக நடத்தல் | • கிராம புற சமூகங்களிக்கு மரபு ரீதியற்ற மீள் புதிப்பிக்கத்தக்க சக்தி திறன் மிக்க பயன்பாடு தொடர்பில் தரவுகளை வழங்கல்<br>• தேசிய கிறிட(மின் வலையமைப்பு) மின் தேவையினை/கேள்வியினை குறைத்தல் |
| | மரபு ரீதியற்ற மீள் புதிப்பிக்கத்தக்க சக்தி நிலையஙகளிலுள்ள ஊழியர்களின் இயக்க செயற்பாடு மற்றும் பராமரிப்பு தொடர்பிலான பாதுகாப்பினை உறுதிச் செய்தல் | • பாதுகாப்புத் திட்டங்கள் மற்றும் உடன் பாடுகள் தொடர்பிலான 20 மரபு ரீதியற்ற மீள் புதிப்பிக்கத்தக்க சக்தி நிலையஙகளில் மேற்பார்வை | • மரபு ரீதியற்ற மீள் புதிப்பிக்கத்தக்க சக்தி நிலைய ஊமியர்களின் பாதுகாப்பினை மேம்படுத்தல்<br>• நீண்ட காலத்திற்கான மின் பாதுகாப்பு மற்றும் பேணல் முயற்சிகளை உறுதிசெய்தல் |
| | மின் பிறப்பாக்கம் தொடர்பில் தரங்களை அமைத்தல் | • முக்கியமான சர்வதேச செயற்திறன் சுட்டி காட்டிகளை அடையாளம் காணல்<br>• உரிமம் பெறுனர்களுக்கான பட்டறைகளை நடாத்துதல் | • உரிமம் பெறுனர் தமது செயற்பாடுகளை கண்காணிக்க முடிதல்<br>• தற்போது செயல்திறனற்ற மற்றும் இழப்பினை கொண்ட பகுதிகளை அடையாளம் காணல்<br>• நாட்டின் நீண்டகால சக்தி பாதுகாப்பு |
| **மின் வழஙகளின் போது, போதிய தரம் மற்றும் நம்பகத் தன்மையினை உறுதி செய்தல்.** | மின் வழஙகளின் நம்பகத் தன்மை, மற்றும் தரத்தினை உறுதிப்படுத்தல்: கிறிட் கோவை மற்றும் வலுவிடுதற் குழு | • கிறிட் கோவை மற்றும் வலுவிடுதற் குழுவினை உருவாக்கள் | • பாதுகாப்பான, நம்பகத்தன்மை மற்றும் செயற்திறனான மின் வழஙகல் |
| | பொருத்தமான தரங்களை உருவாக்குதல் மற்றும் மின் விநியாக செயற்பாட்டினை கண்காணித்தலும் | • மீளாய்வு குழுவினை உருவாக்கம் | • தராதரங்களின் (தர நிலை) உருவாக்கத்தின் போது அக்கரையுடையத் தரப்பினர் மற்றும் உரிமம் பெறுனரிடையே விளக்கவுரையினை பெறல் |
| | மின் விநியோக உரிமம் பெறுனர்கள் (இ.மி.ச மற்றும் இ.மி.த.க) செயற்திறன் தொடர்பிலான கண்காணிப்பு | • செயற்திறன் தராதரங்களை கண்டறிதலும் குறிப்பிடலும் | • பாவனையாளர் மற்றும் சேவை வழஙகுநரிடையேயான சர்ச்சைகளை நீக்குதல்<br>• பாவனையாளர்களின் ஆர்வங்களினை பாதுகாத்தலில் உதவுதல் |
| | தற்போதுள்ள மின் வழஙகளின் தரம் மற்றும் நம்பிக்கைத் தன்மையினை அதிகரித்தல் | • தேசிய வழஙகளின் மீடிறன், மின்னழுத்தம் மற்றும் ஒத்திசைவு உள்ளடக்கங்களை அளவிடுதல் | • தற்போதுள்ள மின் வழஙகளின் நம்பகத் தன்மை மற்றும் தரத்தினை மேம்படுத்தல்<br>• புதிய தொழிற்துறை முதலீடுகளை ஊக்குவித்தல் |
| | உரிமம் பெறுனரின் வேலை தளத்தில் மின் பாதுகாப்பு | • பாதுகாப்பு செயன்முறையினை கண்காணித்தல்<br>• பொது அறிக்கையினை தயாரித்தல் | • மின் அபாயங்களை குறைத்தல்<br>• மின் விபத்துக்களை குறைத்தல் |
| | மின் பட்டியல் கட்டணங்களுக்கான நுகர்வோர் பாதுகாப்பினை உறுதிப்படுத்தல் | • 13 வருடங்களுக்கு மேற்பட்ட பழைமையான மின் மானிகளின் செயற்பாட்டினை முறையற்ற மாதிரியினுடாக சோதனை<br>• 13 வருடத்திற்கு மேல் சேவையிலுள்ள மின் மானியின் மாற்றுகை தேவை தொடர்பில் தீர்மானத்திற்கான ஆய்வு | • மின் பட்டியல் கட்டண மதீப்பிட்ல் நம்பகத்தன்மையினை அதிகரித்தல் |

| | | | |
|---|---|---|---|
| **மின்சாரம் தொடர்பில் நபர்கள் மற்றும் சொத்துக்களின் பாதுகாப்பினை உறுதி செய்தல்** | மின் பாதுகாப்பு தொடர்பிலான விழிப்புணர்வு | • டி.வி.டி இனை தொகுத்தல்<br>• டி.வி.டி இனை பொது மக்கள் மற்றும் பாடசாலைகளுக்கு கிடைக்கப் பெறச் செய்தல் | • பொது மக்கள் மற்றும் இளம் சமூகத்தினரிடையே மின் பாதுகாப்பு கற்கை.<br>• பாடசாலை அமைப்பிடையே மின் பாதுகாப்பு தொடர்பிலான விழிப்புணர்வினை அதிகரித்தல்<br>• இலங்கையிலுள்ள பாடசாலைகளின் மின் தொடர்பிலான விபத்துக்களை குறைத்தல்<br>• மின் தாக்கம் தொடர்பிலான சமூக பொருளாதார விளைவுகளைத் தடுத்தல் |
| | மின் பாதுகாப்பு வழிகாட்டியின் உருவாக்கம் | • தொழில்நுட்ப வழிகாட்டியினை தயாரித்தல்<br>• வழிகாடடியினை குறிப்பிட்ட கால இடைவெளியினுள் புதுப்பித்தல் | • மின் பாதுகாப்பு வழிக்காட்டி தொடர்பிலான விழிப்புணர்வினை அதிகரித்தல்<br>• நுகர்வோர் பாதுகாப்பினை உறுதிப்படுத்தல் |
| | வைத்தியசாலைகளுக்கான மின் பாதுகாப்பு வழிக்காட்டி | • 12 ஆதார வைத்தியசாலைகளின் மேற்பார்வை<br>• வைத்தியசாலைகளில் வழிகாட்டியினை கிடைக்கப் பெற செய்தல் | • வைத்தியசாலைகளில் இடம் பெறும் மின் தொடர்பிலான விபத்துக்களின் குறைப்பு<br>• மின் அமைப்பின் மேம்படுத்தல் சுகாதாரத் துறையின் முக்கிய தேவையாகும்<br>• வைத்தியசாலைகளின் மின் நிறுவல்களை மேம்படுத்தல்.<br>• மேம்படுத்தப்பட்ட பராமரிப்பு செயல்முறைகளினூடாக அமைப்பின் செயல்திறன் மற்றும் நம்பிக்கைத் தன்மையினை அதிகரித்தல்.<br>• வைத்தியசாலைகளின் மின் பாதுகாப்பு தொடர்பில் நிர்வாகப் பொறுப்புக்களை முன்னிலைப்படுத்தல். |
| | பாடசாலைகளுக்கான மின் வழிக்காட்டிகள் | • மின் பாதுகாப்பு வழிக்காட்டியின் தயாரிப்பு<br>• மூன்று மொழிகளிலும் இவ் வழிகாட்டிகளை அச்சிடல்<br>• பாடசாலை அமைப்புக்களிடையே பகிர்ந்தளித்தல் | • பாடசாலைகளில் மின் பாதுகாப்பு தொடர்பிலான விழிபர்புணர்வினை அதிகரித்தல்<br>• இலங்கையிலுள்ள பாடசாலைகளின் மின் விபத்துக்களை குறைத்தல்<br>• மின் தாக்கம் தொடர்பிலான சமூக பொருளாதார விளைவுகளை தடுத்தல். |
| | மின் தாக்கம் மற்றும் உயிராபத்தான மின் விபத்துக்கள் தொடர்பிலான மரணவிசாரனைகளுக்கான நடைமுறைகளை தயாரித்தல் | • மரண விசாரணைகளுக்கான உத்தீகபூர்வ நடைமுறைகளின் உருவாக்கம் | • ஆர்வமுள்ள தரப்பினருக்கு மின் விபத்துக்களின் மூல காரணங்களை கண்டறிதில் உதவுதல்.<br>• பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு நியாயமான நஷ்டஈட்டினை வழங்கவதற்கான நடைமுறையினை அறிமுகப்படுத்தல்<br>• பொறுப்பான தரப்பினருக்கு எதிராக நாட்டின் சட்ட கட்டமைப்பிற்கு அமைய நடவக்கையினை எடுத்தல்.<br>• மின் அமைப்பில் காணப்படும் பாதுகாப்பு குறைப்பாடுகளை ஈடு செய்ய தற்போதுள்ள விதிமுறைகளுக்கான திருத்த நடவடிக்கைகளை மேற் கொள்ளல். |

| | | | |
|---|---|---|---|
| **அக்கரையுடையத் தரப்பினர் மற்றும் உரிமம் பெறுனர்களுக்கு மின் துறை தொடர்பான தகவல்களை பரப்புதல்.** | மின் விபத்துக்கள் மற்றும் நிகழ்வுகள் தொடர்பான தரவு தளத்தினை உருவாக்குதல் | • தரவு தளத்தினை உருவாக்கல்<br>• தரவுகளை தொழிற் துறைக்கு கிடைக்கப் பெற செய்தல் | • திறன் மிக்க ஒழுங்கு விதிகளுக்கான பொறி முறையினை உருவாக்கல். |
| **போட்டித் தன்மையினை ஊக்குவிக்க, மின்சார சந்தை கட்டமைப்பினை உருவாக்குதல்.** | புதிய பிறப்பாக்க திட்டங்களுக்கான ஒப்பந்த புள்ளி நடைமுறையினை உருவாக்குதல் | • கொள்முதல் மீதான நிபுணத்துவம் ஆலோசகர்களிடமிருந்து பெறப்படும்<br>• பொருத்தமான கொள்முதல் வழிக்காட்டி உருவாக்கப்படல்<br>• வரைபு மட்டத்திலான ஒழுங்குவிதி முறை தயாரிக்கப்பட்டு பாராளுமன்றத்தின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படும். | • மின் துறையின் செலவு குறைந்த முதலீடுகளின் ஊக்குவிப்பு<br>• நீண்ட கால குறைவான நுகர்வோர் மின் கட்டணங்கள்<br>• மின் வழங்களின் நம்பிக்கைத் தன்மையினை மேம் படுத்தல் |
| **சந்தையிலுள்ள கீழ் நிலைப்படுத்தப்பட்ட பெற்றோலிய பொருட்களின் ஒழுங்குப்படுத்தல்.** | பெற்றோலியத் துறை தொடர்பான விழிப்புணர்வினை அதிகரித்தல் | • உரிமம் பெறுனர் மற்றும் அக்கறையுடைய தரப்பினருக்கு பட்டறையினை நடாத்துதல் | • துறையின் ஒழுங்குப்படுத்தல் தொடர்பான விழிப்புணர்வு அதிகரித்தல்.<br>• சந்தையிலுள்ள பொருட்களின் தரம் தொடர்பான மேம்படுத்தப்பட்ட தகவல்கள் |
| | இ.பொ.ப.ஆ இனால் ஒழுங்குப்படுத்தலுக்குரிய செயற்பாடுகளை கண்டறிதல் | • வடிவமைப்பினை உருவாக்குதல் | • திட்டத்தினை முன்னெடுப்பதற்குறிய விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை கண்டறிய உதவுதல் |
| | கீழ் நிலைப்படுத்தப்பட்ட பொற்றோலியத் துறையின் விண்ணப்ப செயல் முறைகளை ஒழுங்குப்படுத்துதல் | • விலைக் கட்டுப்பாட்டின் கீழ் பொற்றோலிய பொருட்களை அடையாளம் காணல்<br>• வர்த்தகமானித் தகவல்கள் | • அக்கரையுடையத் தரப்பினரின் ஆர்வத்தினை பாதுகாத்தல். |
| | பொற்றோலிய பொருட்களின் கொண்டு செல்லல் மற்றும் சேமிப்பு தொடர்பில் விதிமுறைகளை உருவாக்கல் | • விதிகள் மற்றும் நிபந்தனைகளை குறிப்பிடல்<br>• தகவல்கள் பொது மக்களுக்கு கிடைக்கப்பெறல் | • நபர்கள் மற்றும் சொத்துக்களை விபத்துகளிலிருந்து பாதுகாத்தல் |
| | பொற்றோலிய பொருட்களின் விலையினை ஒழுங்குப்படுத்தலில் விலை வழிமுறையினை உருவாக்கல் | • செய்முறைகளை உருவாக்கல் | • பாவனையாளரின் ஆர்வம் பாதுகாக்கப்படல்<br>• உரிமம் பெறுனரின் செயற்பாடுகளுக்குறிய நிதியின் நம்பகத் தன்மையினை உறுதிப்படுத்தல் |

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல / My No. எப்பி/ஜே/பீயூசீ/எப்ஏ/2012   ඔබේ අංකය / உமது இல / No.   දිනය / திகதி / Date 2013 ஆகஸ்ட் 22

தலைவர்
இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு

இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

---

இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசோட்டக்கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2002 இன் 35 ஆம் இலக்க இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அதிகாரச்சட்டத்தின் 34 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம், ஒரு விபரமான அறிக்கை ஆணைக்குழுவின் தலைவருக்கு 2013 யூன் 13 ஆந் திகதி அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் ஆணைக்குழுவினால் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் 2012 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

கணக்காய்வில் கணிப்பீடு செய்யப்பட்டதன் பிரகாரம் மீளாய்வாண்டின் பணிக்கொடை ஒதுக்கீடுகள் ரூபா 2,080,272 தொகையாக இருந்த போதிலும் அது ரூபா 1,749,232 என கணக்கு வைக்கப்பட்ட காரணத்தினால் பணிக்கொடை ஒதுக்கீடுகள் ரூபா 331,040 தொகை குறைவாகவும், ஆண்டின் இலாபம் ரூபா 331,040 தொகை அதிகரித்தும் கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

2.2.2 விளக்கமளிக்கப்படாத வித்தியாசம்

கணனி மற்றும் அலுவலக உபகரணம், தளபாடமும் பொருத்தியும் மற்றும் மென்பொருள் போன்ற மூன்று நிலையான சொத்து விடயங்கள் தொடர்பாக 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களுக்கும் நிலையான சொத்துப் பதிவேடுகளுக்கும் இடையே முறையே ரூபா 892,519 தொகையும், ரூபா 2,009,952 தொகையும் மற்றும் ரூபா 92,822 தொகையும் ஆன வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

2.2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டத்தின் 120(அ) பிரிவு | ரூபா 546,440 தொகையான உழைக்கும் போதே செலுத்தும் வரியை அடுத்துவரும் மாதத்தின் 15 ஆந் திகதி வரை உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அனுப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) நிதிப்பிரமாணம் 341 | வருமான சேகரிப்பிற்காக பயன்படுத்தப்படுகின்ற பற்றுச் சீட்டுப் புத்தகங்களுக்காக அடியிதழ் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (இ) நி.பி.387 | 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான காசேட்டு மீதியை விஞ்சி ரூபா 1,437,745 கூட்டுத்தொகையான காசோலைகள் விநியோகிக்கப்பட்டிருந்தன. |
| (ஈ) நி.பி.756(5) | 2012 ஆம் ஆண்டிற்காக குறித்த மாதிரிப் படிவம் பயன்படுத்தப்பட்டு பொருள் மெய்மையாய்வு முறையாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (உ) 2000 சனவரி 31 ஆந் திகதிய பீஎப்/பீஈ/6 ஆம் இலக்க அரச பொது நிதிச் சுற்றுநிருபத்தின் 24 ஆம் பந்தி | முன்னைய வருடங்களைப் போன்றே மீளாய்வாண்டிலும் உத்தியோகத்தர்களினால் செலுத்த வேண்டிய ரூபா 665,579 கூட்டுத் தொகையான உழைக்கும் போதே செலுத்தும் வரி ஆணைக்குழுவின் நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தன. |
| (ஊ) 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐஜ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றுநிருபம் | கணனி மற்றும் உதிரிப்பாகங்கள் பதிவேடு உரிய பிரகாரம் நாளதுவரையாக்கப்பட்டிருக்க வில்லை. |

#### 2.2.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட பின்வரும் கொடுக்கல் வாங்கல்களுக்காக காண்பிக்கப்பட்ட சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஙெ) ஆணைக்குழுவினால் 2012 ஆம் ஆண்டில் கணக்கு வைக்கப்பட்ட ரூபா 160,470,441 பெறுமதியான 234 நாட்குறிப்புப் பதிவுகளுக்காக முறையான அங்கீகாரத்துடனான மூல ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஙை) வெளிநாட்டுப் பிரயாணம் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களில் பங்குபற்றிய உத்தியோகத்தர்களுக்கு இணைந்த மற்றும் அமையப் படிகளைக் கொடுப்பனவு செய்யும் போது உறுதிச்சீட்டில் பிரயாண விபரம், பிரயாணத்திற்காக எடுக்கப்பட்ட காலம் மற்றும் வீதக் கணிப்பீடு, விமானப் பயண விபரம், வெளிநாட்டு அனுசரணைகளை வழங்குதல் போன்ற அடிப்படை விபரங்கள் எதுவும் உள்ளடக்கப்படாது செலுத்தப்பட்ட மொத்தத் தொகை மாத்திரம் குறிப்பிடப்பட்டிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்காக ஆணைக்குழு நிதியத்தின் செயற்பாடுகளிலிருந்து ரூபா 29,967,560 தொகை செலவினங்களை விஞ்சிய வருமான மிகையாக இருந்ததுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான செலவினங்களை விஞ்சிய வருமான மிகை ரூபா 55,978,423 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் நிதிசார் விளைவுகளில் ரூபா 26,010,863 தொகையான குறைவினைக் காணக்கூடியதாக இருந்தது. இக்குறைவுக்கு முன்னைய ஆண்டினை விட மீளாய்வாண்டிற்கான செலவினம் ரூபா 47,669,634 இனால் அதிகரித்திருந்தமை தாக்கமளித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

**4.1 செயலாற்றுகை**
பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2012 ஆம் ஆண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தில் 7 பிரதான செயற்பாடுகளின் கீழ் நிறைவேற்றவேண்டிய 66 செயற்பாடுகள் காணப்பட்ட போதிலும் 2012 திசெம்பர் 31 அந் திகதி வரையிலும் அதில் 32 செயற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் நிலையில் காணப்பட்டன.

(ஆ) 2012 ஆம் ஆண்டில் ஆணைக்குழுவிற்குக் கிடைத்த 466 பொதுமக்கள் முறைப்பாடுகளில் 425 இற்கு தீர்வுகள் வழங்கப்பட்டிருந்ததுடன் மேலும் 41 முறைப்பாடுகள் தொடர்பாக 2012 திசெம்பர் 31 அந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2002 இன் 35 ஆம் இலக்க இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அதிகாரச்சட்டத்தின் 14(2)(1) ஆம் பிரிவின் கீழ் மின்சாரம், நீர், பெற்றோலியக் கைத்தொழில் தொடர்பான ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகளுக்காக 2004 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் இறுதிவரை மீண்டெழும் செலவினமாக ரூபா 356,177,653 தொகையும் மூலதனச் செலவினமாக ரூபா 61,383,125 தொகையும் செலவிடப்பட்டிருந்தன. 2009 இன் 23 ஆம் இலக்க இலங்கை மின்சார அதிகாரச்சட்டத்தின் பிரகாரம், மின்சார கைத்தொழில் ஒழுங்கமைப்பு நடவடிக்கைகள் 2009 ஏப்ரல் 08 ஆம் திகதி முதல் செயற்படுத்தப்படுவதுடன் நீர் மற்றும் பெற்றோலியக் கைத்தொழில் தொடர்பாக உரிய அதிகாரச்சட்டங்களின் திருத்தம் அங்கீகரிக்கப்பட்டிராமையால் அக் கைத்தொழில்களின் ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது. இருந்த போதிலும் அமைச்சரவையின் தீர்மானத்தின் பிரகாரம் பெற்றோலியக் கைத்தொழில் தொடர்பான ஒழுங்குபடுத்தல் செயற்பாடுகள் ஆணைக்குழுவிற்குக் கையளிக்கப்பட்டிருந்தது.

(ஈ) 2009 இன் 20 ஆம் இலக்க இலங்கை மின்சார அதிகாரச்சட்டத்தின் 9 ஆம் பிரிவின் பிரகாரம் மெ.வோ 25 இற்கு மேற்பட்ட இயலளவில் மின் உற்பத்தி செய்யப்படுகின்ற 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் பிரகாரம் உருவாக்கப்பட்ட அரசாங்கத்தின் பங்கு மூலதனம் 50 சதவீதத்தை விடக் குறைவான கம்பனிகளுக்கு மின் உற்பத்திக்காக அனுமதிப்பத்திரம் வழங்கப்பட முடியாது. தற்போதும் மெ.வோ 25 இற்கு மேற்பட்ட இயலளவில் மின் உற்பத்தி செய்யப்படும் 06 கம்பனிகளுக்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிராததுடன் அக்கம்பனிகளினால் உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் இலங்கை மின்சார இயலளவிற்குச் சேர்க்கப்பட்டிருந்தது. இந்நிலைமையினைச் சரிசெய்வதற்கு 2012 ஆம் ஆண்டின் இறுதிவரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அக்கம்பனியின் தேவைகள் பூர்த்திசெய்யப்படாமையினால் அனுமதிப்பத்திரம் விநியோகிக்க முடியாதிருந்ததாக தலைவர் அறிவித்திருந்தார்.

(உ) மசகு எண்ணெய் சந்தை நடவடிக்கைகளில் ஈடுபடும் 14 கம்பனிகள் பதிவு செய்யப்பட்டிருந்ததுடன் பட்டியல் பெறுமதியில் 0.5 சதவீத மாற்று பதிவுக் கட்டணங்களில் ரூபா ஒரு மில்லியனை விஞ்சிய கொடுக்கல் வாங்கல்களை 11 கம்பனிகள் மாத்திரமே செய்திருந்தன. அதன் பிரகாரம் 2012 ஆம் ஆண்டில் 11 கம்பனிகளிலிருந்து மாற்று பதிவுக் கட்டணமாக ரூபா 32,704,473 தொகை ஆணைக்குழுவிற்குக் கிடைத்திருந்தது.

**4.2 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**
ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கான (நுவுகு) கொடுப்பனவுகள் தாமதமானமையால் ரூபா 8,571 தொகை மிகைக் கட்டணமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

**5.1 கணக்காய்வு குழு**
அரச பொது முயற்சிகள் திணைக்களத்தின் 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 7.4.1 ஆம் பந்தியின் பிரகாரம் ஆண்டிற்கு ஆகக் குறைந்தது 4 கணக்காய்வுக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டிய போதிலும் 2012 ஆம் ஆண்டிற்காக ஆணைக்குழுவினால் 02 கூட்டங்கள் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தன.

**5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு**
நிதியேற்பாட்டை விஞ்சிய செலவினங்கள்
2012 ஆம் ஆண்டின் 04 செலவின வகைகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதியேற்பாட்டை விஞ்சி ரூபா 1,137,023 தொகையான செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்
கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது ஆணைக்குழுவின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) முதலீடு செய்தல்
(ஆ) வருமானக் கட்டுப்பாடு
(இ) நிலையான சொத்துக்கள் கட்டுப்பாடு



எச்.ஏ.எஸ்.சமரவீர
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்

ශ්‍රී ලංකා මහජන උපයෝගිතා කොමිෂන් සභාව
இலங்கைப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு
PUBLIC UTILITIES COMMISSION OF SRI LANKA

ඔබේ අංකය / உமது இல / Your No. } PUCSL/FIN/AGD/02

අපේ අංකය / எமது இல / Our Ref No. }

19.06.2013
கணக்காய்வாளர் அதிபதி
கணக்காங்வாளர் அதிபதி திணைக்களம்
கொழும்பு 07

இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் 2012 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 31 முடிவடைந் ஆண்டிற்கான நிதிக் கூற்றுகள் தொடர்பில் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)ஈ பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் அதிபதியினால் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுகள் பற்றிய அறிக்கை

---

தங்களால் 2013 ஆம் ஆண்டு ஆடி மாதம் 13 ஆம் திகதி எமக்க அனுப்பி வைக்கப்பட்ட உமது இலக்கம் SB/J/PUC/FA/2012 என்ற வரவு அறிக்கைத் தொடர்பான எனது கருத்துக்களை தங்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகின்றேன்.

அ. நிதி கூற்றுகள் தொடர்பான கருத்துக்கள்

i. கணக்கீட்டுக் குறைப்பாடுகள்

ii. ஆறு (06) ஊழியர்களினது பணிக்கொடையானது, வாழ்கைச் செலவு கொடுப்பனவுகளை கணக்குகளில் கவனத்தில் கொள்ளாது கணிப்பிடப்பட்டது. இதனால் பணிக் கொடையின் ஒதுக்கீடானது ரூபாய் 331,040 குறைவான பிரதிபலிப்பினை கணக்குகளில் காட்டியது.

iii. தெளிவற்ற மாற்றங்கள்

அ). கீழே விபரிக்கப்பட்ட தவறுகள் மென் பொருள் வேறுபாடுகள் காரணமாக ஏற்பட்டது.

1. கீழ் வருவன நிலையான சொத்துக்களின் பதிவேட்டில் சேர்க்கப்படவில்லை

| | |
|---|---|
| சைமன் டெக் அன்டிவைரஸ் மென்பொருள் | 58,800.00 |
| கியூ.பி புரோ 2011 பாவனையாளர் அனுமதிப்பத்திரம் | 34,272.00 |
| | 93,072.00 |
| 2. மென் பொருள் செலவு ரூபாய் 52,250 நிலையான சொத்து பதிவேட்டில் ரூபாய் 52,500 ஆக பதியப்பட்டுள்ளது. | (250.00) |
| | 92,822.00 |

கணனிகள் மற்றும் அலுவலக உபகரணங்களின் நிலையான சொத்துக்களின் பதிவேடு மற்றும் பேரேடுகளின் சமநிலை அற்ற தன்மையினை (வேறுபாட்டினை) அறிய முறையான நவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. எதிர் வரும் காலங்களில் இத்தகைய முரண்பாடுகளை நிவர்த்தி செய்ய உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

ஆ). 2011 ஆண்டில் தவறுதலாக ரூபா 769,400 திரண்ட நிதி கணக்கில் வரவு வைக்கப்பட்டு ரூபா 769,400 பணிக்கொடை கணக்கில் செலவு வைக்கப்பட்டு பின்னர் திருத்தப்பட்டது. மேலும், ரூபா 3,675 முன்னை ஆண்டிலிருந்து திரண்ட நிதி கணக்கிற்கு சரிசெய்யப்பட்டு ரூபா 119,749,761.89 மீதி முன் கொண்டு வரப்பட்டது.

இ). அடையாளம் கண்டறியாத வரவு மீதியான ரூபா 754.00 இல் ரூபா 600.00 தொடர்பாடல் செலவுகளின் மீள் கொடுப்பனவாகவும், மீதி ரூபா 154.00 முன்னைய ஆண்டின் வருமானத்தின் ஒரு பகுதி என்பதனால் மேலதிக கிடைக்கப் பெற்ற வருமானமாக கருதப்பட்டது. இது திரண்ட நிதிக் கணக்கில் சரிசெய்யப்பட்டது.

### 2.2.4 விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கப்பாடு அல்லாதவை

அ). நி.ஒ 135 கொடுப்பனவுகளின் செயற்பாடுகள்
நிதி (கணக்கு) பிரிவில் இரு முகாமைத்துவ உதவியாளர்கள் மட்டுமே உள்ளபடியினால், கடமைகளின் ஒதுக்கீடுகள் கணக்காய்வு கேள்விகளுக்கேற்ப அமைந்துள்ளது. பணக் குறிப்பேடானது, கணக்கீடு தொகுப்பில் (மென்பொருள்) பெறப்படுவதனால், பொருத்தமான உத்தியோகபூர்வ கணக்கீடு தொகுப்புடன் ஒப்பிடுதல் நிகழ்த்தப்படுகின்றது.

ஆ). நி.ஒ 138 (1) செலவு விபரங்களைத் தயாரித்தல்
கணக்காய்வு அறிவுறுத்தல்களுக்கு அமைய, கட்டண உறுதி சீட்டுகளில் செலவுகளின் விபரங்களை உள்ளடக்குவதற்குரிய தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இ). நி.ஒ 245 சான்றளிப்பு இல்லாமல் உறுதிச் சீட்டிற்கு பணம் செலுத்துதல்.
மட்டுப்படுத்தப்பட்ட கணக்கீடு ஊழியர்களின் தொழிற்பாடுகள் நிமித்தம் இவ்வாறான சர்ச்சைகள் எழுந்தாலும், எதிர்காலங்களில் இவற்றை நிவர்த்தி செய்ய உரிய நடவக்கைகள் எடுக்கப்படும்.

ஈ). நி.ஒ 341 ரசீதுகளுக்கான ஒரு பதிவேட்டினை பராமரித்தல்
2013 ரசீதுகளுக்கான ஒரு பதிவேட்டினை பராமரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்

உ). நி.ஒ 342 ரசீது புத்தகங்களுக்கான உரிமை
நிதி பிரிவின் பிரதி பணிப்பாளர் மேற்பார்வையின் கீழ் வழங்கப்பட்ட மற்றும் பெறப்பட்ட ரசீதுகளுக்கான பதிவேடு ஒன்று பராமரிக்கப்படுவதற்கான உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

ஊ.) நி.ஒ 387 பணக் குறிப்பேட்டின் வங்கி மேலதிக பற்று
பணக் குறிப்பேட்டில், வங்கி மேலதிக பற்றாக பதியப்பட்டிருந்தாலும் இது வங்கி கணக்கின் வங்கி மீதியினை மீறவில்லை. இவ்வாறான நிலைமைகள் எதிர்காலங்களில் எற்படாதவாறு உறுதி செய்ய உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

எ). நி.ஒ 756(5) பொருட்களின் ஆற்றிற்கான தேவையான வடிவமைப்பினை உபயோகித்தல்
நிதிக் கணக்கில் பிரகடனப்படுத்தப்பட்ட ஆதனங்களை தெளிவாக அடையாளம் காண்பதற்காக ஆய்வு கணக்கெடுப்பு ஒன்று முன்னெடுக்கப்படும். இதன் போது ஆய்விற்கு பொருத்தமான வடிவமைப்புக்கள் உருவாக்கப்படும்.

ஏ). வருமானம் ஈட்டப்படும் போது வரியினை செலுத்துதல்
பொது நிறுவனங்களுடன் நடாத்தப்பட்ட கலந்துரையாடலின் படி, திறைசேரி கீழ்வரும் நடவடிக்கைளை மேற்கொள்ளமாறு அறிவுறுத்தியுள்ளது.

(i) வருமானம் ஈட்டப்படும் போது வரியினை செலுத்துதலானது அடுத்த மாதம் 15 ஆம் திகதிக்க முன்னர் அனுப்பிவைக்கப்படல் வேண்டும்

(ii) முத்திரை தீர்வை வரியானது, உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு ஒவ்வொரு மூன்று மாதங்களுக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்

### 2.2.5 கணக்காய்வு சான்றுகள்

(i) ஊதியம், முத்திரை தீர்வை, தவணைன் கட்டணங்கள் மற்றும் சிறிய செலவு கணக்குகள் என்பன பொதுப் பதிவேடுகளில் பிரதிபலிக்கின்றன. ஊதியங்களின் பற்று சீட்டுகளினூடான செலுத்துகைக்கான அனுமதி பெறப்பட்டுள்ள அதே வேளை ஏனைய பொது பதிவுகளை பொது பற்றுச்சீட்டுகளினூடாக முன்னெடுப்பதற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதுடன் அதற்கு தேவையான அனுமதிகளும் கோரப்பட்டுள்ளன.

